எழுப்புதல்

டாக்டர். ஏ.பாக்கியமணி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

எழுப்புதல்

டாக்டர் ஏ. பாக்கியமணி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.டி., பிஎச்.டி.

தலைவர்
எழுப்புதல் திருப்பணி
நாகர்கோவில் - 629 004

இயக்குநர்
குட்ஷெப்பர்டு சமுதாயக் கல்லூரி
நாகர்கோவில் 629 004

செல்லம்மாள் பாக்கியமணி

சுதன் பதிப்பகம்

27, அழகு சிங்கம் தெரு
பொன்னப்ப நாடார் நகர்
நாகர்கோவில் 629 004
தொலைபேசி : 04652 - 35763

நூல் விவர அட்டவணை

நூல்	:	எழுப்புதல்
வகை	:	கிறிஸ்தவ பக்தி இலக்கியம்
ஆசிரியர்	:	டாக்டர் ஏ. பாக்கியமணி 27, அழகு சிங்கம் தெரு பொன்னப்ப நாடார் நகர் நாகர்கோவில் 629 004 ☎ : 04652 - 35763
உரிமை	:	ஆசிரியர்க்கு
பதிப்பகம்	:	சுதன் பதிப்பகம் நாகர்கோவில் 629 004
முதற்பதிப்பு	:	சனவரி 2001
படிகள்	:	2000
பக்கம்	:	102 + VIII = 110
அளவு	:	19 x 12.5
தாள்	:	10.6 கிலோ கிரீம்வோவ்
எழுத்து	:	10.5 புள்ளி
அட்டை	:	அட்டைக்கட்டு, லேமினேசன்
நூலகப் பகுப்பு எண்	:	Q6:3
அச்சிட்டோர்	:	சிந்து ஆப்செட் அச்சகம் செட்டிகுளம் சந்திப்பு நாகர்கோவில் 629 001 ☎ : 24061
அன்பளிப்பு	:	ரூ. 25

EZHUPPUTHAL
By
Dr. Y. PACKIA MONI, M.A., M.Phil., B.D., Ph.D.

எந்தன் மகனே சாலேம் சுதனே
உந்தன் நினைவாய் என்றும் இருந்தே
தந்தேன் எழுப்புதல் நூலும் இன்றே
விந்தை மைந்தன் விசையடி நின்றே



பா. சாலேம் சுதன், பி.ஏ.,
(1963 - 1993)

JESUS REDEEMS

Nalumavadi - 628 211, Thoothukudi Dt., S.India.
Phone : 04639-35305, 35315 , E-mail:jredeems@vsnl.com
Fax : 04639-35415, Visit us at http:11www.jesusredeems.com

வாழ்த்துரை

பூமியில் அக்கினியைப் போட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன் லூக்கா 12:49.

உலகத்திற்கு இன்றைய தேவை ஒரு மிகப் பெரிய 'எழுப்புதல்', கிறிஸ்தவ உலகத்திலும் ஒரு எழுப்புதல் கட்டாயம் தேவையாய் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அப்போஸ்தலர்கள் காலத்தில் ஒரு பெரிய எழுப்புதல் உண்டானது. பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்ட பேதுருவும், யோவானும் முழு தைரியத்தோடு தேவ வசனத்தைப் பிரசங்கித்து, அற்புதங்களைச் செய்து, அனுதினமும் இரட்சிக்கப்பட்டவர்களைச் சபைகளில் சேர்த்துக் கொண்டார்கள் என்று வேதத்தில் பார்க்கிறோம்.

இன்றைக்கு எல்லா மனிதருக்கும் ஒரு எழுப்புதல் தேவையாய் இருக்கிறது. இப்புத்தகத்தின் ஆக்கியோன் முனைவர் பாக்கியமணி அவர்கள் ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து, தேவன் தமக்குக் கற்றுக் கொடுத்ததை மிகத் தெளிவாகச், சிறப்பாக எளிய நடையில் யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் 'எழுப்புதல்' என்னும் இப்புத்தகத்தில் எழுதியுள்ளார்கள்.

உலகத்திற்கு எழுப்புதல் தேவையெனில் முதலாவது மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு உயிர்மீட்சி வரவேண்டும். அதன்பின்னர் எழுப்புதல் குடும்பத்திலும், திருச்சபையிலும், நாட்டிலும் பரவி உலகிற்கு வரும் என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்புத்தகத்தின் ஆக்கியோன் பேராசிரியர் டாக்டர் ஏ. பாக்கியமணி அவர்களை நான் கடந்த 22 ஆண்டு காலமாக நன்கு அறிவேன். என் ஆரம்ப கால ஊழியத்தில் நானும் அவர்களும் இணைந்து நிறைவேற்றிய ஊழியங்களை என்னால் மறக்க இயலாது. அவர்களின் தேவ செய்திகள் எழுப்புதல் செய்தியாக அனேகருக்குப் புத்துணர்வு கொடுத்துள்ளது. அவர்களை ஒரு எழுப்புதல் பிரசங்கியார் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆரம்ப காலத்தில் இருந்தே எழுப்புதலைப் பற்றித் தெளிவாகவும், தைரியமாகவும் பேசிவரும் ஆக்கியோன் இப்புத்தகத்தின் மூலம் அவைகளை எழுத்துக்களில் படைத்துள்ளார்கள்.

இப்புத்தகத்தை வாசிக்கும் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அதிக ஜெபத்துடன் இப்புத்தகத்தை வாசியுங்கள். மெய்யாகவே உங்கள் வாழ்க்கையிலும் நிச்சயம் ஒரு எழுப்புதல் உண்டாகும். உங்கள் வாழ்க்கையில் ஒரு எழுப்புதல் ஏற்பட்டு, அது பரவி உலகத்தை அசைக்க உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

எழுப்புதலின் நாயகர் இயேசு உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாக!

உங்கள் சகோதரன்

(மோகன் சி லாசரஸ்)

நூலறிமுகம்

அடியேன் நாசரேத் நண்பர்களுடன் இணைந்து திருப்பணி யாற்றியபோது எமது திருப்பணிக் குழுவிற்கு அன்புச் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் சூட்டிய பெயர் எழுப்புதல் குழு என்பதாகும். எழுப்புதல் குழுவின் சார்பில் சகோதரரின் துணையுடன் கன்னியாகுமரி யின் எழுப்புதலுக்காக ஏழு ஆண்டுகள் திருப்பணி யாற்றினோம். ஓராண்டிற்கு ஒரு இடமாக ஐந்து இடங்களில் ஐந்து நற்செய்திப் பெருவிழாக்களும், மாதந்தோறும் நற்செய்திக் கூட்டங்கள், உபவாச செபம், விழிப்பு செபம், திருமறை ஆராய்ச்சி முதலியனவும் நடத்தினோம். அதன் பயனாக இன்று தலைவர்கள் நடுவில் குழப்பம் இருந்தாலும் குமரித் திருமண்டலச் சபைகளில் மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டிருப்பதைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நாங்கள் 1980ஆம் ஆண்டில் எழுப்புதல் திருப்பணியைத் தொடங்கிய நாள்முதல் எழுப்புதல் பற்றி ஒரு நல்ல நூல் எழுத வேண் டும் என்றதோர் உந்துதல் என் உள்ளத்தில் இருந்து கொண்டே இருந் தது. அந்த எண்ணத்தை இன்று நிறைவேற்றித் தந்த தேவனைத் துதிக்கிறேன். எழுப்புதல் பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் பல நூல்கள் வெளி வந்துள்ளன. அந்த ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு கோணத்தில் எழுப்புதல் பற்றிச் சொல்லிச் செல்லுவதைப் பார்க்கிறேன். யான் எழுப்பு தல் பற்றிய முழுப்பார்வையுடன் இந்நூலினைப் படைக்க முயன்று ஓரளவு வெற்றி பெற்றுள்ளேன் என்பதை நூலினைப் படிப்போர் உணர்வர்.

இந்நூலின் கருத்துக்களுக்கு அடிப்படையாய் அமைவது கிறிஸ் தவத் திருமறையே யாகும். எனினும் திருமறைக் கருத்துக்களை, விளக்க நூல்கள் மற்றும் ஆய்வு நூல்களின் கண்ணோட்டத்தில் அணுகுகிறேன். அத்துடன் எனக்கே உரித்தான வரலாற்று வரைவுகள் நூலில் மிகுதி யாக இடம் பெற்றுள்ளன. அவற்றுடன் வாழ்க்கை வரலாறுகள், உவமை கள், நடைமுறைக் கருத்துகள், சிந்தனை விளக்கங்கள் முதலியனவும் இடம் பெறுகின்றன. மொத்தத்தில் இந்நூல் ஒரு பயனுள்ள நூல். படித்துப் பயனடைந்து எழுப்புதல் பெறுக! எழுப்புதல் தருக!

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய என் அன்புச் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்களுக்கு மிகுந்த நன்றியுடையவனாய் இருக் கிறேன். அட்டைப்படம் அமைத்துத் தந்த அன்புச் சான்றோர் எஸ்.எல்.பி. மேல்நிலைப் பள்ளி ஓவிய ஆசிரியர் உயர்திரு. எச். பாலசுப்பிரமணிய

பிள்ளை, எனது அனைத்து முயற்சிகளிலும் அன்பாய் உதவி நல்கிய என் உடன் ஊழியர், எழுப்புதல் திருப்பணியின் இன்னிசைக் குழுத் தலைவர், பாடகர், ஆசிரியர், சகோதரர் தா. செல்வராஜ், அன்புப் போதகர் அருள்திரு. சி. ஜான் ஹென்றி ராஜ், அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி உதவிய கன்னங்குளம் சபைப் போதகர் இரத்தின வடிவு, குருசடி சபைப்போதகர் அருள்திரு எஸ். ஜாண்பிறைட், அறிவர் டேனியல் பாலஸ், அன்பு நண்பர் என். எம். எஸ். வட்டாரச் செயலாளர் பொறியாளர் பா. ஜாண்ரோஸ் வேதசிங், அச்சுப்படி திருத்தம் செய்து உதவிய அன்புத் தம்பி என்.எம்.எஸ். முன்னேற்றப் பணியாளர் ஜி. ஜெகநாதன், அன்பு மருமகன் ஆசிரியர் அ. பாக்கியமணி, உடனிருந்து உதவிய அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், ஊக்கமாய் செபித்து உதவிய குருசடி சபையின் என் உடன் பிறப்புகள் மற்றும் சிறப்பாய் அச்சிட்டு வழங்கிய சிந்து அச்சக உரிமையாளர் அன்புச்சகோதரர் ஜெயசேகர் ஆகிய அனைவருக்கும் என் அன்பு நன்றி.

மனந்திறந்து பேசுகிறேன். எனது டாக்டர் பட்ட ஆராய்ச்சி நூலான "வேத நாயக சாத்திரியார் படைப்புகள் - ஒரு திறனாய்வு" தமிழ் வளர்ச்சிக்காக வெளியிட வேண்டிய சிறந்த நூல்களில் ஒன்று என்று தேர்வு செய்யப்பட்டு அதன் வெளியீட்டிற்குத் தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்துள்ளது. நூலின் சிறப்புக் கருதி தமிழ்நாடு நூலகத்துறை அதனை வாங்கிப் பொது நூலகங்களுக்கு வழங்கி உள்ளது. நன்றி. அதன் இரண்டாம்பதிப்பு அச்சாகிக் கொண்டிருக்கிறது. அதனைப் படித்த அனைத்து இந்து சமய அன்பர்களும் நண்பர்களும், அறிஞர்களும் ஆன்றோர்களும் மனதாரப் பாராட்டு கின்றனர். ஆனால் அன்பிற்குரிய பல கிறிஸ்தவ அறிஞர்களிடம் இருந்து மட்டும் அத்தகைய பாராட்டு வரவில்லை?

இந்நூலினை நன்கு படியுங்கள். ஒரு பாடநூல் போல் பயிலுங்கள். குறைகள் கண்டால் மறைக்காமல் தெரிவியுங்கள். பிறரிடம் அல்ல, என்னிடம். நிறைகள் கண்டால் பாராட்டுங்களேன். இத்தகைய சிறந்த கிறிஸ்தவ நூல்கள் அடியேன் வழியாய் எழுதி வெளியிட ஆண்டவர் அருள் புரிந்தால் பயனுள்ளதாக அமையும் என்று நீங்கள் நம்பினால் உங்கள் பெயரால் ஒருநூல் வெளியிட உதவுங்கள். உடனே அடியானிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

இறையாசி உங்களில் நிறைந்திட வாழ்த்துகிறேன்.

உங்கள் நண்பன்

நாகர்கோவில்

12-01-2001

(ஏ. பாக்கியமணி)

பொருளடக்கம்

பக்கம்

1. எழுப்புதலின் இலக்கணம் 1
2. தனிவாழ்வில் எழுப்புதல் 8
3. குடும்ப வாழ்வில் எழுப்புதல் 31
4. திருச்சபையில் எழுப்புதல் 47
5. நாட்டில் எழுப்புதல் 62
6. உலகில் எழுப்புதல் 77
7. எழுப்புதலில் எனது பங்கு 96

பயன்பட்ட நூற்பட்டியல் 102

1. எழுப்புதலின் இலக்கணம்

1.1 முன்னுரை

இன்று கிறிஸ்தவர்கள் நடுவில் பரவலாகப் பேசப்படும் வார்த்தை எழுப்புதல் ஆகும். எழுப்புதல், எழுப்புதல் என்று சொல்லு கிறோம். ஆனால் எழுப்புதல் என்றால் என்ன என்று அறிந்திருக்கி றோமா? உற்சாகமாய்ப் பாடல் பாடி, ஆவியில் நிறைந்து, ஆரவார ஒலியுடன் செய்யப்படும் ஆராதனையே எழுப்புதல் என்கின்றனர் சிலர். ஆவிக்குரிய உபவாச செபம், தியான முகாம், நற்செய்திக் கூட்டம், அற்புத சுகமளிக்கும் மாபெரும் மக்கள் திரள் - இவற்றால் மக்கள் பெறுகின்ற மன அமைதி, ஆறுதல், அற்புத சுகம், மகிழ்வு, நிறைவு, விடுதலை முதலான இறையாசிகளே எழுப்புதல் என்கின்றனர் பலர். இவைதாம் எழுப்புதலா? இல்லை. இவை எல்லாம் எழுப்புதலின் வெளிப்பாடுகள். எழுப்புதலின் உண்மையான இலக்கணம் என்ன என்று எண்ணிப் பார்ப்போம்.

1.2 திருமறை கூறும் இலக்கணம்

எழுப்புதலை ஆங்கிலத்தில் ரிவைவல் (Revival) என்கிறோம்; எபிரேயத்தில் க்கயா (Chayah) என்பர். எழுப்புதலைக் குறிக்கும் இந்த எபிரேயச் சொல் பழைய ஏற்பாட்டில் பதினான்கு முறை வருகிறது. கிரேக்க மொழியில் எழுப்புதலைக் குறிக்கும் சொல் அனஸா (Anazao) ஆகும். இச்சொல் புதிய ஏற்பாட்டில் ஐந்து இடங்களில் காணப்படுகிறது. எழுப்புதலின் பொருளை அறிய அகராதியைப் புரட்டிப் பார்ப்போமா?

[redacted]. Webster's Dictionary, Revive என்பதற்கு "Return, Recall or recovery to life from death or apparent death" என்று பொருள் கூறுகிறது. அதாவது தெளிவாகக் காண்கின்ற மரணம் அல்லது மரணம் போன்ற நிலையிலிருந்து மீண்டும் உயிர்பெறுதல் என்பது இதன் கருத்தாகும். தமிழ் அகராதி எழுப்புதலுக்கு "மீண்டும் உயிர்பெற்று எழச் செய்தல்" என்று பொருள் தருகிறது.

கிறிஸ்தவத் திருமறையில் எழுப்புதல் என்ற தூய தமிழ்சொல் பயன்படுத்தப்பட வில்லை. அதற்கு இணையான புத்துயிர் (சங்கீதம் 85:6 திருவிவிலியம்) உயிர்ப்பித்தல் (சங்கீதம் 71:20, 80:18, 119:25, 37, 40, 88, 138:7, 143:11, ஏசாயா 57:15, ஓசியா 6:2, ஆபகூக் 3:2) உயிர்த்தல் (ஆதியாகமம் 45:27, லூக்கா 15:24, 32), பிழைத்தல் (நியாதிபதி 15:19, 1இரா. 17:22, ரோமர் 14:9), செழித்தல் (ஓசியா 14:7), எழுப்பி விடுதல் (2தீமோத்தேயு 1:6) முதலான சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இச்சொற்கள் எல்லாம் ஆங்கிலத் திருமறையில் Revive என்ற ஒரே சொல்லாய்க் குறிக்கப்பட்டுள்ளன.

பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). பாவம் செய்து இறைவனிடமிருந்து பிரிந்து (ஏசாயா 59:2) ஆவிக்குரிய மரண நிலையில் இருக்கும் மாந்தர் தமது பாவத்தை உணர்ந்து (ரோமர் 7:14-24), அதற்காகத் துக்கித்து (2கொரிந்தியர் 7:10), அவற்றை அறிக்கை செய்து (1யோவான் 1:9), இறைமக்களாக மாறிப் (யோவான் 1:12), புதுவாழ்வு (ரோமர் 6:4 திருவிவிலியம்) பெறுவதையே திருமறை எழுப்புதல் என்று கூறுகிறது. எனவே திருமறை கூறும் எழுப்புதல் புதுவாழ்வு எனலாம்.

இயேசு கூறிய உவமையில் இளைய மைந்தன் தன் தந்தையிடம் சண்டையிட்டுத் தனது பாகச் சொத்தை எல்லாம் பங்கிட்டு வாங்கி அவற்றை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு அயல்நாடு சென்று பாவ இன்பத்தில் வாழ்ந்து, பணத்தை எல்லாம் செலவிட்டுப் பன்றி தின்னும் தவிடு கூடக் கிடைக்காமல் அவதியுற்றுத், தந்தையைத் தேடி வந்து அவரது அடியில் விழுந்து தனது பாவத்தை அறிக்கையிட்டு,

அழுது அவரிடம் அடைக்கலம் புகுந்தான். தந்தையோ மனமிக மகிழ்ந்து அவனை அன்புடன் வரவேற்றுப் புத்தாடை புனைந்து, அணிகலன்கள் அணிவித்து, விழா எடுத்துப் புதுவாழ்வு கொடுத்தார். சவுலைப் பாரீர்! தனது தவறான கருத்தும் செயலுமே சரியென சாதித்துக் கிறிஸ்தவர் களைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்யத் துணிந்த அவனை, இயேசு தடுத்து நிறுத்திக் குறையை உணர்த்திப் பவுலாக மாற்றிப் புகழ் மிக்கப் புதுவாழ்வு கொடுத்தாரே! அந்தப் பவுலைப் போன்றும் இளைய மைந்தன் போன்றும் நாம் பெறுகின்ற புதுவாழ்வே எழுப்புதல் ஆகும். புதுவாழ்வு பெறாத ஆவியின் வாழ்வு அனைத்தும் போலி வாழ்வேயாம்.

1.3 அறிஞர் அறிவிக்கும் இலக்கணம்

சாதாரண ஆவிக்குரிய வாழ்வின் போக்கில் ஏற்படுகின்ற தெய்வீகக் குறுக்கீடே எழுப்புதல் என்று ஆர்தர் வாலிஸ் (Arthur Walls) என்ற அறிஞர் கூறுகிறார்.

> *தனி வாழ்விலும், குழு வாழ்விலும், திருச்சபையிலும், நகரிலும், நாட்டிலும்-ஏன்? உலகிலும் ஏற்படுகின்ற சிறப்பான மாற்றமே எழுப்புதல். எழுப்புதல் அடைந்த திருச்சபையும் மக்களும் நற் செய்தி அறிவித்தல், போதித்தல், சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுதல் முதலான நற்செயல்களைச் செய்வர்*

என்று பேரறிஞர் எட்வின் ஓர் (Edwin Orr) உரைக்கிறார்.

> *எழுப்புதல் என்பது தெய்வீக வெளிப்பாடு*
> *எழுப்புதல் என்பது சமூக ஒழுக்க நிலையின் மாற்றங்கள்*
> *எழுப்புதல் என்பது ஆதித் திருச்சபையின் முதல் அனுபவம்*

என்கிறார் விவிலிய வித்தகர் A.W. டோசர் (A.W. Tozer)

> *இறைவாக்குக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து செயல்படும்*
> *புதுவாழ்வின் தொடக்கமே எழுப்புதல்*

என்று சார்லஸ் ஃபின்னி (Charles Finney) சொல்லுகிறார். டாக்டர் வில்பர் (Dr. Wilbur) என்பார் கீழ்க்காணும் எட்டு நிகழ்வுகளைப் பழைய ஏற்பாட்டின் புகழ்மிக்க எழுப்புதல்கள் எனக் குறிப்பிடுகிறார்.

1. யோனா காலத்தில் நினிவே மக்களில் ஏற்பட்ட மனமாற்றம் (யோனா 3,4)

2. யாக்கோபு இஸ்ரவேலாக மாற்றம் பெற்றதும், அவனது வீட்டாரின் வேற்றுத் தெய்வச் சிலைகளையும் வேற்றுத் தெய்வ உருவம் பொறித்த காதணிகளையும் சீகேமின் கருவாலி மரத்தடியில் புதைத்ததும், தேவன் தனக்குத் தரிசனமளித்து ஆசிமொழி வழங்கிய பெத்தேலில் நன்றிப் பலி இட்டு வழிபாடு செய்ததுமான நிகழ்வுகள் (ஆதியாகமம் 35:1-15)

3. ஆசா என்னும் யூத மன்னனும் அவன் நாட்டு மக்களும் ஆண்டவருடன் வாழ்ந்து, அருவருப்புகளை அகற்றித், தங்கள் முழு மனதோடும் ஆன்மாவோடும் ஆண்டவரையே தேடுவதாகத் தீர்மானித்து, அவரையே வழிபட்டு அமைதி வாழ்வு வாழ்தல் (2நாளாகமம் 15:1-15)

4. போவாஸ் கால எழுப்புதல் (2நாளாகமம் 23:1-24:16)

5. எசேக்கியா கால எழுப்புதல் (2இராஜாக்கள் 8:4-7; 2நாளாகமம் 29:31)

6. யோசியாவின் கால எழுப்புதல் (2இராஜாக்கள் 22, 23; 2நாளாகமம் 34, 35)

7. எஸ்றாவின் கால எழுப்புதல் (எஸ்றா 5-10)

8. நெகோமியா கால எழுப்புதல் (நெகேமியா 9-12)

அறிஞர்கள் அறிவிக்கின்ற எழுப்புதலின் இலக்கணத்தைப் பார்க்கும்போது மக்கள் வாழ்வில் ஏற்படுகின்ற மனமாற்றமும், தெய்வீக உறவும், தூய வாழ்வும், திருப்பணியுமே எழுப்புதல் என உணர முடிகிறது.

1.4 வரலாறு கற்பிக்கும் இலக்கணம்

புனித பிரான்சிஸ் அசிசி (1182-1228) இத்தாலி நாட்டின் அசிசி நகரில் பிறந்தார். விளையாட்டுப் பிள்ளையாகவும் இராணுவ வீரராகவும் வாழ்ந்த பிரான்சிசுக்கு இயேசுவின் திருக்காட்சி கிடைத்தது.

இயேசுவின் அன்புப் பார்வையும் அமுதவாக்கும் அவரில் பதிந்தன. அவரது வாழ்வு முற்றிலும் மாற்றம் பெற்றது. அவர் உலக இன்பத்தை எல்லாம் துறந்து ஏழைகளோடு ஏழையாய் வாழ்ந்தார். ஏழைகளை இயேசுவின் அடியவராய் மாற்றினார். அவரால் கவரப்பட்ட சகோதரர்கள் ஆயிரக்கணக்கில் அவரது அருட்பணியில் இணைந்தனர். அவரது அருட்பணிக்குப் பாப்பரசிரின் ஒப்புதலும் கிடைத்தது. அவரது அருள் வாக்குகள் அக்கினிச் சுடராய் உள்ளங்களை ஊடுருவின. அவரது அருட்பணி இத்தாலியில் மட்டுமல்ல ஸ்பெயின், பிரான்ஸ், எகிப்து ஆகிய நாடுகளிலும் பரவியது. புனித பிரான்சிஸ் அசிசியை எழுப்புதலின் முன்னோடி எனலாம்.

செர்மன் நாட்டவரான மார்ட்டின் லுத்தர் (1483-1546) இலக்கியத்திலும் இறையியலிலும் டாக்டர் பட்டம் பெற்ற மேதை. அவர் 1516இல் விசுவாசத்தினாலேயே பாவமன்னிப்பாகிய மீட்பு கிடைக்கிறது என்பதைத் திட்டமாய் அறிந்து அந்த மீட்பைத் தமக்கு உரிமையாக்கி னார். இந்த உண்மையைத் தீவிரமாய்த் திருச்சபைக்கு அறிவித்தார். பாவமன்னிப்புப் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பாவமன்னிப்புச் சீட்டையும் மூடக் கோட்பாடுகளையும் வன்மையாகக் கண்டித்தார். திருமறையை செர்மன் மொழியில் ஆக்கி மக்களுக்கு வழங்கினார். மக்கள் விசுவாசத்தில் வளர வழிகாட்டும் நூல்கள் பல இயற்றிக் கொடுத்தார். லுத்தரின் கொள்கை மக்கள் நடுவில் வேகமாகப் பரவியது. சீர்திருத்த திருச்சபை மலர்ந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாய்ச் சீர்திருத்த திருச்சபையில் சேர்ந்தனர். மடத்திலிருந்த பல துறவியரும் கன்னியரும் புதிய சபையில் இணைந்தனர். நிம்சன் மடத்திலிருந்து வெளியேறிய கன்னியரில் ஒருவராகிய காதரீன் அம்மையாரே லுத்தரின் மனைவி ஆனார். இதனைத் திருச்சபை வரலாற்றில் ஓர் எழுப்புதல் யுகம் எனலாம்.

இங்கிலாந்தின் அப்போஸ்தலன் என அழைக்கப்பட்ட ஜாண்வெஸ்லி (1703-1792) படிக்கும் போதே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத் தூய்மைக் குழுவின் தலைவராய்த் திகழ்ந்தார். 1724இல் குருத்துவப் பட்டம் பெற்றார். 1726இல் லிங்கன் கல்லூரியின் கிரேக்க மொழி விரிவுரையாளர் ஆனார். 1735இல் செவ்விந்தியர்களுக்கு இயேசுவை அறிவிக்கும் அருட்பணியாளராக அமெரிக்கா சென்றார்.

1738 மே24 இல்தான் பாவமன்னிப்பாகிய மீட்பை உறுதி செய்தார். 1738 டிசம்பர் 31 இல் ஆவியின் அபிஷேகம் பெற்றார். சிறந்த எழுப்புதல் தொண்டராகப் பணியாற்றினார். அவரின் அருட்பணியால் குடியிலும் வெறியிலும், சூதிலும் வாதிலும், கொலையிலும் கொள்ளையிலும் நிறைந்திருந்த இங்கிலாந்து அசைய ஆரம்பித்தது. வெஸ்லியின் செய்தி கேட்ட மக்கள் அழுது, பாவ அறிக்கை செய்து மீட்படைந்தனர்; ஆவியினால் நிரப்பப்பட்டனர். இந்த எழுப்புதல் யுகத்தில் தான் S.P.G. (1701), C.M.S. (1799), L.M.S. (1795), பாப்டிஸ்டு மிஷனெரி சங்கம் (1792), வெஸ்லியின் மிஷனெரி சங்கம் (1814), சுவிசேஷ லுத்தரன் மிஷனெரி சங்கம் (1836), ஸ்காட்லாந்து மிஷன் (1824), பிரிஸ்பிட்டேரியன் மிஷன் (1840), அமெரிக்கன் மிஷன் (1857) முதலான அருட்பணி அமைப்புகள் தோன்றி உலகமெங்கும் இயேசுவாகிய நற்செய்தியை அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்தன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டாம்லில்சன் (A.J. Tomlinson) என்பார் அமெரிக்காவில் பின்மாரி என்னும் எழுப்புதல் இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதன் பயனாக 1917இல் பல்வேறு எழுப்புதல் குழுக்கள் தோன்றின. பின்னர் அக்குழுக்கள் பெந்தோ கோஸ்தே சபைகளாக மாறின. பெந்தோகோஸ்தே சபைகள் வலியுறுத்தும் ஆவியின் நிறைவு, ஆவிக்குரிய வழிபாடு, ஆவியின் அற்புதச் செயல்கள் ஆகியவை இன்று எல்லாச் சபைகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எழுப்புதல் சின்னங்களாய் விளங்குகின்றன. கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான போப் ஜாண் XXIII, 1962 அக்டோபர் 11 இல் வர்த்திக்கன் மன்றத்தில் கத்தோலிக்கத் திருச்சபையில் ஆவியின் அனுபவத்திற்கு அனுமதி அளித்தார். அதன் பயனாகக் கத்தோலிக்க ஆவியின் அருள்மாரி இயக்கம் (The Catholic Charismatic Movement) இன்று எங்கும் பரவிச் செயல்பட்டு வருவதைக் காண்கிறோம். சீர்திருத்த திருச்சபையிலும் சபைதோறும் ஆவியின் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

இன்றைய ஆவியின் அருள்மாரிக் கூட்டங்களில் அற்புதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் வாழ்ந்த வில்லியம் பிரன்ஹாம் (William Branham) அற்புத ஊழியத்திற்கு முன்னோடியாய்

விளங்குகிறார். அவரைப் பின் தொடர்ந்து இன்று உலகமெங்கும் அற்புத ஊழியம் செய்வோர் பெருகி வருகின்றனர். நம் நாட்டிலும் சகோதரன் டி.ஜி.எஸ். தினகரன், சகோதரன் மோகன். சி. லாசரஸ் முதலான அற்புத ஊழியர்கள் சிறப்பாய் பணியாற்றி வருகின்றனர். ஆயினும் இருபதாம் நூற்றாண்டில் அற்புத ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நற்செய்திப் பணிக்கே முக்கியத்துவம் கொடுத்துத் திருப்பணியாற்றிய டாக்டர் பில்லிகிரகாம் போன்று அதிக ஆத்தும ஆதாயம் செய்தவர் வேறு யாரும் இல்லை என்பது சிந்தனைக்குரியது.

1.5 முடிவுரை

திருமறையைப் புரட்டினாலும் சரி, அறிஞர்களின் கருத்துரைகளைக் கற்றாலும் சரி, வரலாற்றை வாசித்தாலும் சரி நாம் உணரும் உண்மை என்னவெனில் எழுப்புதலின் அடிப்படை மனமாற்றம் என்பதாகும். மனமாற்றம் பெற்றுத், திருமறையை நன்கு படித்து, திருவசனத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து தூய ஆவியின் நிறைவையும் பெற வேண்டும். ஆவியின் நிறைவைப் பெற்றவர்கள் சாட்சியின் வாழ்வு வாழ்ந்து, தங்கள் தங்கள் வரங்களுக்கேற்ப திருச்சபையிலும் பிற சமயத்தவர் நடுவிலும் வல்லமையாய்த் திருப்பணியாற்றி ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும். ஆத்தும ஆதாயமே எழுப்புதலின் உயர்நிலையும் உயிர்நிலையும் ஆகும்.

2. தனிவாழ்வில் எழுப்புதல்

2.1 முன்னுரை

சமுதாயத்தின் அடித்தளமாய் அமைபவர் தனி மனிதர் ஆவார். தனி மனித நலத்தையும் வளத்தையும் பொறுத்தே குடும்ப நலமும் நாட்டு நலமும் அமைகின்றன. ஒருநாட்டின் தனி மனித வருவாய் குறைவாக இருந்தால் அந்நாடு வறுமை நாடு; தனி மனித கல்வித் தரம் குறைவாக இருந்தால் அந்நாடு கல்வியில் பின் தங்கிய நாடு. அதுபோலவே தனி மனித வாழ்வின் ஆவிக்குரிய நிலையைப் பொறுத்தே குடும்பம், திருச்சபை ஆகியவற்றின் ஆவிக்குரிய நிலையும் அமைகிறது. எனவே முதலில் எழுப்புதல் தோன்ற வேண்டிய இடம் தனி மனித வாழ்வு ஆகும். தனி மனித வாழ்வில் தோன்றும் எழுப்புதலின் இலக்கணம் என்ன? அலகை, உடல், உலகு ஆகியவற்றிற்கு அடிமைப்பட்டுப் பாவத்தில் உழன்று கொண்டிருக்கும் மனிதன் ஆவியின் ஆட்சிக்கு உட்பட்டு முற்றிலும் மாற்றப்பட்ட புதுவாழ்வு வாழ்வதே தனி வாழ்வின் எழுப்புதல் ஆகும். அத்தகைய எழுப்புதல் வாழ்வு பெற்ற பேதுருவை மையமாகக் கொண்டு இக்கருத்தினைச் சிந்தனை செய்வோமாக!

2.2 பேதுருவின் வரலாறு

பேதுருவுக்குப் பெற்றோர் இட்ட பெயர் சீமோன் என்பதாகும். பேதுரு என்பது அவருக்கு இயேசு சூட்டிய பெயராகும். பேதுருவின் தந்தை பெயர் யோனா. அவருடைய சகோதரன் அந்திரேயா (யோவான்

1:40-42). பேதுருவின் சொந்த ஊர் பெத்சாயிதா (யோவான் 1:44). இது ஒரு மீனவர் பட்டணம். பின்னாட்களில் பேதுருவின் குடும்பம் இந்தப் பட்டணத்தை விட்டுக் கப்பர்நகூமில் குடியேறியதாகத் தெரிகிறது (மாற்கு 1:21-29). இந்த இரு பட்டணங்களும் கலிலேயாக் கடற்கரையில் அருகருகே அமைந்தவை யாகும். இவற்றுள் கப்பர்நகூம் புகழ்பெற்ற வணிக நகராகும். இன்றும் அங்குப் பேதுருவின் வீடு ஒன்று காட்சி அளிக்கிறது. இது பேதுருவின் நினைவாய் பிற்காலத்தில் கட்டப் பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பேதுருவின் சகோதரன் அந்திரேயா திருமுழுக்குநர் யோவானின் சீடராக இருந்தவர். யோவான் வாயிலாக இயேசுவை அறிந்தவர். ஓர் இரவு இயேசுவுடன் தங்கி அவருடன் உறவு கொண்டு உரையாடி அவரை மேசியாவாகக் கண்டவர். தமது அண்ணன் பேதுருவை இயேசுவிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து ஆசிபெறச் செய்தவர் (யோ. 1:35-42). பின்னர் இயேசுவின் அழைப்புப் பெற்றுத் தங்கள் மீன்பிடித் தொழிலையும், தொழிற் கருவிகளையும் விட்டு விட்டு அந்திரேயாவும், பேதுருவும் இயேசுவின் சீடர்களாய் மாறினர்.

இயேசுவின் சீடர் பட்டியலில் பேதுரு முதல் இடம் பெறுகிறார். இவரே மூத்தவராகவும் கருதப்படுகிறார். திருமணம் செய்தவராகக் குறிக்கப்படுபவரும் இவரே. பேதுருவின் மனைவியின் தாயார் பேதுருவினுடைய குடும்ப வீட்டிலேயே மகளுடன் இருந்தார் (மத். 8:14). பிற்காலத்தில் பேதுருவின் மனைவி பேதுருவுடன் இணைந்து அருட்பணியாற்றினார் (1கொரி. 9:5). இயேசுவின் சீடர் பன்னிருவரில் மூவர் அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள் ஆவர். யவீருவின் இல்லம், மறுரூப மலை, கெத்சமனே தோட்டத்தின் உட்பகுதி ஆகிய இடங்களுக்குப் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரை மட்டுமே இயேசு தம்முடன் அழைத்துச் சென்றார் (மா. 5:37, லூ. 9:28, மத். 26:37). அம்மூவரில் முதல்வர் பேதுருவே. சீடர் பன்னிருவரும் பேதுருவையே தங்கள் பிரதிநிதியாகக் கருதினர். அவர்கள் சார்பாகப் பேசுபவராக (Spokesman) பேதுருவே காட்சி தருகிறார் (யோ.6:67-68, மத். 16:15-16).

நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் (மத் 16:18)

என்று கூறி இயேசு பேதுருவைத் திருச்சபையின் அடிக்கல்லாக்கியது பேதுருவுக்குப் பெரும் புகழ் சேர்ப்பதாக அமைகிறது. இதனை ஆதாரமாக்கிக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பேதுருவை முதல் பாப்பரசராகக் (Pope) கொள்கின்றனர். 'என் ஆடுகளை மேய்ப்பாயாக' (யோவான் 21:15-17) என்று உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவுக்குக் கொடுக்கும் ஆணை ஆண்டவர் பேதுருவைத் திருச்சபையின் முதல் தலைவராக்கினார் என்பதை உறுதி செய்கிறது.

ஆதித் திருச்சபைக்கும் அடியார் கூட்டத்திற்கும் பேதுருவே தலைவராகக் காட்சி தருகிறார் (அப். 1-12). ஆதித் திருச்சபை உறுப்பினரான நூற்றிருபது பேர் நடுவில் பேதுருவே எழும்பி நின்று யூதாசுக்குப் பதிலாக மத்தியாவைப் புதியதொரு அப்போஸ்தலராகத் தேர்வு செய்ய ஏற்பாடு செய்கிறார் (அப். 1:15-26); பெந்தே கோஸ்தே பேருரை நிகழ்த்தித் திருச்சபை பிறந்த முதல் நாளிலேயே மூவாயிரம் பேரைச் சபையில் புதிதாய்ச் சேர்க்கிறார் (அப். 2:14-41). திருத்தூதர் திருப்பணிகள் முழுவதையும் படித்துப் பார்க்கும் போது பேதுரு பெறுகின்ற முதலிடத்தை முழுமையாய் அறிய முடிகிறது. பவுலடியாரும், பேதுருவைத் திருச்சபையின் தூணாகக் குறிப்பிடுகிறார் (கலா. 2:9). பேதுருவும் பவுலடியாரின் பக்தியையும், புலமையையும் பாராட்டுகிறார் (2பேதுரு. 3:15-16).

பேதுரு எழுதிய இரு நிருபங்களும் புகழ் பெற்றவையாகும். பேதுரு தமது முதல் நிருபத்தில் கிறிஸ்தவர்கள் தனிவாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, சபை வாழ்வு ஆகியவற்றில் எவ்வாறு சாட்சியாய் வாழவேண்டும் என்றும், துன்ப காலத்தில் உறுதியான விசுவாசத்தோடு எவ்வாறு முன்னேற வேண்டும் என்றும் உணர்த்துகிறார். இரண்டாம் நிருபத்தில் போலி பக்தர்களுக்கும், போலி போதனைகளுக்கும் நீங்கலாகி இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும் என்று அருமையாக அறிவுறுத்துகிறார்.

2.3 பேதுருவின் குறைகள்

பேதுருவின் இயற்பெயர் சீமோன் என்று கண்டோம். சீமோன் என்ற எபிரேயச் சொல்லின் பொருள் நாணல் என்பதாகும். நாணல் காற்று அடிக்கும் திசையெல்லாம் திரும்பும். அது நிலையாக நிமிர்ந்து நிற்கும் ஆற்றல் இல்லாதது. அதுபோலவே சீமோன் என்ற மறுபெயர் கொண்ட பேதுருவும் வாழ்வின் செயல்களிலும் கோட்பாடுகளிலும் நிலையற்றவர். இதில் வேடிக்கை என்னவென்றால் சீமோன் இயேசுவால் பேதுரு (பாறை) என்ற பெயர் பெற்ற பின்னரும், இயேசுவின் சீடராக - அடியவராக வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலும் சீமோனாகவே செயல்பட்டார். அவரது வாழ்வு நிலையற்றதாக மட்டும் அல்ல, பிழைகள் நிறைந்ததாகவும் காட்சியளித்தது; இன்றைய பெயர்க் கிறிஸ்தவர்களை யும் ஊழல் தலைவர்களையும் போல அப்பிழைகளைச் சற்று விளக்கமாகக் காண்போம்.

2.3.1 உறுதியற்ற நிலை

இயேசு கடலில் நடந்து வருவதைக் கண்ட பேதுரு தாமும் கடல்மீது நடக்க ஆவல் கொண்டார். இயேசுவின் ஆணை பெற்றுக் கடலில் நடந்தார். பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி அமிழத் தொடங்கினார். அப்போது ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று கதறினார். உடனே இயேசு தமது கையை நீட்டி அவரைப் பிடித்து, `நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்' என்று கூறித் தூக்கி விட்டார் (மத். 14:25-33). பார்த்தீர்களா பேதுருவின் உறுதியற்ற நிலையை? முதலில் முழு நம்பிக்கை கொண்டு கடல்மீது நடந்தார். காற்றைக் கண்டதும் நம்பிக்கை குறைந்தது; அமிழத் தொடங்கினார்; அலறினார்.

இன்னொரு வேளையில் இயேசு சீடரிடம், `நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?' என்று கேட்ட போது பேதுரு 'நீர் என்றும் வாழும் இறைமைந்தனாகிய மேசியா' என்றார் (மத். 16:16). மேசியா அல்லது கிறிஸ்து என்றால் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று பொருள். இயேசு எதற்காக அபிஷேகம் செய்யப்பட்டிருந்தார்? உலகின் பாவத்திற்காகப் பலியிடப்படும் தேவ ஆட்டுக் குட்டியாக அபிசேகம் செய்யப்பட்டிருந்தார் (யோவான் 1:36). ஆனால் இயேசுவை மேசியா

என்று அறிக்கையிட்ட பேதுரு அவர் தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்துக் கூறியபோது, 'ஆண்டவரே இது உமக்கு நடக்கவே கூடாது' என்று கொக்கரிக்கிறார் (மத். 16: 21-23). என்ன வேடிக்கை? பேதுருவின் நிலையற்றற தன்மையை அல்லவா இது காட்டுகிறது.

இயேசு திருவிருந்தின் போது சீடர்களின் கால்களைத் தண்ணீரினால் கழுவித் துண்டினால் துடைக்கத் தொடங்கினார். அப்போது பேதுரு இயேசுவிடம், 'நீர் என் காலடிகளைக் கழுவ விடவே மாட்டேன்' என்றார். இயேசு பேதுருவிடம், 'நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை' என்றார். உடனே பேதுரு, 'அப்படியானால் ஆண்டவரே என் காலடிகளை மட்டும் அல்ல, என் கைகளையும் தலையையும் கூடக் கழுவ வேண்டும்' என்றார். இங்கும் பேதுருவின் உறுதியற்ற கொள்கையைக் காண்கிறோம் (யோவான். 13:5-9).

'ஆண்டவரே உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்' (யோவன் 13:37) என்று கூறிய பேதுரு பகைவர்கள் இயேசுவைப் பிடிக்க வந்த போது அவரை விட்டு ஓடி விடுவதைக் காண்கிறோம் (மத்தேயு 26:56). தனது வலைகளையும் படகையும் விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றிய பேதுரு இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததை அறிந்த பிறகும் வேறு ஆறு சீடர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு மீன்பிடிக்கச் செல்வதைப் பார்க்கிறோம் (மத்தேயு 4:18-20, யோவான் 21:1-3). இவையெல்லாம் பேதுருவின் உறுதியற்ற நிலையைத்தானே காட்டுகின்றன.

2.3.2 பெருமை

இயேசு தமது இறுதிப் பஸ்காவை முடித்த பின்னர் சீடர்களிடம்,

> *மேய்ப்பனை வெட்டுவேன்; ஆடுகள் சிதறடிக்கப்படும் என்ற மறைவாக்கின்படி இந்த இரவில் நீங்கள் எல்லாரும் என்னை விட்டு ஓடி விடுவீர்கள் (மத்தேயு 26:31)*

என்றார். அதற்குப் பேதுரு இயேசுவைப் பார்த்து,

எல்லாரும் உம்மை விட்டு ஓடிப்போய் விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப்போக மாட்டேன்

என்றார். இது பேதுருவின் பெருமையைக் காட்டுவதாக வேத வித்தகர்கள் கூறுகின்றனர். ஏனெனில் முதன்மைச் சீடனாக விளங்கிய பேதுரு இயேசுவிடம் சீடர்களின் சார்பாளனாக,

ஆண்டவரே! நாங்கள் யாவரும் எங்கள் தொழில்கள், உடைமைகள், உறவினர்எல்லாம் விட்டு உம்மைப் பின்பற்றி னோமே? எங்களுக்கு எல்லாம் நீர்தாம். நாங்கள் எந்தச் சூழலிலும் உம்மை விட்டு ஓடவே மாட்டோம்

என்று எல்லாருக்காகவும் பேச வேண்டியதற்குப் பதிலாக எல்லாரும் ஓடி விடுவார்கள். நான் மட்டும் ஓடிப்போக மாட்டேன் என்ற பொருளில் பேசுவது அவரின் பெருமையையும் பேதமையையும் காட்டுகிறதல்லவா?

2.3.3 தூக்கம்

இயேசு சீடர்களுடன் கெத்சமனே தோட்டம் சென்றார். அங்கு ஒன்பது சீடர்களை ஓரிடத்தில் இருக்கச் செய்துவிட்டுப் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு உள்பக்கம் சென்றார். அவ்விடத்தில் விழித்திருங்கள் என்று அவர் களுக்கு ஆணை கொடுத்து விட்டுச் சற்று தூரத்தில் போய் முகங் குப்புற விழுந்து அழுது கண்ணீரும், செந்நீரும் சிந்தி செபித்தார். இங்கு விழித்திருங்கள் என்று இயேசு கொடுத்த கட்டளையின் பொருள் என்னைப் பார்த்துக் கொண்டிருங்கள் என்பதாகும் என்று சாது சுந்தர் சிங் கூறுகிறார். ஆனால் பேதுருவும் நண்பர்களும் இயேசுவின் வேதனையையும் வியாகுலத்தையும் செபத்தையும் பார்க்கவே இல்லை. இதைக் கண்ட இயேசு பேதுருவை நோக்கி,

நீங்கள் ஒருமணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா? சோதனைக்குட் படாதபடிக்கு விழித்திருந்து செபியுங்கள் (மத். 26:40-41)

என்று கூறினார். இங்குப் பேதுரு இயேசுவின் உள்ளம் உடைந்த உருக்கமான செபக்காட்சிகளைக் கண்டு தானும் உள்ளமுருகி செபிக்

காமல் தூங்கிக் கொண்டிருந்தது பாவம் தானே ? அந்தப் பாவம் தான் அவர் இயேசுவை மறுதலிக்கக் காரணமாயிற்று என்று சாது சுந்தர்சிங் கூறுகிறார். நாம் நமது வாழ்வில் இயேசுவை மாதிரியாக வைத்து அவரையே நோக்கி அவரது அடிச்சுவட்டில் அடிபதித்து நடந்து முன்னேற வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது செபிக்க வேண்டும். தூங்கக் கூடாது. தூக்கம் என்பது தூங்குவது மட்டும் அன்று. சோம்பல், காலதாமதம், மந்தம், வாட்டம், மறதி எனப் பல பொருள்படும். 'தூங்கற்க தூங்காது செய்யும் வினை' என்று வள்ளுவர் கூறுகிறார். மனந்திரும்புதல், பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெறுதல், தூயாவியைப் பெற்றுக் கொள்ளுதல், தூயவாழ்வு வாழ்தல், திருப் பணியும் அருட்பணியும் ஆற்றுதல், ஆத்தும ஆதாயம் செய்தல் அனைத்தும் தூங்காது செய்ய வேண்டிய செயல்கள். இவற்றைத் துரிதமாகச் செய்யாவிட்டால் நாம் தூங்குகிறோம் என்பது பொருள். தூக்கம் கொல்லும் பாவம்.

2.3.4 தூரம் போதல்

பகைவர்கள் இயேசுவைப் பிடித்து, இழுத்துத் தலைமைக் குருவிடம் கொண்டு சென்ற போது பேதுரு தூரத்திலே அவரைப் பின் தொடர்ந்து போனார் (மத்தேயு 26:58). இந்தத் தூரம் அரைகுறை மனத்தைக் குறிக்கும் என்று தாம்சன் என்பார் குறிப்பிடுகிறார். பேதுரு இயேசுவை முழுமனதுடன் பின்பற்றவில்லை. ஆகவே தான் தூரத்திலே பின்தொடர்ந்தார். நாம் இயேசுவை முழுமனதுடன் பின்பற்றுகிறோமா? 'ஜீவ அப்பம் நானே' என்ற இயேசுவின் போதனையைப் புரிந்து கொள்ள முடியாத சீடர்கள் இயேசுவை விட்டுப் போய் விட்டனர். அப்போது இயேசு பன்னிரு அடியவரை நோக்கி நீங்களும் போய்விட மனதாய் இருக்கிறீர்களோ? என்று கேட்டார். அந்தக் கேள்வி உணர்த்தும் ஒரு கருத்து, நீங்கள் என்னைச் சரியாய் அறிந்து முழுமையாகப் பின்பற்ற விரும்பினால் பின்பற்றுங்கள். இல்லையெனில் நீங்களும் போய்விடுங்கள் என்பதாகும். அரைகுறை ஆசாமிகள் நம்பிக்கைத் துரோகிகள்; ஆபத்தானவர்கள். இன்றையப் பெரும்பான்மைக் கிறிஸ்தவர்கள் அரைகுறைகள் தானே? அப்படிப்பட்டவர்கள் இயேசுவை விட்டு முழுமையாய்ப் போய்விட்டால் திருச்சபை தூய்மை பெறும்; வாழும்; வளரும்.

ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் (மத்தேயு 16:24)

என்று இயேசு கூறினாரே அதன் கருத்து என்ன? இயேசுவை முழுமையாய்ப் பின்பற்ற விரும்பினால் சுயம் சாக வேண்டும். சிலுவை (துன்பம் - பாடு - வேதனை - நிந்தை - அவமானம் - இழப்பு) சுமக்க வேண்டும். இன்றையக் கிறிஸ்தவர்களில் பலர் சுயநலக்காரர்களாகவும், பட்டம், பதவி, பணம், சிற்றின்பம் ஆகியவற்றையே சுமக்க விரும்புகிற வர்களாகவும், ஆனால் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகவும் காணப்படுகிறார்களே? இவர்கள் யார்? இவர்கள் தாம் இயேசுவைத் தூரத்திலே பின்பற்றுகிறவர்கள்.

2.3.5. ஆத்திரம்

பேதுருவிடம் காணப்பட்ட இன்னொரு குறை ஆத்திரம் ஆகும். அவர் ஒரு அவசரக் குடுக்கை; முந்திரிக் கொட்டை. இயேசுவைப் பிடித்துச் செல்ல வந்த தலைமைக் குருவின் பணியாளனான மல்குஸ் (மால்கு) என்பவனின் வலது காதினைத் தனது வாளினால் வெட்டினார். அதனால் இயேசு தன்னைப் புகழ்வார் என்று எண்ணினார். ஆனால் இயேசுவோ ‘உன் வாளை உறையில் போடு’ என்று பேதுருவைக் கண்டித்தார்; மல்குசின் காதினைத் தொட்டுச் சுகமாக்கினார். நம்மில் பலரிடமும் இந்த அவசரப்புத்தி உண்டு அல்லவா? இந்த ஆத்திரத்தால் நடந்த கொலைகள் எத்தனை? கொள்ளைகள் எத்தனை? சண்டைகள் எத்தனை? மனமுறிவுகளும் மணமுறிவுகளும் எத்தனை? எத்தனை?

2.3.6 போலி வீரம்

பேதுரு மல்குசின் வலது காதினை வாளினால் வெட்டிய செயலில் புதைந்து கிடக்கும் இன்னொரு உண்மையை உணர வேண்டும். பேதுரு மல்குசின் முன்னால் நின்று அவனது காதினை வெட்டி இருந்தால் இடது காதினைத்தான் வெட்டி இருக்க முடியும். வலது காதினை வெட்ட வேண்டுமானால் பின்னால் நின்றுதான் வெட்டி இருக்க முடியும். சோதித்துப் பாருங்களேன். பின்னால் நின்று வெட்டிய

தில் இரு உணர்வுகள் பொதிந்துள்ளன. இயேசுவைப் பிடிக்க அவரின் எதிரே வந்த மல்குசின் காதினைப் பேதுரு பின்னால் நின்று வெட்டிய தால் மல்குஸ் பேதுருவைப் பார்க்க இயலாது. ஆனால் இயேசு பேதுரு வைப் பார்த்துப் பாராட்ட வாய்ப்பு உண்டு. என்ன புத்திசாலித்தனம் பாருங்கள். உண்மையாய் இது புத்திசாலித்தனம் அல்ல. கோழைத் தனம். இதனைப் போலி வீரம் என்றும் கூறலாம். இயேசு இந்தப் போலி வீரனை இகழ்ந்தார். ஆனால் இன்றைய சமுதாயத்தில் இத்தகைய போலி வீரர்களைப் புகழ்ந்து அவர்கள் பின்னாலே செல்லும் ஏமாளிகள் ஏராளம். ஏராளம். நாம் யார்? போலி வீரரா? ஏமாளியா? இரண்டும் இல்லாதிருந்தால் நன்று.

2.3.7 தீயோர் உறவு

இயேசு தலைமைக்குருவின் முன்னால் நிறுத்தப்பட்டு விசாரணை செய்யபடுகிறார். இயேசுவைப் பிடித்த பணியாளரும் காவலரும் வெளியே கரியினால் தீ மூட்டிக் குளிர்காய்ந்து கொண்டிருக் கின்றனர். பேதுருவும் அவர்களுடன் நின்று குளிர்காய்ந்து கொண்டிருக் கிறார். என்ன வேடிக்கை? இந்தத் தீயோர் உறவினால் தான் பேதுரு வின் முகத்தையும் தோற்றத்தையும், பேச்சையும் மற்றவர்கள் தெளிவாய் அறிந்தார்கள். நீ யார்? கலிலேயன் அல்லவா? இயேசுவுடன் இருந்த வன் அல்லவா? என்ற கேள்விகள் கேட்டனர். பேதுரு நான் இயேசுவை அறியேன் என்றுபொய் சொல்லவும், அழியாத களங்கத்தைத் தனக்கு ஏற்படுத்தவும் ஏதுவாயிற்று. தீயோர் உறவு எவ்வளவு தீமையானது என்பதற்குப் பேதுருவின் வாழ்வு ஒரு சான்றாகிறது. குடிகாரர், சூதாட்டக்காரர், கற்புநெறி தவறியோர், பொய்யர், திருடர், கொலைஞர், கொள்ளையர், ஏமாற்றுவோர், ஊழல் புரிவோர், தீவிரவாதிகள் முதலான தீயோரின் உறவால் சீரழிந்த நல்லவர்கள் எத்தனை? எத்தனை? எண்ணிப் பாருங்கள். உங்கள் உறவு யாருடன் உள்ளது?

துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாதே. பாவிகளுடைய வழியில் நில்லாதே. பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராதே (சங்கீதம் 1:1)

என்று திருமறை நமக்கு அறிவுரை கூறுகிறது.

2.3.8 மறுதலித்தல்

பேதுருவின் குறைகளில் உச்ச நிலை அவர் இயேசுவை மறுதலித்தது ஆகும். நம்மில் எத்தனை குறைகள் இருந்தாலும் இந்தக் குறை இல்லை அல்லவா என்ற மனநிறைவோடு வாழுகின்ற கிறிஸ்தவர்கள் பலர் உள்ளனர். ஆனால் காலத்திற்கேற்ப மறுதலித்தலின் பொருளினைச் சிந்தித்தால் உண்மை புரியும். அன்று மாற்றார் பேதுருவிடம், 'நீ இயேசுவைச் சேர்ந்தவன் அல்லவா?' என்று கேட்டனர். அதற்குப் பேதுரு, 'நான் இயேசுவைச் சேர்ந்தவன் அல்லன். அவரை நான் அறியேன்' என்று மறுதலித்தார். இன்று நாம் ஒவ்வொருவரும் நான் இயேசுவைச் சேர்ந்தவன்; கிறிஸ்தவன்; இயேசுவை நன்கு அறிவேன் என்று சொல்லுகிறோம். ஆனால் நாம் குடிக்கிறோம், சண்டை போடுகிறோம்; வழக்குத் தொடருகிறோம்; ஒழுக்கக் கேடாய் வாழ்கிறோம்; திருட்டு வழிகளில் பணம் சேர்க்கிறோம்; ஏமாற்றுகிறோம்; போலிப் பெருமைகள் பேசுகிறோம்; கோயிலுக்கும் போகிறோம். நம்மைப் பார்க்கிற பிற சமய பக்தர்கள்,

> *'நாங்கள் இயேசு கிறிஸ்துவை அறிவோம். அவரைப் போன்ற புனிதமானவர் இதுவரை உலகத்தில் தோன்றவே இல்லை. ஆனால் இந்தக் கிறிஸ்தவர்கள் செய்யாத தவறு இல்லை. எங்களை விட இழிவாய் வாழ்கின்றனர். இவர்களை எப்படிக் கிறிஸ்தவர்கள் என்று சொல்ல முடியும்? கிறிஸ்துவைப் போல் வாழ்கிறவர் அல்லவா உண்மைக் கிறிஸ்தவர். இவர்கள் கிறிஸ்தவர்களே இல்லை'*

என்று கூறுகின்றனர். எனது இந்து நண்பர்கள் சிலர் இப்படிப் பேசுவதை நான் எனது காதாலேயே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அன்பு நண்பர்களே! அன்று பேதுரு வார்த்தையால் இயேசுவை மறுதலித்தார். இன்று நாம் வாழ்க்கையால் இயேசுவை மறுதலிக்கிறோம். மறுதலித்தல் பாவங்களில் எல்லாம் கொடிய பாவம்.

2.4 பேதுருவின் வாழ்வில் எழுப்புதல்

> *விழுந்தவர்கள் எழுந்திருக்கிறது இல்லையோ? வழி தப்பிப் போனவர்கள் திரும்புகிறது இல்லையோ? (எரேமியா 8:4)*

குறைகள் மலிந்த பேதுருவின் வாழ்விலும் ஒரு நாள் எழுப்புதல் சுடர் ஒளிவீசத் தொடங்கியது. அந்த நாளினைப் பெந்தேகோஸ்தே திருநாள் என்றும், தூய ஆவியர் ஊற்றப்பட்ட தொடக்க நாள் என்றும் கூறுகிறோம். இயேசு உயிர்த்தெழுந்து விண்ணகம் சென்ற பின்னர் அவர்தம் சீடர் நூற்றிருபதுபேர் கூடி, பத்து நாட்கள் செபித்துக் கொண்டிருந்தனர். பத்தாவது நாள் அதாவது இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளில் பலத்த இரைச்சலுடனும் அக்கினி மயமான நாவுகளுடனும் தூய ஆவியர் அவர்கள் மீது பொழிந்தருளப்பட்டார். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டு வெவ்வேறு மொழிகளில் பேசத் தொடங்கினர். அந்த ஒலி கேட்டு உலகமெங்கும் உள்ள நாடுகளில் வாழ்ந்து, பஸ்காத் திருநாளுக்காக எருசலேம் வந்து திரும்பிப்போக ஆயத்தமாயிருந்த ஆயிரக்கணக்கான யூதர்கள் கூடினர். ஆவியால் நிறைந்தவர்கள் பேசிய பேச்சு அவர்களுக்குத் தங்கள் தங்கள் மொழியில் கேட்டதை உணர்ந்து அவர்கள் குழப்பம் அடைந்தனர். இந்தக் கலிலேயர் நமது மொழிகளில் இறைவனின் மாபெரும் செயல்களைப் பேசக் கேட்கிறோமே? இதன் முடிவு என்ன ஆகுமோ? என்று திகைத்தனர். மற்ற யூதர்கள், இவர்கள் குடிவெறியில் மூழ்கி இருக்கிறார்கள் என்று கிண்டல் செய்தனர். அப்பொழுது பேதுரு எழுந்து நின்று, இவர்கள் குடிவெறியர் அல்லர்.

> *இறுதி நாட்களில் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத்தரிசனம் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள் (யோவேல் 2:28)*

என்ற இறைவாக்கு இன்று நிறைவேறுகிறது. நீங்கள் சிலுவையில் அறைந்து கொன்ற இயேசுவைத் தேவன் உயிரோடு எழுப்பினார், அதற்கு நாங்கள் சாட்சிகள். அந்த இயேசுவே இறைவாக்கின்படி இன்று தூய ஆவியானவரைப் பொழிந்தருளினார் என்று கூறி இயேசு பற்றிய தீர்க்கத் தரிசனங்களை விளக்கிப் பேசினார். பேதுருவின் இந்தப் பேருரை புகழ்மிக்க அருளுரையாகும். இந்த உரையைக் கேட்ட மக்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற இறை

அடியவரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். பேதுரு அவர்களை நோக்கி,

நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்

என்று போதித்தார். பேதுருவின் இந்தப் போதனையைக் கேட்டு மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றவர்கள் மூவாயிரம் பேர் ஆவர் (அப்போஸ்தலர் 2:1-41). இவ்வாறு எழுப்புதல்சுடர் ஏந்திய பேதுருவின் வாழ்வில் வீசிய ஒளிச்சிதறல்கள் சிலவற்றைச் சிந்தனை செய்வோம்.

2.4.1. பற்றுறுதி - உறுதிப்பாடு

பொதுவாக விசுவாசத்தைப் பற்றுறுதி என்பர். யான் இங்கு பேதுருவின் வாழ்வில் காணப்பட்ட அசைக்க முடியாத விசுவாசத்தின் அடிப்படையில் தோன்றிய உறுதிப்பாட்டின் வெளிப்பாடுகளைப் பற்றுறுதி எனக் குறிப்பிடுகிறேன். சீமோனாகவே (நாணல்) வாழ்ந்து கொண்டிருந்த பேதுரு தூய ஆவியார் ஊற்றப்பட்ட திருநாள்முதலே பேதுருவாக (பாறை) மாறினார். அன்று அவர் ஆற்றிய அருளுரை அவரது உறுதிப்பாட்டின் முதல் வெளியீடாகும்.

பேதுரு ஆலய வாயிலில் அமர்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்த பிறவிச் சப்பாணியை இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் சுகமாக்கினார். அதனால் எரிச்சலடைந்த யூதத் திருச்சபையின் தலைவர்கள் பேதுருவையும் யோவானையும் அழைத்து, 'நீங்கள் எந்த வல்லமையால் அல்லது எந்தப்பெயரால் இதனைச் செய்தீர்கள்' என்று கேட்டனர். அதற்குப் பேதுரு,

இவன் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரா லேயே சுகமாகி உங்கள் முன்னால் நிற்கிறான். வீடுகட்டு கிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல் ஆனார். அவராலேயன்றி வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை (அப்போஸ்தலர் 4:10-12)

என்று தைரியமாய்க் கூறினார். இதைக் கேட்ட தலைவர்கள் வியப்படைந்தனர். மீண்டும் பேதுருவையும் யோவானையும் அச்சுறுத்தி, இயேசுவைப் பற்றிப் பேசவும் போதிக்கவும் கூடாது என்று கட்டளையிட்டனர். பேதுருவும் யோவானும் தலைவர்களைப் பார்த்து,

தேவனுக்குச் செவிகொடுப்பதா? உங்களுக்கு செவி கொடுப்பதா? தேவனுடைய பார்வையில் எது சரியாக இருக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். எப்படியாயினும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் சொல்லாமலிருக்க எங்களால் இயலாது (அப்போஸ்தலர் 4:19-20)

என்று கூறினர். இங்குப் பேதுருவின் அறிவியல் பூர்வமான அணுகுமுறையையும் அசைக்க முடியாத உறுதியினையும் தெளிவாகக் காண்கிறோம். பேதுருவும் யோவானும் இயேசுவாகிய நற்செய்தியைத் தொடர்ந்து கூறி வந்ததால் பொறாமை கொண்ட தலைமைக்குருவும், அவரைச் சார்ந்தவர்களும், சதுசேயக் கட்சியினரும் அவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்தனர். ஆண்வர் தம் தூதரை அனுப்பிச் சிறைக்கதவுகளைத் திறந்து அவர்களை விடுவித்தார். அதனால் அதிர்ச்சி அடைந்த தலைமைக் குரு ஆலோசனை சங்கத்தைக் கூட்டிப் பேதுருவையும் யோவானையும் அழைத்து,

நீங்கள் இந்த இயேசுவின் பெயரால் போதனை செய்யக் கூடாது என்று நாங்கள் கண்டிப்பாகக் கட்டளையிட வில்லையா? ஆனால் நீங்களோ உங்கள் போதனையை எருசலேம் முழுவதும் பரப்பி அந்த மனிதருடைய இரத்தப் பழியை எங்கள் மீது சுமத்தப் பார்க்கிறீர்களே! (அப்போஸ்தலர் 5:28)

என்று கேட்டார். அதற்குப் பேதுருவும் யோவானும்,

மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிடத் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியம். நீங்கள் சிலுவையில் தூக்கிக் கொலை செய்த இயேசுவைத் தேவன் உயிரோடெழுப்பி அதிபதியாகவும் இரட்சகராகவும் உயர்த்தினார். இதற்கு நாங்களும் தூய ஆவியரும் சாட்சிகள்

என்று பதிலளித்தனர். இதைக் கேட்ட ஆலோசனைச் சங்கத்தினர் கொதித்தெழுந்தனர். அவர்களைக் கொலை செய்யத் துடித்தனர்.

இதற்கெல்லாம் அஞ்சாத பேதுருவின் பதிலுரை அவரது உறுதிப்பாட்டின் உச்சநிலையாக அமைகிறது. சீமோன் பேதுருவானார். நாணல் பாறையாக மாறியது. இதுவே எழுப்புதல்.

2.4.2 ஆத்தும ஆதாயம்

பேதுருவின் முதல் அருட்செய்தி கேட்டு மூவாயிரம் பேர் மனமாறினர்; இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அவரது இரண்டாவது அருட்செய்தி கேட்டு ஐயாயிரம் பேர் மனமாற்றம் பெற்றனர். அதைத் தொடர்ந்து அவரது அருட்பணியால் திரளான ஆடவரும் பெண்டிரும் திருச்சபையில் இணைந்தனர். சீடரின் எண்ணிக்கை எருசலேமில் மிகவும் பெருகிற்று. யூத குருக்களிலும் பலர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். எருசலேமில் தோன்றிய கிறிஸ்தவம் யூதேயா, கலிலேயா, சமாரியா ஆகிய நாடுகள் எங்கும் பரவியது. யூதரல்லாத ரோமர் முதலான இனத்தவரும் இயேசுவின் அடியவராய் மாறினர் (அப்போஸ்தர் 2:41, 4:4, 5:14, 6:7, 8:14, 9:31, 10:44-46).

நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் (மத்தேயு 16:18)

என்ற அருள்வாக்கு நூற்றுக்கு நூறு நிறைவேறியது. அல்லேலூயா!

2.4.3 அற்புத அருட்பணி

முதல் கிறிஸ்தவ அருட்பணியாளர் (Missionary) என்ற பெருமைக்கு உரியவர் பேதுரு ஆவார். அவரது அருட்பணியால் ஏற்பட்ட ஆத்தும ஆதாயத்தை முன்னர் கண்டோம். இங்கு அவரது அருட் பணியில் நிகழ்ந்த அற்புதங்களைக் காண்போம். பேதுருவும் யோவானும் ஆலயம் சென்ற போது பிறவிச் சப்பாணி ஒருவன் ஆலய வாயிலில் அமர்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். பேதுரு அவனிடம்

வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை.
என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்.
நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே
எழுந்து நட (அப்போஸ்தலர் 3:6)

என்று கூறி அவனது வலக்கையைப் பிடித்துத் தூக்கி விட்டார். உடனே அவன் குதித்தெழுந்து நின்றான்; நடந்தான்; துள்ளினான்; தேவனைத் துதித்துக் கொண்டே திருக்கோவிலுக்குள் சென்றான். அதைக் கண்ட யாவரும் வியப்பும் திகைப்பும் அடைந்தனர்.

முதல் பொதுவுடைமைக் கோட்பாடு தோன்றிய இடம் திருச் சபையாகும். அது கிறிஸ்தவப் பொதுவுடைமை. கிறிஸ்தவப் பொதுவு டைமையில் போராட்டம் இல்லை; பொறுமை உண்டு. வாதமும் வழக்கும் இல்லை; அன்பும் அமைதியும் உண்டு. வேற்றுமை இல்லை; ஒற்றுமை உண்டு. கட்டாயக் கட்டளை இல்லை; கனிவான அர்ப்பணிப்பு உண்டு. இரும்புத்திரை இல்லை; எல்லாம் வெளிப்படை. ஆதித் திருச்சபையில் விசுவாசிகள் தங்கள் உடமைகளை எல்லாம் விற்றுத் திருத்தூதுவர் களின் காலடியில் படைத்தனர். அவற்றை யாவரும் பகிர்ந்து பயன் படுத்தினர். ஒருவருக்கும் ஒரு குறைவும் இருந்ததில்லை. நாளடைவில் அதிலும் குறைகள் தோன்றத் தொடங்கின. சிலர் தாங்கள் படைப்பதைப் பிறர் பார்த்துத் தங்களைப் புகழ வேண்டும் என எண்ணினர். வேறுசிலர் தங்கள் உடைமையில் ஒருபகுதியைத் தங்களுக்கு வைத்துக் கொண்டு மீதியைப் பொதுவுடையாக்கினர்.

அனனியா, சப்பீராள் தம்பதியர் தங்கள் நிலத்தை விற்று, அந்தத் தொகையில் ஒரு பகுதியை ஒளித்து வைத்துக் கொண்டு மீதியைப் பேதுருவின் காலடியில் படைத்தனர். நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? என்று கேட்ட பேதுருவிடம் ஆம் என்று பொய் சொன்னார்கள். பேதுரு அவர்களிடம் நீங்கள் தூய ஆவியானவரிடம் பொய்சொல்லும் படி சாத்தான் உங்கள் உள்ளத்தை ஆட்கொண்டதெப்படி? என்று கேட்டார். உடனே அவர்கள் கீழே விழுந்து உயிர் விட்டனர். இதனைக் கேள்விப்பட்ட சபையாருக்கும் மற்றோருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று. இவ்வாறு பொய்யையும் பொய்யரையும் கண்டு அழிக்கும் அருளாற்றல் பெற்ற அருள்தொண்டர்கள் இன்று இருந்தால் திருச்சபை எவ்வாறு சிறப்புற்றுச் செழிக்கும்? ஆனால் இன்று பொய்யுடனும் பொய்யருடனும் இணைந்து நல்லோரை அழிக்கத் துடிக்கும் திருச்சபைத் தலைவர் சிலரும் இருக்கிறார்களே என்பதை எண்ணும்போது உள்ளம் உடைகிறது? என்ன செய்வது? உள்ளம் உடைந்து செபிப்போம்.

பேதுரு நடந்து செல்லும்போது அவருடைய நிழலாவது சிலர் மேல் படும்படி பிணியாளிகளைக் கட்டில்களிலும் படுக்கைகளிலும் கிடத்திச் சுமந்து கொண்டுவந்து வீதிகளில் வைத்தார்கள். எருசலேமைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலிருந்து திரளான மக்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் துன்புறுவோரையும் எருச லேமுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் எல்லாரும் சுகம் பெற்றார் கள் (அப்போஸ்தலர் **5:1-16**). எருசலேமுக்கு வடமேற்கில் முப்பது மைல் களுக்கு அப்பால் இருந்த லித்தா என்னும் ஊரில் திமிர்வாத நோயுள்ளவனாய் எட்டு ஆண்டுகள் படுக்கையில் கிடந்த ஐனேயா என்னும் ஒருவனைப் பேதுரு கண்டார். அவர் அவனிடம் 'ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார். நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்' என்றார். உடனே அவன் எழுந்திருந் தான். அற்புத சுகம் பெற்ற அந்த மனிதனைக் கண்ட அவ்வூராரும் அதைச் சார்ந்த சாரோன் சமபூமியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் இயேசுவின் பிள்ளைகளாய் மாறினர் (அப்போஸ்தலர் **9:32-35**).

லித்தாவின் அருகிலுள்ள யோப்பா பட்டணத்தில் தபீத்தாள் என்ற ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். தபீத்தாள் என்ற சொல்லுக்குத் தொற்காள் **(பெண்மான்)** என்பது பொருளாகும். தபீத்தாள் நற் செயல்களும் அறச் செயல்களும் செய்து வந்த இறையடியாள். அவள் நோயுற்று இறந்து விட்டாள். அப்பொழுது இருவரை அனுப்பி லித்தாவில் இருந்த பேதுருவை அழைத்து வந்தனர். விதவையர் யாவரும் பேதுருவைச் சூழ்ந்து கொண்டு தொற்காள் தங்களுக்குத் தைத்துக் கொடுத்த அங்கிகளையும் ஆடைகளையும் காட்டி அழுதனர். பேதுரு எல்லாரையும் வெளியே அனுப்பிவிட்டு முழங்காற்படியிட்டு செபம் செய்து, 'தபீத்தாளே எழுந்திரு' என்றார். உடனே அவள் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு எழுந்து உட்கார்ந்தாள். இச்செய்தி யோப்பா பட்டணம் முழுவதும் தெரிய வந்தது. பலர் இயேசுவை நம்பினர் (அப்போஸ்தலர் **9:36-42**).

பின்னர் பேதுரு யோப்பா பட்டணத்தில் தோல் பதனிடும் சீமோன் என்பவரின் வீட்டில் பலநாள் தங்கியிருந்தார். யோப்பாவுக்கு வடக்கே முப்பது மைல் தூரத்தில் செசரியா என்னும் நகரம் ஒன்று இருந்தது. இது பெரிய ஏரோதுவால் அகஸ்ட சீசருக்குப் பெருமை

சேர்க்கும் வகையில் கட்டப்பட்டது. இப்பட்டணம் ரோமை இராணுவத்தினரின் குடியிருப்பாய் விளங்கியது. அங்கு நூற்றுவர் தலைவரான கொர்நேலியு என்பவர் குடும்பமாய் வாழ்ந்து வந்தார். அவர் பக்தியுள்ளவர். அவர் வீட்டார் அனைவரும் மெய்த் தெய்வ பயம் கொண்டவர்கள். அவர் யூத மக்களுக்கு அறச் செயல்களைச் செய்வார். சிறந்த செப வீரர். ஆண்டவர் அவருக்கு அளித்த தரிசனத்தின்படி அவர் இருவரை யோப்பாவுக்கு அனுப்பி பேதுருவை அழைத்துவரச் செய்தார். பேதுருவும் ஆண்டவர் காட்டிய காட்சிக்குக் கீழ்ப்படிந்து செசரியா வந்தார். கொர்நேலியுவின் வீட்டில் கூடி இருந்த யூதரல்லாத அம்மக்களுக்கு இயேசுவாகிய நற்செய்தியை அறிவித்தார். பேதுரு பேசிக்கொண்டிருந்த போதே வசனத்தைக் கேட்ட யாவர்மீதும் தூய ஆவியர் இறங்கினார். எவ்வளவு ஆச்சரியம்! யூதரல்லாதோர் நடுவில் பேதுரு பேசிய முதல் உரை இதுவே.

பேதுருவின் மனைவி அவருடன் சேர்ந்து அருட்பணியாற்றி அவருக்கு முன்னரே இரத்தச் சாட்சியானார் என்று சொல்லப்படுகிறது. ரோமைச் சிறையில் அடைக்கப்பட்ட பேதுரு அன்பர்களால் விடுவிக்கப் பட்டுத் தப்பி ஓடுகின்ற வேளையில் இயேசுவின் சிலுவைக் காட்சி கண்டும் அவரது அமுதமொழி கேட்டும் திரும்பி வந்து பகைவர்களிடம் தம்மை ஒப்புக் கொடுத்தார். தம்மைத் தலைகீழாய் சிலுவையில் அறைந்து கொல்லுமாறு வேண்டிக் கொண்டார். பேதுருவின் வாழ்வு மட்டும் அல்ல, அவரது மரணமும் அற்புதமே!

> *என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவான் 14:12)*

என்ற வாக்கு பேதுருவின் வாழ்வில் உண்மையாகவே நிறைவேறியது. பேதுரு பிறவிச் சப்பாணியையும், திமிர்வாதக்காரனையும் சுகமாக்கினார். அவரது நிழல் பட்டவர்கள் சுகம் பெற்றார்கள் எல்லாரும் சுகம் பெற்றார்கள். மரித்த தபீத்தாளை உயிரோடு எழுப்பினார். அவர் பேசிக் கொண்டிருந்த போதே திருமுழுக்குப் பெறாத பிற இன விசுவாசிகள் மீது தூயாவியர் ஊற்றப்பட்டார். இத்தகைய பேதுருக்கள் தோன்றினால் உலகமே இயேசுவுக்குச் சொந்தமாகுமே!

2.4.4 இறையருள்

பேதுருவின் வாழ்வில் எழுப்புதல் சுடர் பற்றிப் பரவி பருக்கு மீட்பும் மகிழ்வும் பெருவாழ்வும் கொடுக்கக் காரணமாய் இருந்தது இறையருள் என்றால் மிகையாகாது. பேதுருவினால் நிறைவேற்றப்பட்ட அற்புத அடையாளங்களைக் கண்டு பொறாமை கொண்ட யூதத் திருச்சபைத் தலைமைக் குருவும் சதுசேய சமயத்தினரும் பேதுருவையும் யோவானையும் பிடித்துச் சிறையில் அடைத்தனர். ஆனால் ஆண்டவர் தமது தூதனை அனுப்பிச் சிறைக்கதவுகளைத் திறந்து அவர்களை விடுவித்தார். நீங்கள் போய்க் கோயிலில் நின்று வாழ்வு பற்றிய வார்த்தைகளை எல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள் என்று தூதன் வாயிலாய் அறிவித்தார். அவர்கள் அப்படியே செய்தார்கள். அதை அறிந்த பகைவர் பயந்து நடுங்கினர் (அப்போஸ்தலர் **5:17-24**).

ஏரோது அரசன் யாக்கோபை வாளால் வெட்டிக் கொன்றான்; பேதுருவைப் பிடித்துச் சிறையின் உட்காவல் அறையில் அடைத்தான். கைகளைச் சங்கிலியினால் கட்டினான். தூங்காமல் காவல் செய்ய ஆறுமணி நேரத்திற்கு நான்கு காவலர் வீதம் நாளொன்றுக்குப் பதினாறு காவலரைப் பணியில் அமர்த்தினான். பேதுருவின் வலப்புறத்தில் ஒரு காவலனும் இடப்புறத்தில் ஒரு காவலனும், உட்காவலறைக் கதவில் ஒரு காவலனும், வெளிக்காவலறைக் கதவில் ஒரு காவலனுமாகிய நான்கு காவலர்கள் பேதுருவை எப்போதும் விழிப்புடன் காத்துக் கொண்டிருக்குமாறு கண்டிப்பான கட்டளை பெற்றிருந்தனர். ஆண்டவரின் தூதன் சிறையில் புகுந்தான். அறை ஒளிமயமாகியது. சங்கிலிகள் பேதுருவின் கைகளிலிருந்து கீழே விழுந்தன. கதவுகள் தாமாகவே திறந்தன. தூதன் பேதுருவை அற்புதமாய் விடுவித்து வெளியே கொண்டு வந்தான். தூதனும் பேதுருவும் வீதி வழியாய் நடந்து வருகையில் தூதன் மறைந்தான். பேதுருவைக் காணாத காவலர் கலங்கினர். ஏரோது ஆத்திரம் அடைந்தான்; காவலரைக் கொலை செய்யக் கட்டளையிட்டான். தூதன் ஏரோதுவை அடித்துக் கொன்றான்; அவன் புழுத்துச் செத்தான் (அப்போஸ்தலர் **12:1-23**). தடைகளைத் தகர்த்துப் பகைகளை அழித்துத் தமது அடியவரைக் காத்து வழிநடத்தும் இறையருளின் பேராற்றலை என்னென்போம்!

2.5 எழுப்புதலின் இரகசியம்

பக்தி வாழ்வில் நாணலைப்போல் அசைந்து கொண்டிருந்த பேதுரு அசையாத மலைபோல் ஆனார். எல்லாரினும் தானே சிறந்தவன் என்று பெருமை பேசியவர் தலைகீழாய்ச் சிலுவையில் தூங்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தினார். ஒருமணி நேரம் கூட விழித்திருந்து செபிக்க இயலாதிருந்தவர் நண்பகல் வேளையில் பசியுடன் மேலறையில் செபித்துத் தரிசனம் பெற்றார் (அப்போஸ்தலர் 10:9-16). இயேசுவை விட்டுத் தூரம் போனவர் இயேசுவுக்காகவே வாழ்ந்து திருச்சபையை நிறுவி அதனை வளர்க்கும் வல்லவர் ஆனார். ஆத்திரமும் போலி வீரமும் கொண்டவர் பொறுமையுடைய மாவீரர் ஆனார். அவரைப்பார்த்த வீரரும் குருக்களும் நடுங்கினர். தீயோர் உறவால் இயேசுவை மறுதலித்தவர் தூயோர் உறவால் இயேசுவுக்குச் சாட்சி ஆனார் (அப்போஸ்தலர் 2:32). தனி மனித வாழ்வில் ஏற்பட வேண்டிய எழுப்புதலுக்கு மாதிரியானார். இந்த எழுப்புதலின் இரகசியம் என்ன?

2.5.1 அழுதல்

இயேசுவை மறுதலித்த பேதுரு சேவல் இரண்டாம் முறை கூவுகின்ற ஒலி கேட்டதும் ‘சேவல் இருமுறை கூவும் முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்’ என்று இயேசு கூறிய சொற்களை நினைந்து மிகவும் அழுதார் (மாற்கு 14:72); இயேசு தம்மைக் கூர்ந்து நோக்கியதை உணர்ந்து உள்ளம் உடைந்தார்; வெளியே ஓடினார்; ஓவெனக் கதறினார்; கண்ணீர் வடித்தார் (லூக்கா. 22:61-62). இன்னும் எழுப்புதல் ஏணியில் அடியெடுத்து வைக்காத அன்பு நண்பரே! நீர் இன்றாவது உமது குறையை எண்ணிக் கண்ணீர் வடிப்பீராக! தவறு செய்வது மனித இயல்பு. மன்னிப்பது இறைவனின் இயல்பு. மன்னிப்பைப் பெறும் ஒரே வழி நமது பாவத்தை எண்ணி மனம் நொந்து அழுது கண்ணீர் வடிப்பதுதான். எழுப்புதல் வரலாற்றில் இடம் பெற்றுள்ள இறைத்தொண்டர்களின் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். அவர்களின் கண்ணீரே எழுப்புதல் சுடர் பற்றி எரியக் காரணமான எண்ணெய் ஆயிற்று. ‘அயலாரின் மீட்புக்காக அருட்பணியாற்றும் யான் இன்னும் மீட்பைப் பெறவில்லையே? என்னை மீட்பது யார்?’ என்று கதறி அழுத கண்ணீர்தான் ஜாண் வெஸ்லியின் மீட்புக்கும், அவரால் இங்கிலாந்தில்

பற்றி எறிந்த எழுப்புதலுக்கும் காரணம் ஆயிற்று. இருபத்தைந்தாவது வயதில் மார்ட்டின் லுத்தர் காட்டிய நெறிப்படி விசுவாசத்தால் மீட்பைப் பெற்ற அடியேனும் கூட எனது முப்பத்து மூன்றாம் வயதில் அயர்ன் நார்த் என்னும் அடியாரின் அருட்செய்தியால் இரண்டாம் தொடுகைக்கு உட்பட்டு அறைவீட்டில் அழுது கண்ணீர் வடித்துக் கழுவப்பட்ட போதுதான் எழுப்புதல் சுடர் ஏற்றும் விளக்கானேன். அல்லேலூயா!

தமது வாழ்வில் ஒருநாள் கூடப் பாவத்துக்காகப் புலம்பி அழுது கண்ணீர் வடித்துக் கதறி இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டுப் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெற்றுக் கொள்ளா தவர்கள் மறுமையில் என்றும் அழுது கண்ணீர்வடிக்கும் கொடிய நரகத் தண்டனை அடைவர் என்பது உண்மை.

2.5.2 ஆவியைப் பெறுதல்

பேதுரு தமது வாழ்வில் அழுது பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெற்றுக் கொண்ட பின்னரும் கூட இறைத்திட்டத்தை முழுவதுமாய் உணர்ந்து கொள்ளாதவராய் மீண்டும் மீன்பிடிக்கப் போனார். ஆனால் பெந்தேகோஸ்தே திருநாளில் பொழிந்தருளப்பட்ட தூய ஆவியரால் நிரப்பப்பட்ட பின்னரே முற்றிலும் மாற்றப்பட்ட முழுவாழ்வு பெற்றார். எழுப்புதல் சுடரானார்.

'நீங்கள் தூய ஆவியரைப் பெற்றுள்ளீர்களா?' (அப்போஸ்தலர் 19:2). இக்கேள்விக்கு எபேசு சபையர், 'தூய ஆவி உண்டு என்பதை நாங்கள் கேள்விப்படவே இலை' என்று விடையளித்தனர். இதன் கருத்து யாதெனில் தூய ஆவியரைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது என்பதாம். நாம் அப்படிக் கூறுவோமோ? தந்தை, சுதன், ஆவியர் என்னும் திரித்துவத்தை நாம் அறிவோம். நமது ஆராதனை களின் இறுதி ஆசியுரை இதோ,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென் (2 கொரிந்தியர் 13:14).

இந்த ஆசியுரையைக் கேட்கும் நாம் தூய ஆவியரை அறியோம் என்று கூற முடியுமா?

இயேசுகிறிஸ்துவை நம்பி அவரிடம் பாவ அறிக்கை செய்து மீட்பைப் (Salvation) பெற்றுக் கொள்ளும் நாம் தூய வாழ்வு வாழத் (Sancification) தூய ஆவியரைக் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 2:13). தூய ஆவியரைப் பெறாதவர் கிறிஸ்தவர் அல்லர் (ரோமர் 8:9); அவர்கள் இறைமக்களும் அல்லர் (ரோமர் 8:14); சாட்சியின் வாழ்வு வாழ்பவர் அல்லர்; இறையாற்றல் இல்லாதவர் ஆவர் (அப்போஸ்தலர் 1:8); விண்ணரசுக்குத் தகுதியற்றவர் ஆவர் (யோவான் 3:5); ஆண்டவருக்கென அரும்பணிசெய்ய இயலாதவர் ஆவர் (சகரியா 4:6). தூய ஆவியரை இல்லாதவர் எழுப்புதல் இல்லாதவர், தூய ஆவியரை உடையோர் ஆவியின் ஆற்றலையும், வரங்களையும் பெற்று அருளாசி பெறுவர்.

நாம் தூய ஆவியரைப் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? முதலில் மீட்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (எபேசியர் 1:13-14). பின்னர் தூய ஆவியரைக் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தாகம் (பெரு விருப்பம்) வேண்டும் (எசாயா 44:3; யோவான் 7:37). தாகத்துடன் இறைவனை நோக்கித் தனியாகவோ குழுவாகவோ செபிக்க வேண்டும் (லூக். 11:13). தூய ஆவியரைப் பெற்று அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் வழியில் நடந்தால் நிறைவான வரங்களையும் வல்லமையையும் பேரருளினையும் பெறுவோம். (அப்போஸ் தலர் 5:32). தூய ஆவியரைப் பெற்றும் அவருக்குக் கீழ்ப்படியாமல் நமது சுயத்தால் ஆவியரை அடக்கி ஆள நினத்தால் குழப்பங்கள் ஏற்படும்; பிரிவினைகள் தோன்றும்; ஆவியின் அருளாற்றல் குறையும்; மறையும் (1சாமுவேல் 16:14). எனவே தான் தாவீது தேவனே! உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும். உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் (சங்கீதம் 51:11-12); என வேண்டுகிறார். பவுலாரும் ஆவியிலே அனலாய் இருங்கள் (ரோமர் 12:11); ஆவியின் செயல்பாட்டைத் தடுக்காதிருங்கள் (1தெச லோனிக்கேயர் 5:19); தூய ஆவியர்க்குத் துக்கம் வருவிக்காதீர்கள் (எபேசியர் 4:30) என ஆலோசனை அருள்கிறார். எழுப்புதலை எழுப்புதல்

அக்கினி என்பர். அக்கினி என்பது ஆவியாரின் அருளாற்றலைக் குறிக்கும். ஆவி இல்லாத இடத்தில் எழுப்புதல் இருக்காது. இன்று எழுப்புதல் பற்றி எரியும் தென்கொரியா போன்ற இடங்களுக்குச் சென்று பாருங்கள். அங்குள்ள மக்கள் ஆவியின் அக்கினிச் சுடராய் ஒளிவீசி வார்த்தையாலும் வாழ்வாலும் எழுப்புதல் சின்னங்களாய்த் திகழ்கின்றனர். எழுப்புதலின் இரகசியம் ஆவியின் நிறைவும் ஆவியில் அருளாற்றலுமே!

2.5.3 அர்ப்பணித்தல்

ஆவியாரின் அருளாற்றல் தொடர்ந்து பெருகி எழுப்புதல் பேராற்றலோடு பரவ நமது அர்ப்பணிப்பு அடிப்படையாகிறது. உயிர்த்தெழுந்த இயேசு திபேரியாக் கடலருகில் சீடர்களுக்குக் காட்சியளித்துப் பேதுருவிடம்

> *யோவானின் மகன் சீமோனே! நீ இவர்களை விட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா (யோவான் 21:15)*

என்று கேட்டார். அதற்குப் பேதுரு,

> *ஆம் ஆண்டவரே! எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!*

என்று பதிலளித்தார். இயேசு அதே கேள்வியை மீண்டு மீண்டுமாக மூன்று முறை கேட்டார். பேதுரு சற்று வருத்தமுற்றாலும் தமது அர்ப்பணிப்பில் மாற்றம் அடையவில்லை.

> *ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே!*
>
> *எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?*

என்று அழுத்தமாகக் கூறினார். தொடர்ந்து இயேசு பேதுருவிடம்

> *நீ இளைஞனாக இருந்த போது நீயே இடையைக் கட்டிக் கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடி வந்தாய்.*

3. குடும்பத்தில் எழுப்புதல்

3.1 முன்னுரை

சமுதாயத்தின் அடிப்படை அமைப்பு குடும்பம் ஆகும். குடும்பம் என்னும் கால்கொண்டே சமூகம் என்னும் மாளிகை எழுகிறது. நல்ல குடும்பங்களின் கூட்டமைப்பே நல்ல நாடு எனப்படும். குடும்பங்கள் சீர்கெட்டால் திருச்சபை சீர்கெடும்; நாடு நலிவுறும். உலகப் பேரரசை உருவாக்கும் தகுதியோடு உயர்ந்து வந்த ரோமைப் பேரரசின் வீழ்ச்சி உலகப் பேரறிஞர்களுக்கு அதிர்ச்சி அளித்தது. அதற்குரிய காரணங்களை ஆராயத் தூண்டியது. அதன் பயனாக 'ரோமைப் பேரரசின் வீழ்ச்சி- The fall of Roman Empire என்ற நூல் உருவானது. அந்த நூல் ரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. அது கூறும் காரணங்களில் ஒன்று குடும்பங்களின் சீர்குலைவு என்பதாகும். குடும்பத் தலைவியர் சிற்றின்பப் பிரியராய் மாறினர்; ரோமாபுரி ராணிகளாய் வீதியில் உலா வந்தனர்; குடும்பப் பராமரிப்பை மறந்தனர். அதனால் குழந்தைகள் கெட்டனர். குடும்பங்கள் குலைந்தன. நாடு நலிந்தது. பேரரசு வீழ்ந்தது. ஆவிக்குரிய வாழ்விலும் திருச்சபை மலர்ச்சியுற, திருப்பணியும் அருட்பணியும் அணிபெற, குறையும் கறையும் இல்லாத தூய சமுதாயம் மலர, அருள்நிறைந்த இறையாட்சி அமைய குடும்பங்களில் எழுப்புதல் இன்றியமையாத் தேவையாகும்.

3.2 குடும்பத்தில் எழுப்புதல்

குடும்பம் என்பது தலைவன், தலைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், வயதான பெற்றோர், சகோதரர், சகோதரிகள்

முதலியோரைக் கொண்ட அமைப்பு ஆகும். குடும்பத்தில் எழுப்புதல் என்றால் குடும்ப உறுப்பினர் எல்லாரும் ஆவிக்குரிய அடிப்படை நிலைகளான மீட்பும் தூயாவியின் நிறைவும் பெற்று, சாட்சியின் வாழ்வு வாழ்ந்து, தங்களுக்கு அருளப்பட்ட ஆவியின் வரங்களுக்கும் வல்லமைக்கும் ஏற்பத் திருப்பணியும் அருட்பணியும் ஆற்றுதல் ஆகும். எழுப்புதல் அடைந்த குடும்பத்தில் அன்பும் ஐக்கியம் உண்டு; சண்டையும் சச்சரவும் இல்லை. குடும்ப செபம் உண்டு; குழப்பம் இல்லை, ஒருவருக் கொருவர் உதவி உண்டு; உபத்திரவம் இல்லை. அமைதியும் அருளும் உண்டு; இடும்பும் இருளும் இல்லை. அயலாருடன் நல்லுறவும் நன்மதிப்பும் உண்டு; அலட்டலும் அருவருப்பும் இல்லை; இல்லவே இல்லை.

3.3 குடும்பத்தின் குறைபாடுகள்

வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. அதுபோல வீட்டுக்கு வீடு குறைகளும் உண்டு. வீட்டுத் தலைவர்களில் சிலர் குடிகாரர்; சிலர் ஒழுக்கம் கெட்டவர்; சிலர் ஊழல் பேர்வழிகள்; சிலர் பிரச்சினை வாதிகள்; சிலர் சண்டையிடும் கட்சிக்காரர்; தங்கள் கட்சியினர் செய்யும் தவறுகளைக் காணும் கண்ணில்லாதவர்; பலர் ஆவிக்குரிய அனுபவமே இல்லாதவர். வீட்டுத் தலைவியரில் சிலர் அடங்காப் பிடாரிகள்; சண்டைபோடும் கோபக்காரிகள் (நீதிமொழிகள் 21:9,19). கணவனை மதிக்காமல் குறை கூறிக் கொண்டே இருப்பவர்கள் (யோபு. 2:9). வீடுவீடாய்ப் போய்க் கதைபேசி கோள் சொல்லிச் சண்டை மூட்டுபவர் கள் (தீத்து 2:5); தனக்கெனத் தனிக் கொள்கையும் திட்டமும் இல்லாமல் பிறர்போல் வாழத் துடிப்பவர்கள்; ஆடம்பரப் பிரியர்; சிற்றின்ப வெறியர்; கணவனைக் குறித்தும் பிள்ளைகளைக் குறித்தும் கவலைப்படாதவர்; ஆவியின் அனுபவம் இல்லாதவர். குடும்பத்தலைவனும் தலைவியும் இவ்வாறு இருந்தால் குடும்பம் எப்படி உருப்படும்?

பிள்ளைகள் சிலர் சினிமா பைத்தியங்கள்; பாலுணர்வுக்கும், மதுவுக்கும், போதைப் பொருட்களுக்கும், கெட்ட நண்பர்களுக்கும் அடிமைப்பட்டவர்கள்; பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படியாத வர்கள் (உபாகமம் 21:18-23). உடன்பிறப்புகளுக்குள்ளேயே போட்டியும் பொறாமையும் கொண்டு சண்டையும் இடுகின்றனர். மூத்த சகோதரன்

(லூக்கா 15:25-30), யோசேப்பின் சகோதரர் (ஆதியாகமம் 37:1-36). ஏசா-ஈசாக்கு (ஆதியாகமம் 27:41), ராகேல் - லேயாள் (ஆதியாகமம் 30:1) போன்றோர் பலர் இன்னும் இருக்கின்றனரே!

சகோதரர் ஒருமித்து வாழ்வது எத்துணை நல்லது! எத்துணை இனியது! (சங்கீதம் 133:1)

இன்றைய சகோதரர் பலர் இந்த நன்மையையும் இனிமையையும் இழந்து வாழ்கின்றனரே! ஆவிக்குரிய வாழ்வில் அடியெடுத்து வைக்கத் தயங்குகின்றனரே!

சில குடும்பங்களில் முதிர்வயதான பெற்றோரைக் கவனிப்பார் இலர். எனக்குத் தெரிந்த ஓய்வு பெற்ற உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் ஒருவர் மக்களும் மற்றுள்ள வசதிகளும் இருந்தும் முதியோர் இல்லத்தில் தங்கி வாழ்ந்து வருகிறார். மக்கள் குறையோ அவர் குறையோ யானறியேன். முதிர் வயதான பெற்றோருள் சிலரும் தலைமுறை வெளியீட்டை உணர்ந்து மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் ஒத்துப்போக முடியாதவர்களாய் வேதனைப்படுகின்றனர். சில குடும்பங்களில் மாமியார் கொடுமைகள் மிகுதி. சில குடும்பங்களில் மருமகள் பெருமைகள் மிகுதி. கணவனும் மனைவியும் ஒத்துப் போக இயலாமல் ஏற்படுகின்ற மனமுறிவுகளும், மணமுறிவுகளும், அடுப்பு வெடிப்புகளும், தீக்குளித்தல்களும், தீக்கொளுத்தல்களும் ஏராளம்! ஏராளம்! என்செய்வோம்?

3.4 சீர்கெட்ட குடும்பங்கள்

அகாஸ்வேரு அரசனின் கட்டளையை மீறிய வஸ்தி என்னும் அரசி அரச மேன்மையிலிருந்து தூக்கி எறியப்பட்ட வரலாற்றை எஸ்தர் முதல் அதிகாரத்தில் வாசிக்கிறோம். கணவனும் மனைவியும் சேர்ந்து வாழாமல் பிரிந்து கிடக்கிற குடும்பங்கள் (Broken Families) பலவற்றை இன்றும் பார்க்கிறோம்.

காதலர் இருவர் கருத்தொரு மித்து
ஆதரவு பட்டதே இன்பம்

என்பர். ஆனால் அன்பும் இன்றி கருத்தொற்றுமையும் இன்றி எந்திர

வாழ்க்கை வாழும் குடும்பங்கள் எத்தனை? தாவீதரசன் சவுலின் மகளாகிய மீகாளுடன் வாழ்ந்த வாழ்க்கை இத்தகையதே (2சாமுவேல் 6) கருத்தொற்றுமை இல்லாத காரணத்தால் அடிக்கடி ஏச்சும் பேச்சும், முக்கலும் முனங்கலும், அடியும் தடியும், அல்லலும் எள்ளலும் கொடுக்கிற மனைவியுடன் அல்லது கணவனுடன் வாழும் வாழ்க்கை ஒரு குடிசையில் பாம்புடன் வாழும் வாழ்க்கை போன்றது என்று வள்ளுவர் கூறும் குறளின் கருத்தினை எண்ணிப் பாருங்கள்.

உடம்பா(டு) இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ(டு) உடனுறைந் தற்று (குறள் 890)

தாவீதரசன் காலத்தில் மாகோன் பாலைவனத்தில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் நாபால். நாபால் என்ற சொல்லுக்கு முட்டாள் என்பது பொருளாகும். அந்த முட்டாள் பெரிய செல்வந்தன். அவனுக்கு மூவாயிரம் செம்மறியாடுகளும் ஆயிரம் வெள்ளாடுகளும் இருந்தன. அவன் முரடன், கொடியன், தடியன், கபடன், காலேப் குலத்தினன். அவன் மனைவி பெயர் அபிகாயில். அவள் அழகானவள்; அறிவுள்ளவள். இன்றும் பணம் இருக்கிறது. பகட்டு இருக்கிறது என்று சொல்லித் தங்கள் கிளி போன்ற அழகிய அறிவுள்ள பக்தியுள்ள பெண்களைக் கட்டிக் கொடுத்து விட்டு அழுது கொண்டிருக்கும் பெற்றோர்கள் எத்தனை? அந்தப் பிள்ளைகளின் வாழ்வு வள்ளுவர் கூறுவது போன்று பாம்புடன் வாழும் வாழ்க்கையாகத் தானே இருக்கிறது. அத்தகைய பாம்புகளால் தீண்டப்பட்டு மாண்டுபோன பெண்களைப் பார்த்தாவது திருந்துவீர்களா பெற்றோர்களே? நாபால் இறந்ததும் தாவீது அபிகாயிலைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான். தாவீதும் விரும்பினான்; அபிகாயிலும் விரும்பினாள். இருவரும் இணைந்தனர். இன்று விதவை மறுமணத்தை எதிர்ப்பவர்களே இந்த வரலாற்றைப் படித்து மனம் மாறுங்கள் (1சாமுவேல் 25).

பல குடும்பங்களின் சிதைவுக்குப் பெற்றோர்களே காரணம் ஆவர். சவுல் அரசன் தாவீதின் மனைவியாகிய தன் மகள் மீகாளைத் தாவீதிடமிருந்து பிரித்துக் காலீம் ஊரானாகிய லாயீசின் மகன் பல்திக்கு மணமுடித்துக் கொடுத்தான் (1சாமு. 25:44). பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறி அவர்கள் சேர்ந்து வாழத் துணை செய்ய வேண்டிய

பெற்றோர் சிலர் பிள்ளைகளின் பிரிவுக்குத் துணைபோவது புரியாத புதிராக இருக்கிறது. ஒரு பெந்தேகோஸ்தே பெற்றோர் மணமாகி மகன் ஒருவனைப் பெற்றெடுத்த தம் மகளை மருமகனுடன் அனுப்ப விரும்பாது அவளை மருமகனிடமிருந்து நிரந்தரமாகப் பிரித்த காட்சியை என் கண்ணால் கண்டு கண்ணீர் வடித்தேன்.

ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் தன் கணவனுக்குத் தானே ஆகாரைத் திருமணம் செய்துவைக்கிற காட்சியைக் காண்கிறோம் (ஆதியாகமம் 16:1-3). இவ்வாறு கணவன் குடிப்பதற்கும், இலஞ்சம் வாங்குவதற்கும், பிற பெண்களுடன் பழகிக் கெடுவதற்கும், தீய நண்பர்களுடன் உறவு கொள்வதற்கும், ஆடம்பரமாய் வாழ்வதற்கும், இறுதியில் குடும்பமே அழிவதற்கும் காரணமான பெண்களை இன்றும் காண்கிறோமே!

குடும்பங்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் குடித்துக் கெட்ட குடும்பங்கள் பல. மதுவுடன் மாது, சூது ஆகிய ஒழுக்கக் கேடுகளால் ஒழிந்த குடும்பங்கள் பல. ஆடம்பர வாழ்வில் அழிந்த குடும்பங்கள் பல. வரவுக்கு மிஞ்சி செலவு செய்து சீரழிந்த குடும்பங்கள் பல. அளவுக்கு மீறி கடன் வாங்கி அல்லலுறும் குடும்பங்கள் பல. உழைக்க மனமின்றி சோம்பிக் கிடந்தும், உல்லாச வாழ்வு வாழ்ந்தும் எல்லாம் இழந்து வீதியில் நிற்கும் குடும்பங்கள் பல. கணவன் மனைவி உறவு சரி இல்லாததாலும், அவர்களது பண்பற்ற வாழ்வாலும், மாமியார் மருமகள் சண்டைகளாலும், சொற்கேளாத கெட்ட பிள்ளைகளாலும், ஒன்றுபட்டு வாழாத உடன்பிறப்புகளாலும், போட்டி பொறாமைகளால் வந்த வாதுகளாலும், வழக்குகளாலும் அழிந்தகுடும்பங்கள் பல. யாவற்றிற்கும் மேலாக

ஒருவர் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் புதிய படைப்பாகிறார்.
பழையன ஒழிந்து போயின
எல்லாம் புதிதாகின்றன (2கொரிந்தியர் 5:17)

இந்த இறையியல் தத்துவத்தை உணர்ந்து இயேசுவுக்குள் வாழ்ந்து, பழைய குறைகளை எல்லாம் களைந்து, புதிய பேறுகளை எல்லாம் நிறைவாய் பெற்றுக் கொள்ள விரும்பாத கிறிஸ்தவக் குடும்பங்கள் இன்றும் ஏராளம் இருக்கின்றனவே! என் செய்வது?

3.5 மாதிரிக் குடும்பங்கள்

எழுப்புதலுக்கு வழிகாட்டும் மாதிரிக் குடும்பங்கள் (Ideal Families) பலவற்றைத் திருமறையில் பார்க்கிறோம். எப்பிராயீம் கோத்திரத்தில் நூன் என்பவரின் மகன் ஒருவர் இருந்தார். அவரது இயற்பெயர் ஓசேயா (எண்ணாகமம் 13:8) என்பதாகும். ஓசேயாவுக்கு மோசே சூட்டிய பெயர் யோசுவா (எண்ணாகமம் 13:16) என்பதாகும். ஓசேயா, யோசுவா என்னும் எபிரேயப் பெயர்கள் கிரேக்க மொழியில் இயேசு என்று குறிக்கப்படும். இப்பெயரின் பொருள் இரட்சிப்பு என்பதாகும். யோசுவா மோசேயின் உதவியாளராகப் பணியாற்றினார் (யாத்திராகமம் 33:11). அமலேக்கியர் ரெவிதீம் என்னும் இடத்தில் இஸ்ரவேலரை எதிர்த்துப் போரிட்ட போது யோசுவா மோசேயின் ஆணைப்படி இஸ்ரவேலரின் படைத்தலைவனாய்ப் போரிட்டு வெற்றி பெற்றாள் (யாத்திராகமம் 17:8-13). அவர் ஆவியின் நிறைவைப் பெற்றவர். ஆசாரியனாகிய எலியாசருக்கும் சபையாருக்கும் முன்பாக நிறுத்தப்பட்டு மோசேக்குப் பின்னர் இஸ்ரவேலரை வழிநடத்தும் தலைவராக மோசேயினால் அருட்பொழிவு செய்யப்பட்டவர் (எண்ணாகமம் 27:18-23, உபாகமம் 34:9). மோசே சீனாய் மலையின் கொடுமுடிக்குச் சென்ற போது யோசுவாவையும் தம்முடன் அழைத்துச் சென்றார் (யாத்திராகமம் 24:13). எனவே இஸ்ரவேலர்கள் தங்களை வழிநடத்திய தெய்வங்களாகப் பொற்கன்றுக் குட்டிகளைச் செய்து வழிபட்டபோது யோசுவா அவர்களுடன் இல்லை (யாத்திராகமம் 32). கானான் நாட்டைச் சுற்றிப் பார்த்து வர மோசேயினால் அனுப்பப்பட்ட பன்னிருவரில் யோசுவாவும் ஒருவர். யோசுவாவும் காலேப்பும் மட்டும் கர்த்தர் அந்த நாட்டை நமக்குக் கொடுப்பார் என்ற நற்செய்தியைக் கூறினர். மற்றவர்கள் எல்லாரும் அந்த நாட்டில் இருப்போர் மாபெரும் வீரர்; நாம் அவர்களுடன் போரிட்டு வெற்றி பெற முடியாது; எகிப்துக்குத் திரும்பிப் போவோம் வாருங்கள் என்று கூறிப் புலம்பினர் (எண்ணாகமம் 14:6-9).

மோசேக்குப் பின்னர் யோசுவா தலைமையேற்று இஸ்ரவேலரை வழிநடத்தினார். வழிப்பயணத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு விருத்த சேதனம் கொடுத்தார் (யோசுவா. 5:7). குறுக்கிட்ட யோர்தான் பிரிந்து வழிவிட்டது (யோசுவா 3:15-17). எரிகோநகர் வீழ்ந்தது (யோசுவா 6).

யோசுவாவின் கட்டளை பெற்றுச் சூரியன் கிபியோன் மேலும சந்திரன் ஆயவோன் மேலும் ஒரு பகல் முழுவதும் நடுவானில் நின்றன (யோசுவா 10:12-13). இஸ்ரவேலருடன் கானான் நாட்டில் புகுந்த யோசுவா அங்கிருந்த கானானியர், பெர்சியர், எமோரியர், எபூசியர், ஏத்தியர், ஏவியர் என்னும் ஆறு சாதியினரையும் முப்பத்தொரு அரசர்களையும் வென்றார் (யோசுவா 12). கானான் நாட்டை இஸ்ரவேலருக்குக் கோத்திரம் வாரியாகப் பங்கிட்டுக் கொடுத்தார். தமது மரணத்திற்கு முன்னர் இஸ்ரவேலரை எல்லாம் சீகேமிலே கூட்டி அவர் ஆற்றிய இறுதிப் பேருரை புகழ்மிக்க தாகும். அப்பேருரையில்,

நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்
நீங்கள் யாரைச் சேவிப்பீர்களென்று இன்று
தெரிந்து கொள்ளுங்கள் (யோசுவா 24:15)

என்று விடுத்த அறைகூவல் யோசுவாவின் குடும்பம் ஒரு மாதிரிக் குடும்பம் என்பதை வெளிப்படுத்துகிறது.

பெத்தானியாவில் வாழ்ந்த மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோரைக் கொண்ட குடும்பம் வாலிபர்களுக் கெல்லாம் மாதிரிக் குடும்பமாகத் திகழ்கிறது (யோவான் 11: 1-45). கப்பர்நகூமில் தம் மகனுக்கு இயேசுவால் அற்புத சுகம் கிடைக்கப்பெற்ற அரசு அலுவலர் ஒருவர் தம் வீட்டார் யாவருடனும் இயேசுவை நம்பி மாதிரிக் குடும்ப வாழ்வு நடத்தினார் (யோவான் 4:46-53). பிலிப்பி பட்டணத்தில் வாழ்ந்த லீதியாள் என்னும் பெண்மணி பவுலின் அருட்செய்தியைக் கேட்டு இயேசு கிறிஸ்துவைத் தன் ஆண்டவரும் மீட்பருமாக ஏற்றுக் கொண்டாள். அவளும் அவள் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்று இறைமக்கள் ஆயினர். அவளது வீடு அருட்பணியாளர் தங்கும் இல்லம் ஆயிற்று; பிலிப்பி சபையின் முதல் ஆலயமாகவும் அமைந்தது. அவளது செல்வ வாழ்வு இறைப்பணிக்குத் துணை நின்றது. இந்த லீதியாளின் குடும்பம் ஒரு மாதிரிக் குடும்பம் அன்றோ? (அப்போஸ்தலர் 16:12-15, 40). பிலிப்பி பட்டணச் சிறைகாவலன் சிறையில் நடந்த அற்புத நிகழ்ச்சியால் இயேசுவின் அடியான் ஆனான். அவன் வீட்டாரும் பவுலின் போதனையைக் கேட்டு விசுவாசிகள் ஆயினர். யாவரும் திருமுழுக்குப் பெற்றனர். பவுலுக்கும் சீலாவுக்கும் தொண்டு செய்தனர்; விருந்து அளித்தனர். இயேசுவின் அடியவராகும் பேறு கிடைத்ததற்காகப்

பேருவகை கொண்டனர். இவ்வாறு மாதிரிக் குடும்பமாக மாறினர் (அப்போஸ்தலர் 16:26-34). குழந்தைப்பேறு இல்லாத சூழலிலும் முதிர்வயது வரை கர்த்தருக்குள் களிப்படைந்து அவருக்கே தொண்டு செய்த சாட்சியின் குடும்பம் சகரியா - எலிசபெத்து குடும்பம். இவர் களுக்கு ஆண்டவர் கொடுத்த அருட்கொடையான திருமுழுக்குநர் யோவானின் வாழ்வும் பணியும் எல்லோரையும் கவர்ந்தன. இந்தக் குடும்பத்தையும் மாதிரிக் குடும்பப் பட்டியலில் சேர்க்கலாமே? (லூக்கா 1:5-25, மாற்கு 1 : 1-9).

எருசலேமுக்கு வடமேற்கே அறுபது மைல் தொலைவில் அகுஸ்து ராயனுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ஏரோது அரசனால் கி.மு. 13இல் கட்டி முடிக்கப்பட்ட எழில் நகரம் செசரியா எனப் பெயர்பெற்றது. செசரியா என்றால் சீசரின் நகரம் என்பது பொருள். இது ஒரு துறைமுக நகர்; வணிகப் பெருநகர்; செல்வ நகர்; குட்டி ரோம் என அழைக்கப்பட்டது. இது யூதேயாவின் ரோமைத் தலைநகர். இங்கு கொர்நேலியு என்னும் பெயர் கொண்ட நூற்றுவர் தலைவர் தமது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். இவரும் இவரது வீட்டாரும் பக்தியுள்ளவர்கள்; தேவபயம் கொண்டவர்கள். இவர் எப்போதும் இறைவேண்டல் செய்வார். செபிக்கும்போதே இறைக்காட்சி கண்பார். தமது வீட்டில் வழிபாடு நடத்துவார். பேதுருவை அழைத்து தமது ஆராதனையில் பேச வைத்துத் தாமும் குடும்பமும் ஆராதனையில் பங்கு பெற்ற அனைவரும் ஆவியின் நிறைவுபெறச் செய்தார் (அப்போஸ்தலர் 10). இவரது குடும்பமும் ஒரு மாதிரிக் குடும்பமே.

இறையருளால் இந்நாட்களில் மாதிரிக் குடும்பங்கள் பெருகி வருகின்றன. யான் நாசரேத்தில் வாழ்ந்த நாட்களில் ஆவிக்குரிய மாதிரிக் குடும்பங்கள் பலவற்றோடு ஐக்கியம் கொள்ளும் பேறு பெற்றேன். நாகர்கோவிலில் வாழுகின்ற இந்நாட்களிலும் அத்தகைய மாதிரிக் குடும்பங்களைக் காணவும் உறவு கொள்ளவும் வாய்ப்பளித்து வருகின்ற தேவனைத் துதிக்கிறேன். ஒரு குடும்பத்திலிருந்தே பல மிஷனெரிகளைத் தாங்குகின்ற மாதிரிக் குடும்பங்கள்; தசம பாகத்தைத் தவறாது இறைப்பணிக்குக் கொடுக்கும் இறைமக்கள்; செப ஐக்கியங்களை இயக்கிக் கொண்டிருக்கும் செப வீரரும் வீராங்கனை களும்; சபைகளில் ஆவிக்குரிய அனுபவங்களை வளர்க்கத் துடிக்கும்

சபைக் குழுக்கள்; ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இறைப்பணியை அர்ப்பணத்தோடு செய்து கொண்டிருக்கும் அன்புக் குடும்பங்கள்; எவ்வித பலனையும் எதிர்பார்க்காமல் திருப்பணியும் அருட்பணியும் ஆற்றி வரும் அருட்குடும்பங்கள்; ஆண்டவருக்கென வாழ்வதில் ஏற்படுகின்ற பெருமகிழ்ச்சியையும் பேராசீர்வாதத்தையும் சாட்சியாகக் கூறிவரும் இன்பக் குடும்பங்கள் ஏராளம்! ஏராளம்! திருமண்டலத் தலைவர்களின் குடும்பங்கள் எல்லாம் இவ்வித மாதிரிக் குடும்பங்களாக மாறினால் மாபெரும் எழுப்புதல் ஏற்படுமே?

3.6 எழுப்புதல் குடும்பம்

திருமறையில் காணப்படுகின்ற எழுப்புதல் குடும்பம் ஒன்றை மையமாக வைத்து எழுப்புதல் குடும்பத்தின் இயல்புகளை விளக்க விரும்புகிறேன். பேதுருவின் குடும்பத்தை எழுப்புதல் குடும்பமாகக் கொள்ளலாம். பேதுருவைக் குறித்து இரண்டாம் இயலில் விளக்கமாகக் கண்டோம். பேதுருவின் குடும்பத்தில் பேதுரு மட்டும் அல்ல; அவர் தம்பி அந்திரேயா, அவர் மனைவி ஆகியோரும் அருட்பணியாளர்களாய்த் திகழ்ந்தனர் என்று திருமறை கூறுகிறது. பேதுருவின் மாமி இயேசுவால் அற்புத சுகம் பெற்று அவருக்குப் பணி செய்த பெண்மணி. அவர் பெற்றோர் மற்றோர் யாவரும் இதயத்திலும் இல்லத்திலும் இயேசுவை ஏற்றுக் கொண்ட இறையடிகளாவர். எனவேதான் இயேசு கிறிஸ்து கப்பர்நகூம் வரும்போதெல்லாம் பேதுருவின் இல்லம் வந்து உணவருந்துவதும், உறவாடுவதும், ஓய்வு எடுப்பதும் வழக்கம். பேதுருவின் இல்லமே இயேசுவின் தலைமை அலுவலகம் என்று பார்க்ளே கூறுகிறார். இந்த எழுப்புதல் குடும்பத்தின் சிறப்புகளைச் சிந்திப்போம்.

3.6.1 அன்புக் குடும்பம்

பேதுருவின் குடும்ப உறுப்பினர் யாவரும் ஆவியின் அருள்வரம் பெற்ற அடியவர் ஆவர். ஆவிக்குரியவர்களிடம் காணப்பட வேண்டிய அரிய பண்புகள் அனைத்தும் இந்த எழுப்புதல் குடும்பத்தில் இருப்பதைக் காண்கிறோம். அப்பண்புகளில் ஒன்று அன்பு. இந்த அன்பு சாதாரண அன்பு அல்ல. அசாதாரண அன்பு. எப்படி? பேதுருவின் வீடு பண்ணை வீடு. அதாவது பேதுருவுக்கு மட்டும் சொந்தமான வீடு அல்ல. பேதுரு,

அந்திரேயா என்பவர்களுடைய வீடு என்று மாற்கு (1:29) கூறுகிறார். அப்படியானால் அவ்வீட்டில் அவர்கள் பெற்றோரும், சகோதர சகோதரி களும் வாழ்ந்திருப்பர். அவர்களுடன் பேதுருவின் மனைவியும் மாமியும் (மனைவியின் தாயார்) வாழ்ந்து வந்தார்கள் (மத்தேயு 8:14). ஆகவே தான் பேதுருவின் குடும்பத்தை அன்பின் குடும்பம் என அழைக்கிறோம்.

பொதுவாக மாமியார் மருமகள் சேர்ந்து வாழ்வது கடினம், கணவனை நீண்ட நாள் பிரிந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டால் மனைவி தன் தாய் வீட்டிற்குச் சென்று தங்கி விடுவாள். இங்குப் பேதுரு தமது குடும்பத்தைப் பிரிந்து இயேசுவின் திருப்பணியில் இணைந்து விட்டார். பேதுருவின் மனைவி தாய் வீட்டிற்குப் போவதற்குப் பதிலாகத் தாயார் மருமகன் வீட்டில் வந்து தங்குகிறார். என்ன விந்தை? பேதுருவின் குடும்பம் அசாதாரண அன்புக் குடும்பம். ஆகவேதான் பேதுருவின் மாமி பேதுருவின் கூட்டுக் குடும்பத்தில் வந்து வாழ்கிறாள்.

இன்றையக் கிறிஸ்தவக் குடும்பங்களின் நிலையைச் சற்று எண்ணிப் பார்ப்போமா? நாம் பொதுவாகக் கூட்டுக் குடும்ப வாழ்வை விரும்புவதில்லை. தனிக்குடும்ப வாழ்வையே விரும்புகிறோம்.

> *மனிதன் தன் தாய் தந்தையரை விட்டுத் தன் மனைவியோடு கூடி இருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர் (ஆதியாகமம் 2:24)*

என்ற திருவசனத்தை இதற்கு ஆதாரமாகக் கொள்கிறோம். நல்லது தான். நானும் தனிக்குடும்ப வாழ்வை ஆதரிப்பவன்தான். ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் கூட்டுக் குடும்பம் தேவைப்படுகிறது அல்லவா? முதிர் வயதான பெற்றோர். ஆதரவற்றோர், தனிப்பணியாள் அமர்த்திடப் பொருளாதாரமும் இல்லாதோர். இவர்களைத் தனித்து விட்டு விட்டு அன்பு மகன் மனையியுடன் தனிக் குடித்தனம் நடத்துவது சரியாகுமா? வறிய குடும்பங்களில் கூட்டுக் குடும்பம் கட்டாயத் தேவை ஆகிறது. இவ்விதக் கட்டாயத் தேவைகளில் மட்டுமே கூட்டுக் குடும்பம் தேவை என்கிறோம் நாம். ஆனால் சிவகாசி போன்ற வணிக நகர்களில் பெரிய செல்வந்தர்களும் கூட்டுக் குடும்பமாக அன்புற்று இன்புற்று எழில்பெற்று வாழ்கின்றார்களே!

நமது கூட்டுக் குடும்பங்களில் அன்பு உண்டா? ஒருவர் வாழ்வில் எல்லாரும் மகிழ்தலும், ஒருவர் தாழ்வில் எல்லாரும் துக்கித்தலும் உண்டா? மருமகளை மாமியாரும், மாமியாரை மருமகளும் அதிகாரம் செலுத்தும் போக்கு மாறி இருக்கிறதா? ஒத்துப்போகும் இயல்பு இருக்கிறதா? பணிவும், பொறுமையும், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் உண்மை அன்பும் இருக்கிறதா? நம்மில் அன்புக் குடும்பங்கள் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஆவிக்குரிய முதிர்ந்த நிலையில் உள்ள சில மாமியார், மருமகள், மாமனார், நாத்தனார் கூட ஒருவருக்கொருவர் குற்றமும் குறையும் சொல்லித் திரிகின்றனரே! வீட்டு வாழ்க்கையை அகப்பொருள் என்பர். அகப்பொருள் என்றால் வெளியே சொல்லும் இயல்பு இல்லாத வாழ்க்கை என்பது பொருள். ஆனால் வீட்டுக் காரியங்களை வெளியே சொல்லித் தூற்றித் திரியும் விசுவாசிகளை என்ன செய்வது?

இரசியாவின் பொதுவுடைமைத் தலைவனாய்த் தீவிர பணியாற்றிய லெனின் ஒரு கத்தோலிக்க ஆலயப் பணியாளன். அவன் தந்தை ஆலய அருள் தந்தையிடம் தன் மகன் சொற்கேளாதவனாய் உள்ளானே என் செய்வது? என்று கேட்டார். அருள் தந்தை அவனை நன்றாகப் பிரம்பால் அடித்து உதை. அப்படியானால் தான் திருந்துவான் என்றார். தந்தை மீதும் அருள் தந்தை மீதும் அளவற்ற அன்பு கொண்டு தொண்டு புரிந்து வந்த லெனின் இச்சொற்கள் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். கழுத்தில் கிடந்த சிலுவைக் கயிற்றை அறுத்து அவர்கள் காலடியிலேயே வீசி விட்டு வெளியேறினான். அதன்பின்னர் அவன் வீட்டிற்கு வரவே இல்லை. சாதாரணப் போர் வீரனாகப் பட்டாளத்தில் சேர்ந்தான். படிப்படியாய்ப் பதவி உயர்வு பெற்றுப் படைத்தலைவன் ஆனான். இறுதியாகப் பொதுவுடைமை இரஷியாவின் தலைவன் ஆனான். கிறிஸ்தவன் ஏன் கம்யூனிஸ்டாக மாறினான். அன்பற்ற குடும்பச் சூழல்தானே அவனைக் கெடுத்தது?

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்
இன்பக் குடும்பம் பூலோக சொர்க்கம்
அன்புக் குடும்பம் இறைவனின் இல்லம்
அந்தக் குடும்பம் எழுப்புதல் குடும்பம்

என்பதை உணர்ந்து நல்ல குடும்பமாய், இன்பக் குடும்பமாய், அன்புக் குடும்பமாய், அருள் குடும்பமாய், எழுப்புதல் குடும்பமாய் வாழ்வோமாக!

3.6.2 அற்புதக் குடும்பம்

இயேசு கிறிஸ்து பேதுருவின் வீட்டிற்கு வந்த போது பேதுருவின் மாமி காய்ச்சலால் படுத்திருந்தாள். இயேசு அவளது கையைத் தொட்டதும் காய்ச்சல் அவளை விட்டு நீங்கியது. அவள் எழுந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தாள் (மத்தேயு 8:14-15). இது இயேசுவின் அற்புதச் செயலாக முதல் மூன்று நற்செய்தி நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. காய்ச்சலைச் சுகமாக்கியது ஒரு அற்புதம் ஆகுமா? காய்ச்சலில் பலவகை உண்டு. சில குறிப்பிட்ட காலங்களில் சிலவகைக் காய்ச்சல் வருவதுண்டு. தொடர் உழைப்பால் அலுப்புக் காய்ச்சல் ஏற்படுவதுண்டு. இவ்வகைக் காய்ச்சலுக்குக் கசாயம், ஓய்வு, சாதாரண மருந்து மாத்திரைகள், உணவு மாற்றங்கள் ஆகியவையே சுகம் தரும். ஆனால் அன்று இஸ்ரவேல் நாட்டில் மூவகைக் கொடிய காய்ச்சல்கள் இருந்தன.

3.6.2.1 மால்டா காய்ச்சல் (Malta Fever)

இதன் அடையாளம் பெலவீனம். இக்காய்ச்சல் பல மாதங்கள் தொடர்ந்து இருக்கும். இது இன்றைய எய்ட்ஸ் போன்றது. உடலைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பெலவீனப் படுத்தி இறுதியில் கொன்று விடும். இது ஒரு கொலைக் காய்ச்சல்.

3.6.2.2 முறைக் காய்ச்சல்

இது இன்றைய Typhoid போன்றது. விட்டு விட்டு வரும். அந்நாட்களில் இந்நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டில் கூட இவ்விதக் காய்ச்சலால் மாண்டோர் பலர். இந்நோய் தாக்கியவர் உயிர்பிழைத்தல் அரிதே.

3.6.2.3 மலேரியாக் காய்ச்சல்

யோர்தான் நதி கலிலேயாக் கடலில் கலக்கின்ற கப்பர்நகூம் பகுதியில் ஒருவகை சதுப்பு நிலம் காணப்படுகிறது. அங்கு ஏராளமான கொசுக்கள் உண்டு. எனவே மலேரியாக் காய்ச்சல் வருவது வழக்கம்.

இக்காய்ச்சலின் தொடர்ச்சியாய் மஞ்சட்காமாலை தாக்குவதும், இதுவே நச்சுக் காய்ச்சலாக மாறி உயிர்க் கொல்லியாகி விடுவதும் உண்டு.

பேதுருவின் மாமி இம்மூவகைக் காய்ச்சலில் ஒன்றால் பாதிக் கப்பட்டிருந்தாள். அவள் பெரும்பாலும் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப் பட்டிருக்கலாம் என்று பார்க்ளே கூறுகிறார். பேதுருவின் மாமி பெற்ற சுகம் அற்புத சுகமே. அற்புத சுகம் பெற்ற குடும்பம் அற்புதக் குடும்பமே. அற்புதக் குடும்பம் எழுப்புதல் குடும்பம் ஆகும் அன்றோ?

கிறிஸ்தவக் குடும்பங்கள் அற்புதக் குடும்பங்களாய் அமையட்டும். அற்புதத்திற்குப் பல்வேறு விளக்கம் சொல்லுவர். நோய்கள் நீங்கி சுகம் பெறுவது ஓர் அற்புதமே. நோய் என்பது உடலின் வியாதி மட்டும் அல்ல. கவலை ஒரு நோய். கண்ணீர் ஒரு நோய். கடன் ஒரு நோய். வறுமை ஒரு நோய். தோல்வி ஒரு நோய். நோய் என்ற சொல்லுக்குத் துன்பம் என்ற ஒரு பொருளும் உண்டு. வாழ்வில் ஏற்படுகின்ற துன்பங்கள் ஏராளம். குழந்தைப் பேறு இல்லாவிட்டால் அது பெரியதொரு துன்பம். அத்துன்ப நோய் நீங்கிக் குழந்தைப் பேறு கிடைப்பது அற்புதம். பெற்ற குழந்தையை வளர்க்க, படிக்க வைக்கப், பட்டதாரியாக்க, ஏற்ற ஓர் அலுவல் கிடைக்கச் செய்ய, திருமணம் நடத்தி வைக்கத், திருமண வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாய் அமைக்க அப்பப்பா! ஒவ்வொன்றிலும் ஏற்படுகின்ற துன்பங்கள் எத்தனை? இத்தனை துன்பங்களும் இயேசுவால் தான் நீங்க வேண்டும்; நீங்கும். இயேசுவை நம்புங்கள். இயேசுவை இதய தெய்வமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். கிறிஸ்தவனுக்கு இயேசுதானே இதய தெய்வம். இயேசுவிடம் உங்கள் துன்பங்களைச் சொல்லுங்கள். அவர் அற்புதம் செய்வார். அற்புதக் குடும்பமாய் மாறுங்கள்.

3.6.3 அருட்பணிக் குடும்பம்

பேதுருவின் மாமி காய்ச்சல் நீங்கி சுகம் பெற்றதும் இயேசு வுக்குப் பணி செய்தாள். இயேசுவுடன் வந்திருந்த மற்றவர்களுக்கும் உபசரிப்புகள் செய்தாள். தொடர்ந்து இயேசுவுக்கும் மற்றவர்களுக்கும் தொண்டு செய்தாள் என்று கூறப்படுகிறது. இத்தொண்டைத்தான் அருட்பணி என்கிறோம். இயேசுவால் அற்புத சுகம் பெற்றோர் செய்ய

வேண்டிய பணி அருட்பணியாகும். ஆனால் இயேசுவின் அற்புத சுகத்தைப் பெற்ற சிலர் எப்படி வாழ்கிறார்கள் என்பதை ஆஸ்கார் வில்டு (Oscar Wilde) என்பார். The best short story in the world - உலகின் மிகச்சிறந்த சிறுகதை-என்ற பெயரால் எழுதித் தெரிவிக்கிறார். அதனை W.B. ஈட்ஸ் (Yeats) என்பார் தமது வாழ்க்கை வரலாற்றில் `அதன் அச்சந்தரும் அழகு' (Its Terrible beauty) என்ற பெயரில் எளிமைப் படுத்தி எழுதி இருக்கிறார். அதன் தமிழ் மொழி பெயர்ப்புக் கீழே தரப்படுகிறது.

இயேசு கிறிஸ்து சமவெளியிலிருந்து ஒருநகருக்கு வந்தார். அவர் முதல்தெரு வழியாய் நடந்து சென்ற போது குடிகாரன் ஒருவன் வாசல் கட்டைமீது புரண்டு கூச்சலிடுவதைக் கண்டார். அவனிடம் நீ ஏன் குடித்து உன் ஆத்துமாவை அழிக்கிறாய்? என்று கேட்டார். அவன் ஆண்டவரே, நான் ஒரு தொழு நோயாளியாய் இருந்தேன். நீர்என்னைச் சுகமாக்கினீர். நான் என்ன செய்யமுடியும்? என்றான். சற்று அப்புறம் போகும் போது ஒரு இளைஞன் விலைமகள் ஒருத்தியின் பின்னால் செல்வதைக் கண்டார். இயேசு அவனிடம், கூடா ஒழுக்கத்தால் உன் ஆன்ம நலனை ஏன் குன்றச் செய்கிறாய்? என்று கேட்டார். அவன் ஆண்டவரே, நான் குருடனாய் இருந்தேன். நீர்என்னைக் குணமாக்கினீர். இதைத் தவிர நான் வேறு என்ன செய்யமுடியும்? என்றான். இறுதியாக நகரின் நடுவே ஒரு முதியவர் கூனிக் குறுகித் தரையில் கிடந்து அழுது கொண்டிருப்பதைக் கண்டார். நீ ஏன் அழுகிறாய்? என்று இயேசு கேட்டபோது அவர், ஆண்டவரே, நான் மரித்தேன். நீர் என்னை உயிரோடு எழுப்பினீர். நான் என்ன செய்யமுடியும்? அழுகிறேன் என்றார்.

பேதுருவின் மாமியார் இயேசு தனக்குத் தந்த சுகமாகிய அருட்கொடையினை இயேசுவுக்கும் மற்றோர்க்கும் அருட்பணியாற்றப் பயன்படுத்தினார். நாம் ஆண்டவரிடம் இருந்து பெற்ற சுகம், செல்வம், ஞானம், பட்டம், பதவி, ஆவியின் வரம் மற்றுமுள்ள பேறுகளை எதற்காகப் பயன்படுத்துகிறோம்? பேதுருவின் குடும்பத்தில் பேதுருவும் அந்திரேயாவும் இயேசுவின் அடியவரான அருள்தொண்டர். பேதுருவின் மனைவி பேதுருவுடன் இணைந்து அருள் தொண்டாற்றிய அருள்

மங்கை (1கொரிந்தியர் 9:5). இவர் பேதுருவுக்கு முன்னதாகவே இரத்தச் சாட்சியாய் மரித்தார் என்றும், பேதுருவிடம் எந்தச் சூழ்நிலையிலும் இயேசுவுக்குச் சாட்சியாய் வாழ மறுத்துவிடக் கூடாது என்ற உறுதி மொழியை வாங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது. பேதுருவின் மாமி மற்றுமுள்ள உறுப்பினர் யாவரும் தத்தம் தகுதிக்கேற்ப அருட்பணி ஆற்றினர். பேதுருவின் குடும்பம் அருட்பணிக் குடும்பம். எழுப்புதலின் கருவிகளைக் கொண்ட எழுப்புதல் குடும்பம்.

3.7. முடிவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் கோடீசுவரராய்த் திகழ்ந்தவர் எட்வர்ட் ஸ்டட். இவருக்கு இந்தியாவில் காப்பி, தேயிலைத், தோட்டங்கள் (Estates) இருந்தன. இவர் ஒருமுறை D.L. மூடியின் தொடர் கூட்டங்களில் பங்கு கொண்டு முற்றிலுமாய்த் தம்மை ஆண்டவருக்கு அர்ப்பணித்தார். இவர் இரட்சிக்கப்பட்டதும் இவரது வாழ்க்கை முழுமாற்றம் பெற்றது. இவரது கலைக்கூடம் (Auditorium) செபக்கூடமாக மாறிற்று. தமது செபக்கூடத்தில் அடிக்கடி நற்செய்தியா ளர்களை அழைத்துக் கூட்டங்கள் நடத்தினார். இவரது செபக்கூடத்தில் இரண்டாயிரம் பேர் அமர்ந்து ஆராதனை செய்வர். கூடம் நிரம்பி வழியத் தக்கதாக மக்களைக் கூட்டி அவர்களை ஆண்டவருக்கென ஆதாயம் செய்வதே அவருக்குப் பெரும் மகிழ்ச்சி. அவருக்கு மூன்று மைந்தர்கள் இருந்தனர். அவர்கள் கேம்பிரிட்ஜ் (Cambridge) திரித்துவக் கல்லூரியில் பயின்றனர். மூவரும் பல்கலைக் கழகக் கிரிக்கெட் வீரர்கள். இவர்களைக் கிரிக்கெட் மும்மணிகள் என்று பத்திரிகைகள் பாராட்டின. இவர்கள் சென்ற இடம் எல்லாம் வாகை (வெற்றிமாலை) சூடினர். இவர்களை D.L. மூடியின் கூட்டங்களுக்கு அழைத்துச் சென்றார். இவர்கள் ஈட்டன் உயர்நிலைப்பள்ளி விடுதியில் தங்கிப் படித்தபோது இவர்கள் தந்தை ஒரு திருப்பணியாளரிடம் தம்மக்களைப் பற்றிக் கூறி அவர்களை எப்படியாவது மீட்பின் அனுபவத்திற்குள் வழிநடத்திட வேண்டினார்; செபித்தார். ஒருநாள் அத்திருப்பணியாளரைத் தமது அரண்மனைக்கு அழைத்துத் தங்க வைத்தார். தம் மக்களையும் விடுதியிலிருந்து வீட்டிற்கு அழைத்தார்.

திருத்தொண்டர் எட்வர்ட் ஸ்டட்டின் மக்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசி செபித்து அவர்களை ஆண்டவருக்குள் வழிநடத்தினார். பள்ளியில் பயின்ற போதே மூவரும் ஒரே நாளில் மீட்கப்பட்டனர். பிற்காலத்தில் அவர்களில் மூத்தவர் - கினஸ்டன் ஸ்டட் (Kynaston Studd) மாணவர் கிறிஸ்தவ இயக்கத்தை (Students Christian Movement) உருவாக்கினார். இரண்டாம் மகன் ஜார்ஜ் ஸ்டட் நற்செய்தித் தொண்டராய் மாறினார். மூன்றாம் மகன் C.T. ஸ்டட் (1861-1931) புகழ்பெற்ற மிஷனெரி ஆனார். நம் குடும்பங்களும் இதுபோன்ற எழுப்புதல் குடும்பங்களாய் மாற ஜெபிப்போம்; செயல்படுவோம்.

4. திருச்சபையில் எழுப்புதல்

4.1 முன்னுரை

திருச்சபையைக் குறிக்கும் மூல கிரேக்கச் சொல் எக்கிளேசியா என்பதாகும். இச்சொல் சுமார் 110 முறை புதிய ஏற்பாட்டில் வருகின்றது. பழைய ஏற்பாட்டில் சபையைக் குறிக்கின்ற காஹால், ஏடா என்னும் இரண்டு எபிரேயச் சொற்கள் காணப்படுகின்றன. காஹால் சுமார் 120 முறையும், ஏடா 149 முறையும் வருகின்றன. இவற்றின் பொருள் இறைவனால் அழைக்கப்பட்ட மக்கள் கூட்டம் என்பதாகும். உலகில் உலகிற்குரிய தீய உணர்வுகளோடும் செயல்களோயும் வாழுகின்ற மக்களை இறைவன் அழைக்கிறார். அவர்களைத் தீமையினின்று விடுவிக்கிறார்; தூயவர்களாக மாற்றுகிறார். அவர்கள் இறைவனில் நிலைத்திருந்து தங்களைத் தீமையினின்று விடுவித்துத் தூயவர்களாக மாற்றிய இறைவனின் பணியைச் செய்ய வேண்டும்; தங்களைத் தூயவர்களாகக் காக்க வேண்டும்; மற்றவர்களைத் தூயவர்களாக மாற்ற வேண்டும்; தங்கள் வாழ்வில் தீமைகளைப் போக்கி நன்மைகள் நிறைய இறையருளையும் இறையாற்றலையும் பெற வேண்டும்; மற்றையோர் வாழ்விலும் தீமைகள் நீங்கி நன்மைகள் கிடைத்திடத் தொண்டாற்ற வேண்டும். இதுவே திருச்சபையின் திருப்பணியாகும். திருச்சபையின் எழுப்புதல் பற்றிய விளக்கங்களைச் சிந்தனை செய்வோம்.

4.2 திருச்சபையின் எழுப்புதல்

இன்றையத் திருச்சபையில் தலைமைப் பேராயர்கள், பேராயர்கள், குருக்கள், போதகர்கள், உபதேசிமார், வேதாகமப் பெண் மணிகள், ஆலயப் பணியாளர்கள், நற்செய்தியாளர்கள், சபைத் தலைவர்கள் - சபைக்குழு - ஆயர் மண்டலக்குழு - சபை மன்றக்குழு,

பேராயப் பெருமன்றக்குழு, செயற்குழு மற்றும் உ... ...ர்மட்டக்குழு உறுப்பினர்கள்; ஒவ்வொரு குழுவிற்கும் உரிய தலைவர், செய...லாளர், பொருளாளர், கணக்கர்; கல்லூரிகள், பள்ளிகள், மருத்துவ மனைக... முதலான ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உரிய தலைவர், தாளாளர், பணியாளர், ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள்; பதவியேதும் இல்லாத பக்த கோடிகளான இறைமக்கள், அப்பப்பா! எத்தனை வகை மக்கள்! இவர்கள் எல்லாரும் மீட்கப்பட்டுத், தூயாவியின் நிறைவைப் பெற்றுத் தூய வாழ்வு வாழ்ந்து, இறையருளையும் இறையாற்றலையும் பெற்றுத் திருப்பணியும் அருட்பணியும் ஆற்ற வேண்டுமே? பணிகள் வெற்றி சிறக்க வேண்டுமே? அப்படியானால் தானே திருச்சபையில் எழுப்புதல் ஏற்படும்.

புதிய ஏற்பாட்டில் திருச்சபைக்குக் கிறிஸ்துவின் உடல், எழில் மாளிகை, மந்தை, திராட்சைச் செடி, ஆண்டவரின் ஆலயம் முதலான பல உருவகப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உடலில் ஒரு உறுப்பு நோயுற்றால் உடல் முழுவதும் வலிக்கும். மாளிகையில் சுவர்ச் செங்கல் ஒன்று பழுதுபட்டால் அல்லது கூரையின் ஒரு பகுதியில் ஒழுக்கு ஏற்பட்டால் மாளிகையின் சிறப்புப் போய்விடும். மந்தையில் ஒரு ஆடு காணாமற் போனால் பெருங்கவலை. ஒரு ஆடு கள்ள ஆடாகி அயலார் தோட்டத்தில் குதித்ததால் அவச்சொல். திராட்சைச் செடியின் கொடி ஒன்றில் புழுநோய் தோன்றினால் செடி எல்லாம் பரவுமே! ஆலயத்தில் ஒரு தலைமைப் பேராயர், ஒரு பேராயர், ஒரு ஆயர், ஏதேனும் ஒரு திருப்பணியாளர், ஒரு திருமண்டலச் செயலாளர், ஒரு தாளாளர், ஒரு பொருளாளர் ஏன்? ஒரு சபையார் இழிதொழில் செய்தாலே திருச்சபையின் புகழ் கெடுமே! எனவே திருச்சபையார் யாவரிலும் எழுப்புதல் ஏற்படுவதே திருச்சபையின் எழுப்புதல் ஆகும்.

இக்கருத்து ஏற்புடையதாகுமா? எல்லாரும் மீட்கப்பட்ட தூயோராய் வாழ முடியுமா? திருமுழுக்குநர் யோவானின் அருட்செய்தியைக் கேட்ட யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் திருமுழுக்குப் பெற்றார்கள் (மாற்கு 1:5). இங்கு யாவரும் என்பது பெரும்பான்மையைக் குறிக்கிறது. யூத குருக்கள் தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், பரிசேயர், சது

சேயர், யூத ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் ஆகியோரில் பலர் யோவானின் அருட்செய்தி கேட்டு மனந்திரும்பவில்லை. அவர்கள் மனந்திரும்பி இருந்தால் இயேசுவைச் சிலுவையில் தூக்கி இருக்க மாட்டார்களே? எனவே பெரும்பான்மைக் கிறிஸ்தவர் யாவரிலும் உண்மையான எழுப்புதல் ஏற்படுவதே திருச்சபையின் எழுப்புதல் எனலாம். ஆனால் திருச்சபைத் தலைவர்களில் அதாவது குருத்துவத் தலைவர்கள் சபையின் மக்கள் தலைவர்கள் எல்லாரிலும் எழுப்புதல் ஏற்படவேண்டியது கட்டாயத்தேவை. எழுப்புதல் வாழ்வு பெறாதவர்கள் தலைவர்களாகத் தகுதியற்றவர்கள். தகுதியற்றவர்கள் தலைவர்களானால் தேவ தண்டனைக்கு உரியவர்கள் ஆவர். யான் பெரும்பான்மைக் கிறிஸ்தவர் என்பது பொறுப்பேதும் இல்லாத பொதுச் சபையாரில் பெரும்பான்மையினரையே குறிக்கும்.

4.3 மாதிரி திருச்சபை

யான் குறிக்கின்ற எழுப்புதல் திருச்சபையை இவ்வுலகில் காண முடியுமா? முடியும். ஆதித் திருச்சபையை அத்தகைய எழுப்புதல் திருச்சபையாகக் கொள்ளலாமே. ஆதித்திருச்சபையின் தலைவர்களான அப்போஸ்தலர்களும், ஸ்தேவான், பிலிப்பு முதலான உதவியாளர்களும் அப்பழுக்கற்றவர்கள்; ஆவியின் அருளாற்றல் பெற்றவர்கள்; அற்புதச் செயல்களை நிகழ்த்தியவர்கள்; தன்னலமே இல்லாத தியாகிகள்; ஆயிரம் ஆயிரமான ஆத்துமாக்களை ஆண்டவருக்கென ஆதாயம் செய்து திருச்சபையை வளர்த்தவர்கள்; திருச்சபையைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்கள். ஆதித் திருச்சபையாரும் ஆவியின் அனுபவங்களை முறையாக நிறைவாகப் பெற்றுச் சாட்சி வாழ்வு வாழ்ந்தனர். எனவே ஆதித் திருச்சபையை மாதிரி திருச்சபை எனலாம்.

4.3.1 மாதிரி திருச்சபையின் வளர்ச்சி

சபைகள் விசுவாசத்தில் வேரூன்றி எண்ணிக்கையில் நாள்தோறும் பெருகின (அப்போஸ்தலர் 16:5)

The church grew daily in faith and numbers (Living Bible). திருச்சபை பிறந்த நாள் இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாம் நாள் ஆகும்.

அந்நாளினைப் பெந்தேகோஸ்தே பெருநாள் என்றும் தூய ஆவியரின் திருநாள் என்றும் கூறுவர். திருச்சபையின் முதல் உறுப்பினர் எண்ணிக்கை 120 (அப். 1:14). முதல் நாளிலேயே பேதுருவின் அருட்செய்தி கேட்டு மனமாறித் திருச்சபையில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 3000 (அப். 2:41). பேதுருவின் இரண்டாம் அருட்செய்தி கேட்டு இயேசு கிறிஸ்துவை விசுவாசித்துத் திருச்சபையில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 5000 (அப். 4:4). அப்போஸ்தலருடைய கையால் பல அடையாளங்களும் அற்புதங்களும் மக்களிடையே நடைபெற்றன. அதனால் திரளான ஆண்களும், பெண்களும் விசுவாசித்துத் திருச்சபையில் சேர்ந்து கொண்டனர் (அப். 5:14). தேவ வசனம் மேன்மேலும் பரவியது. எருசலேமில் சீடர்களின் தொகையும் பெருகிக் கொண்டே வந்தது. யூத குருக்களிலும் பெருங்கூட்டத்தினர் இயேசுவை விசுவாசித்தனர் (அப். 6:7). எருசலேமில் கிறிஸ்தவர்களுக்குத் துன்பம் பெருகியது. சவுல் வீடுகள் தோறும் நுழைந்து ஆடவரையும் பெண்டிரையும் இழுத்துக் கொண்டு போய் சிறையில் அடைத்தான். அதனால் கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டனர். சிதறியவர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர். பிலிப்பு என்பவர் சமாரியாவின் நகர் ஒன்றிற்குச் சென்று நற்செய்தி அறிவித்தார். ஆண்டவர் அவரைக் கொண்டு அற்புதங்களை நிகழ்த்தினார். அசுத்த ஆவிகள் வெளியேறின. திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் சுகம் பெற்றனர். சமாரியரும் திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர் (அப். 8:12).

யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளில் எங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின. (அப். 9:31). செசரியாவில் வாழ்ந்து வந்த ரோமைப் படைப்பிரிவின் நூற்றுவர் தலைவனான கொர்நேலியு வீட்டில் கூடி செபித்த ரோமைப்படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குப் பேதுரு அருட்செய்தி அறிவித்த போது அவர்கள் மீது ஆவியானவர் ஊற்றப்பட்டார். ஆவியைப் பெற்ற அவர்கள் பரவசப் பேச்சுப்பேசித் தேவனைப் புகழ்ந்தார்கள். பேதுரு அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். செசரியாவில் விருத்தசேதனம் பெறாத ரோமை இனத்தவர் நடுவில் திருச்சபை தோன்றியது (அப்.10:44-48). ஆசியாக் கண்டத்தின் எருசலேம் மாநகரில் தோன்றி இஸ்ரவேல் நாடு முழுவதும் பரவிய கிறிஸ்தவம் பவுல் அடியாரின்

பணியால் சின்னாசியா, கலாத்தியா, கப்பதோக்கியா, பிரிகியா முதலான ஆசியப் பகுதிகளில் பரவி, அங்கிருந்து ஐரோப்பாக் கண்டம் சென்றது. ஐரோப்பாவின் முதல் கிறிஸ்தவக் குடும்பம் லீதியாளின் குடும்பம். அக்குடும்பத்துடன் குறி சொல்லும் ஆவியைக் கொண்டிருந்த அடிமைப் பெண்ணின் குடும்பம், சிறைச்சாலைக் காவலரின் குடும்பம் முதலான குடும்பங்களைக் கொண்ட பிலிப்பி சபையே ஐரோப்பாவின் முதல் திருச் சபையாகும் (அப். 16:12-40). பவுல் அடியாரின் அருட்பணியால் திருச் சபை ஐரோப்பாக் கண்டத்தில் வேகமாக வளர்ந்தது; செழித்தது; படர்ந் தது. மாவீரன் அலெக்சாந்தரின் தந்தை பிலிப்புவால் மக்கெதோனி யாவில் கட்டப்பட்ட பிலிப்பி பட்டணத்தில் திருச்சபையை உருவாக்கிய பவுல் அதே நாட்டில் அலெக்சாந்தரின் அலுவலர் காசன்டர் (Cassander) கட்டிய தெசலோனிக்கே பட்டணத்தில் நற்செய்தி அறிவித்தார். நற்செய்தி கேட்ட

யூதரில் சிலரும் கிரேக்கரில் திரளான மக்களும்
செல்வாக்கு மிக்கப் பெண்மணிகள் பலரும்
இயேசுவை விசுவாசித்துப் பவுலுடனும்
சீலாவுடனும் சேர்ந்து கொண்டனர் (அப். 17:4)

தெசலோனிக்கேயில் திருச்சபை தோன்றியது. அதைத் தொடர்ந்து பவுலார் மக்கெதோனியாவின் பெரோயா பட்டணத்தில் திருச்சபையை நிறுவினார்.

பெரோயா சபையார் தினந்தோறும் வேத வாக்கியங்களை
ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்
களைவிட நற்குணசாலிகளாய் இருந்தார்கள் (அப். 17:11)

பவுல் இத்தாலி நாட்டின் மக்கெதோனியப் பகுதிகளிலிருந்து கிரேக்க நாட்டிற்கு வந்தார். அங்கு ஏதென்சு (அத்தேனே) மாநகர மார்ஸ் (அரயோப்பாகு) மேடை மீது நின்று; 'அறியப்படாத ஆண்டவர்' என்ற தலைப்பில் ஆற்றிய அருட்செய்தி புகழ்மிக்க ஒன்றாகும். அச்செய்தி கேட்ட மார்ஸ் மேடை நீதிபதியான தியோனிசியு, தாமரி என்னும் பெண்மணி மற்றும் சிலர் விசுவாசிகளாயினர். இவ்வாறு ஏதென்சு மாநகரிலும் சபை உருவானது (அப். 17: 16-34). பின்னர் பவுலடிகளார் அன்று ஏழு இலட்சம் மக்கள் வாழ்ந்த கொரிந்து என்னும் கிரேக்கப் பட்டணத்திற்கு வந்து ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியருடன் தங்கி

அவர்களோடு கூடார வேலையும் செய்து, ஓய்வு நாட்களில் செப ஆலயங்களில் அருளுரை வழங்கினார். அதன் பயனாகப் புகழ்மிக்க யுஸ்து என்பவரின் குடும்பம், செப ஆலயத் தலைவர் கிறிஸ்பு என்பாரின் குடும்பம் மற்றும் கொரிந்தியரில் பலர் விசுவாசித்துத் திருமுழுக்குப் பெற்றனர். கொரிந்துவிலும் திருச்சபை உதயமானது (அப். 18:7-8).

ஆதித் திருச்சபையின் வளர்ச்சியில் இருபெரும் சக்திகள் தடைக்கற்களாகக் குறுக்கிட்டன. ஒன்று யூதத் திருச்சபை. இன்னொன்று ரோமைப் பேரரசு. ஆண்டவர் இவ்விரு மலைகளையும் உடைத்தெறிந்தார். கிபி. 70 ஏப்ரலில் ரோமைப் படை எருசலேமை முற்றுகையிட்டது. கி.பி. 70 ஆகஸ்டில் மதிற்கதவை உடைத்து ஒரு இலட்சம் ரோமைப் படைவீரர் தீத்துவின் தலைமையில் எருசலேமில் நுழைந்தனர். ஆகஸ்டு 6இல் தேவாலயம் இடிக்கப்பட்டது. அந்நாள் யூதரின் துக்கநாள். எஞ்சி நிற்கும் ஆலயச் சுவர் இன்று யூதர்களது அழுகையின் சுவராகக் காட்சி அளிக்கிறது. அப்படையெடுப்பில் 10,00,000 யூதர் கொன்று குவிக்கப்பட்டனர். 97,000 பேர் அடிமைகளாகக் கைது செய்து கொண்டு போகப்பட்டனர். கி.பி. 135 முதல் 138 வரை ரோமரின் இரண்டாம் படையெடுப்பு. இப்படை எடுப்பில் 4,80,000 பேர் கொல்லப் பட்டனர். எஞ்சிய யூதர் எல்லாரும் புண்ணிய பூமியாகிய இஸ்ரவேல் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டனர். வெளியேற்றப் பட்டவர்கள் உலக நாடுகள் எங்கும் பரவி அவதியுற்றனர். செர்மனியில் ஒருமுறை பஸ்கா பண்டிகையின் போது தங்கள் தலைப் பிள்ளைகளைப் பிடித்துச் சமைத்துச் சாப்பிட்டு விட்டனர் என்று பொய்க்குற்றம் சுமத்தி 2000 யூதர்களை வரிசையாக நிறுத்தி எரித்துக் கொன்றனர். இரண்டாம் உலகப் பெரும் போரில் செர்மன் அதிபரான ஹிட்லர் 6,00,000 யூதரைக் கொன்று குவித்தான். அவர்கள் கொழுப்பினால் சோப்பு செய்தான். 1800 ஆம் ஆண்டு வரை ஒரு யூதன் கூட இஸ்ரவேல் நாட்டில் கால் வைக்க அனுமதி கொடுக்கப்பட வில்லை. திருச்சபை வளர்ச்சியைத் தடுத்த யூதர் இலட்சம் இலட்சமாக அழிந்தனர். திருச்சபை தழைத்தது; செழித்தது.

சீசர் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளாத கிறிஸ்தவர்களையும்

திருச்சபையையும் அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு கிறிஸ்தவர் களைச் சித்திரவை செய்தனர் ரோமைப் பேரரசர்கள். கிறிஸ்தவத்தை எதிர்த்த ரோமைப் பேரரசன் ஒருவன் பயித்தியமானான். ரோம் நகர் எரிந்த போது வீணை வாசித்தான். ஒருவன் மைந்தனால் கொல்லப் பட்டான். வல்லேரியன் என்னும் ரோமைப் பேரரசன் போர்க்களத்தில் மரிக்கும் போது தனது இரத்தத்தைக் கையில் ஏந்தி வானத்துக்கு நேராக வீசி, `நசரேயனாகிய இயேசுவே நீ வென்றாய்; நான் தோற்றேன்' என்று கூறித் துடி துடித்துச் செத்தான். கான்ஸ்டன் டைன் என்னும் ரோமைப் பேரரசன் 312 இல் கிறிஸ்தவனாக மாறினான். ரோமைப் பேரரசு கிறிஸ்தவப் பேரரசாக மாறியது. அல்லேலூயா! எந்த வெளி சக்தியும் கிறிஸ்தவத்தை அழித்து விடுவதில்லை. கிறிஸ்தவத்தை அழிக்கத் துடித்த கம்யூனிசம் கவிழ்ந்தது; தோற்றது; மறைந்து கொண்டே இருக்கிறது. ஆனால் இன்று கோட்டைக்குள்ளே குத்து வெட்டு என்பார்களே? அது போலக் கிறிஸ்தவர்களுக்குள்ளேயே கொள்கையின் பெயரால் ஆயிரம் சபைப்பிரிவுகள். சபைகளுக்குள்ளே தேர்தலின் பெயரால் பலபிரிவினைகள். பதவியையும் பணத்தையுமே குறிக்கோளாகக் கொண்டு கொஞ்சம் கூட சாட்சியின் வாழ்க்கை இல்லாத திருமண்டலத் தலைவர்களால் பெருத்த அவமானம். நீதிமன்ற வழக்குகளும், வாதுகளும், போட்டிகளும், பொறாமைகளும், ஒருவரை ஒருவர் வீழ்த்தக் கையாளப்படும் முறைகளும் எத்துணை கீழ்த்தர மானவை. கப்பலில் பயணம் செய்பவர்களே ஓட்டை போட்டும் குண்டு போட்டும் கப்பலைத் தாக்கினால் கப்பலும் கவிழும்; பயணிகளும் சாவார் களே! தன்னலத் தலைவர்களே! மனந்திரும்புங்கள்; திருச்சபையைக் காப்பாற்றுங்கள்.

4.3.2 மாதிரியின் இரகசியம்

ஆதித் திருச்சபை மாதிரி திருச்சபையாகத் திகழ்ந்தது. அதன் திருத்தூதுவர்கள் மாதிரித் தூதுவர்கள். அதன் தீர்க்கர், நற்செய்தி யாளர், ஆயர்கள், போதகர்கள், மூப்பர்கள், உடன் ஊழியர்கள், சபையார் யாவருமே மாதிரி மனிதர்கள். ஆதித் திருச்சபை வளர்ந்த வகையைப் பாரீர். அச்சபை நாள்தோறும் விசுவாசத்திலும் எண்ணிக்கையிலும்

பெருகியது. முதல் நூற்றாண்டிலேயே எருசலேம் திருச்சபை உலகத் திருச்சபையாக வளர்ந்தது. ஏழைகளும் ஆதரவற்றவர்களும் இருக்கக் கூடாது; எல்லாருக்கும் எல்லாப் பேறுகளும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கு டன் கிறிஸ்தவப் பொதுவுடைமை உதயமானது. ஆதித்திருச் சபையில் குருத்துவத் துறையிலும் சபைமக்கள் தலைமையிலும் தன்னலத்தைக் காணவே முடியவில்லையே! இதன் இரகசியம் என்ன?

4.3.2.1. எல்லாரும் மீட்கப்பட்டோர்

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:47)

ஆதித் திருச்சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களே சபை உறுப்பினர் ஆயினர். ஆகவே சபையார் யாவரும் மீட்கப் பட்டோர் ஆவர். நமது சபைகளில் இரட்சிக்கப்பட்டோர் எத்தனை விழுக்காடு உள்ளனர்? இரட்சிக்கப்பட்டவர்கள் என்றால் என்ன? அவர்களுக்குப் பெரிய கொம்பா என்று வம்பு பேசுகிறவர்களே சபையில் மிகுதி. அன்பர்களே! அப்படிப் பேசாதீர்கள். கிறிஸ்தவ வாழ்வில் இரட்சிப்பு ஒரு கட்டாயத் தேவை.

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்தேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது (1தீமோ. 1:15)

அந்தப் பாவிகளுள் முதன்மையான பாவி நான் என்று பவுலடியார் கூறுகிறார். இதன் கருத்து என்ன? நானும் ஒருகாலத்தில் பாவியாகவே இருந்தேன். கிறிஸ்தேசு என்னையும் சந்தித்தார்; என்னோடு பேசினார்; என்னை இரட்சித்தார் என்று பவுலார் கூறுகிறார். நண்பர்களே! நாமும் இவ்வித சாட்சி கூற வேண்டுமே! இரட்சிப்பு என்றால் என்ன? பாவ மன்னிப்பு. பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பு (லூக். 1:77, எபேசியர் 1:7) என்று திருமறை கூறுகிறது. நமக்குப் பாவமன்னிப்பாகிய மீட்பு ஏற்படவே இயேசு கிறிஸ்து மனிதன் ஆனார்; சிலுவையில் பலி ஆனார்; இரத்தம் சிந்தினார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திக்கரிக்கும் (1யோவான் 1:7)

இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும்?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள் (அப். 16:31)

இரட்சிக்கப்பட இயேசு கிறிஸ்துவை நம்ப வேண்டும். அவர் மனித அவதாரம் எடுத்த இறை மைந்தன். எனது பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக அவர் சிலுவையிலே பலியானார். அவருடைய இரத்தம் எனது பாவத்தைக் கழுவி என்னை இரட்சிக்கும் என்று நம்ப வேண்டும்.

பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களும் இப்படி இயேசுவை நம்புகிறார்களே? ஆயினும் இரட்சிக்கப்பட வில்லையே ஏன்? விசுவாசம் என்பது சாதாரண நம்பிக்கை அல்ல. உறுதியான நம்பிக்கை. எனவே தான் இன்றைய இறையியலார் விசுவாசத்தைப் பற்றுறுதி என்கின்றனர். மார்ட்டின் லுத்தர் விசுவாசம் என்பது உறுதியான நம்பிக்கை மட்டும் அல்ல. அது ஒரு திருமண ஒப்பந்த மோதிரம் என்கின்றார். திருமண ஒப்பந்தத்தில் (Betrothal) மணமகன் மணமகளுக்கு ஒரு மோதிரம் கொடுக்கிறான். அதை மணமகள் அணிந்து கொள்கிறாள். இதன் கருத்து என்ன? மணமகன் கொடுக்கும் மோதிரம் மணமகனுக்குரிய அடையாளச் சின்னம். மோதிரத்தை ஏற்றுக் கொள்ளும் மணமகள் மணமகனை ஏற்றுக் கொள்கிறாள் என்பது கருத்து. இதுபோலவே மணமகள் கொடுக்கும் மோதிரத்தை அணிந்து கொள்ளும் மணமகன் மணமகளை ஏற்றுக் கொள்கிறான். இவ்வாறே இயேசுவை உறுதியாக நம்பி, அவருக்குத் தம்மை அர்ப்பணிக்க (கொடுக்க) வேண்டும். பின்னர் அவரைத் தமது மீட்பராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே விசுவாசத்தின் கருத்து. பற்றுறுதி, அர்ப்பணிப்பு, ஏற்றுக் கொள்ளுதல் இந்த மூன்றும் சேர்ந்ததே விசுவாசம். இந்த விசுவாச தத்துவத்தை முதலில் புரிந்து இரட்சிக்கப் பட்டவர் மார்ட்டின் லுத்தரே. ரோமர் 1:17, யோவான் 1:12 ஆகிய திருவசனங்கள் இந்தத் தத்துவத்தின் ஆதாரங்களாக உள்ளன. மார்ட்டின் லுத்தரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்த போதுதான் யானும் இத்தத்துவத்தை உணர்ந்து இரட்சிக்கப்பட்டேன். நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்களா?

4.3.2.2 எல்லாரும் தூய ஆவி பெற்றோர்

ஆதித் திருச்சபையார் எல்லாரும் தூய ஆவியின் நிறைவைப் பெற்றிருந்தனர். முதல் உறுப்பினர் **120** பேர் பெந்தேகோஸ்தே திருநாளிலே தூய ஆவியின் நிறைவைப் பெற்றனர் (அப். **2:4**). சமாரியர்கள் கிறிஸ்தவர்களான பின்னர் தூய ஆவியின் நிறைவைப் பெற்றார்கள் (அப். **8:14-17**). கொர்நேலியு வீட்டார் பேதுருவின் அருட்செய்தி கேட்டுக் கொண்டிருந்த போதே தூய ஆவியானவரின் அருட்பொழிவைப் பெற்றார்கள் (அப். **10:44**). எபேசு சபையார் கிறிஸ்தவர்களான பின்னரும் தூய ஆவியானவரை அறியாதிருந்தார் கள். பவுலடியார் அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் தூய ஆவியின் நிறைவைப் பெற்றார்கள் (அப். **19:1-6**). ஆதித் திருச்சபையார் யாவரும் தூய ஆவியின் நிறைவால் கிறிஸ்தவ வாழ்வைத் தொடங்கினார்கள் (கலாத்தியர் **3:3**) என்று பவுலடியார் கூறுகிறார். நீங்கள் இந்தத் தூய ஆவியரை அறிந்திருக்கிறீர்களா? தூய ஆவியின் நிறைவைப் பெற்றிருக் கிறீர்களா? ஆவியின் அருளாற்றலையும் அருளாசியையும் உரிமையாக்கி இருக்கிறீர்களா? ஆவியின் நிறைவையும் ஆசியையும் நீங்கள் பெற்றிருந் தால் மிக்க மகிழ்ச்சி. இல்லாவிட்டால் மீண்டும் ஒருமுறை இந்நூலின் இரண்டாம் இயல் **2.5.2** ஆவியை பெறுதல் என்ற பகுதியைப் படியுங்கள். ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

4.3.2.3 எல்லாரும் சாட்சி வாழ்வினர்

ஆதித் திருச்சபையார் யாவரும் சாட்சியாய் வாழ்ந்தனர். அவர்களது வார்த்தைகளை விட வாழ்க்கை மக்களைக் கவர்ந்தது. எனவே தான் ஒவ்வொரு கூட்டத்திலும் **3000, 5000**, திரளான மக்கள் என மனமாறிய கூட்டம் பெருகிக் கொண்டே சென்றது. கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் மற்றவர்கள் இயேசுவின் அடியார்க்குக் கொடுத்த பெயராகும்.

> *முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப். 11:26)*

இங்கிலாந்து நாட்டவரான டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன் **(1813-1873)** இருண்ட கண்டமான ஆப்பிரிக்காக் கண்டத்தை ஒளிபெற்ற கண்டமாக

மாற்றிய பெருமை உடையவர். அவர் ஆப்பிரிக்கக் காபிரிகள் மத்தியில் அருட்பணி யாற்றிய போது அவர் மரித்துப் போனார் என்ற பொய்ச் செய்தி ஒன்று இலண்டனில் பரவியது. அச்செய்தி கேட்ட நாத்திகப் பத்திரிகை ஆசிரியரான H.M. ஸ்டான்லி என்பார் செய்தியை உறுதிப்படுத்திப் பத்திரிகையில் வெளியிட ஆப்பிரிக்கா விரைந்தார். டேவிட் லிவிங்ஸ்டனின் உடலைத் தேடி அலைந்தார். ஆச்சரியம்! லிவிங்ஸ்டன் உயிருடன் இருப்பதைக் கண்டார். அவரது கையொன்று வனவிலங்கின் தாக்குதலால் செயலற்றியிருப்பதைப் பார்த்தார். அவருடன் தங்கினார்.

டேவிட் லிவிங்ஸ்டன் உயிருடன் இருக்கிறார். அவர் என்னிடம் கிறிஸ்துவைப் பற்றிப் பேசவே இல்லை. ஆனால் அவரது வாழ்க்கை என்னைக் கிறிஸ்தவனாகும்படிக் கட்டாயப் படுத்துகிறது.

என்று நாத்திகரான H.M. ஸ்டான்லி எழுதுகிறார். இறுதியில் அவர் உத்தமக் கிறிஸ்தவராக மாறினார். இதுவன்றோ சாட்சி! கிறிஸ்தவர்கள் யாவரும் டேவிட் லிவிங்ஸ்டனைப் போல் சாட்சி வாழ்க்கை வாழ்ந்தால் நாம் மாதிரி மனிதராய்க் காட்சியளிப்போம். நமது சபைகள் மாதிரி சபைகளாக மாறும்.

4.3.2.4 எல்லாரும் செபவீரர்

ஆதித் திருச்சபையின் செப வாழ்வு அற்புதமானது. அவர்கள் வெளிப்படையாக செபிக்கப் பல்வேறு தடைகள். நம்மைப் போல விடுதலையோடு செபிப்பதைக் கண்டால் பகைவர் அவர்களை அடித்து உதைத்துப் பிடித்து இழுத்துச் சிறையில் அடைத்து விடுவர். எனவே ஆதித் திருச்சபையார் அறைவீடுகளிலும், கல்லறைக் குகைகளிலும், காடுகளிலும், மலைகளிலும் மறைந்து செபித்தனர். ஆனால் இடைவிடாது எப்போதும் செபித்தனர். பேதுரு விசுவாசிகளின் செப வீடாகிய மாற்கு யோவானின் தாயார் மரியாள் வீட்டிற்கு வந்த போதெல்லாம் அங்கே அநேகர் கூடி செபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் (அப். 4:24, 12:12).

அவர்கள் செபித்தபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்கள் எல்லாரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டார்கள். தேவ வசனத்தைத் தைரியமாகச் சொன்னார்கள் (அப். 4:31)

ஆம். ஆதித் திருச்சபையாரின் செபம் சிறைச்சாலைகளை அசைத்தது; ஆயிரம் ஆயிரமான ஆத்துமாக்களை அசைத்தது; யூதத் திருச்சபையை அசைத்தது; ரோமைப் பேரரசை அசைத்துக் கிறிஸ்தவ பேரரசாக மாற்றியது. இன்றும் தென்கொரிய விசுவாசிகளின் செபம் உலகத்திற்கே மாதிரியாய் விளங்குகிறது. டாக்டர் பால் யாங்கிசோவும் அவரது சபையின் விசுவாசிகளும் செப வாழ்வில் உலகிற்கே சவாலாக விளங்குகின்றனர். அங்கு நடைபெறும் நற்செய்திக் கூட்டங்களில் எல்லாம் அழுகையுடன் கூடிய மானமாற்றமும், ஆவியின் அருட்பொழிவும் அற்புதச் செயல்களும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. தென்கொரிய சபைகளின் உபவாசக்கூட்டங்களில் எல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி செபிக்கின்றனர். அங்குள்ள சிறப்பு செப அறைகளில் செபிப்பதற்கு இடங்கள் முன்பதிவு (Reservation) செய்யப்படுகின்றன. நமது ஆலயங்களில் ஞாயிறு காலை ஆராதனையைத் தவிர வேறு எந்த செபத்திலும் பங்கு பெறாத பேர்வழிகள் தானே அதிகம். நாம் எல்லாரும் செபவீரர்களாக மாறினால் அன்றி நமது சபைகளில் எழுப்புதலைக் காண இயலாது. இந்தக் கசப்பான உண்மையை உணர்ந்து எல்லாரும் செபக் கூட்டங்களில் பங்கு பெறுவோம்; கண்ணீர் வடித்து செபிப்போம்; நமது திருச்சபையிலும் எழுப்புதலைக் காண்போம்.

4.3.2.5 எல்லாரும் அருட்பணியாளர்

நற்செய்தி அறிவிப்பதையும் செபிப்பதையுமே தங்கள் முழுநேரப் பணியாகக் கொண்ட பன்னிரு திருத்தூதுவர்கள் ஆதித் திருச்சபையில் இருந்தனர். ஆயினும் எருசலேமில் ஏற்பட்ட இன்னலின் காரணமாய் சிதறிப் போன விசுவாசிகள் தாங்கள் சென்ற இடம் எல்லாம் நற்செய்தியை அறிவித்தனர் (அப். 8:4). பிலிப்பு ஒரு திருத்தூதுவர் அல்லர். அவர் ஒரு உதவியாளர் (Deacon). சிதறடிக்கப்பட்ட அவர் சமாரியா நாட்டின் ஒரு பட்டணத்திற்குப் போய் அங்கு நற்செய்தி

அறிவித்தார். ஆண்டவர் அவரைக் கொண்டு அற்புதங்களை நிகழ்த்தினார். அற்புதம் தனிநபரின் சொத்து அல்ல. ஆத்தும பாரத்தோடும் ஆவியின் நிறைவோடும் அருட்பணியாற்றும் அருள்தொண்டருக்கு ஆண்டவர் அருளும் ஈவு என்பது இங்கு வெளிப்படுகிறது. பிலிப்புவால் சமாரியாவில் திருச்சபை தோன்றியது. இவ்வாறு சிதறடிக்கப்பட்ட யாவரும் சென்ற இடமெல்லாம் சபைகளை நிறுவி இருப்பர் என்பது உண்மை அல்லவா?

> *ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவனும் ஒரு அருட்பணியாளன். கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு அருட்பணித் தளம்.*

இந்த உண்மையை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற அருட்பணியை நிறைவேற்றுவோமாக!

நெல்லைத் திருமண்டலத்தில் ஒவ்வொரு சபையிலும் ஒரு நற்செய்திக் குழு உண்டு. ஆயர் மண்டல அளவில் பல நற்செய்திக் குழுக்கள் உண்டு. அக்குழுக்கள் வாரம் ஒருமுறை அல்லது மாதம் ஒருமுறை கிறிஸ்தவர் அல்லாதவர் நடுவில் நற்செய்தி அறிவித்து சபைகளையும் நிறுவி வருகின்றன. ஒவ்வொரு ஆயர் மண்டலச் சார்பிலும் ஒரு அருட்பணித் தளத்தைத் தேர்வு செய்து, அங்கு ஒரு அருட்பணியாளரை நியமனம் செய்து அருட்பணி நடைபெறுகிறது. தேவைபடும்போது ஆலயம், பள்ளி முதலியவை கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அந்த அருட்பணித் தளத்தின் அனைத்துத் தேவைகளையும் அந்த ஆயர் மண்டலமே பொறுப்பேற்றுக் கொள்கிறது. சபை மன்றங்கள் சார்பிலும் சிறப்பு அருட்பணித் திட்டங்கள் உண்டு. திருமண்டலத்தில் ஆண்டுக்கு ஒரு ஞாயிறு எல்லாச் சபைகளும் கட்டாயமாக நற்செய்தி அறிவிக்கும் நாளாக ஆசரிக்கப்படுகிறது. பல இடங்களில் அந்த ஞாயிறு நற்செய்திக் களம் ஒன்றில் கொண்டாடப்படும் நற்செய்திப் பண்டிகையாகவே காட்சி தருகிறது. இந்தியாவில் முதல் மிஷனெரி சங்கம் 1903இல் திருநெல்வேலித் திருமண்டலத்தில்தான் தோன்றியது. அதுதான் இந்திய மிஷனெரி சங்கம் (IMS) ஆகும். அதன் அருட்பணிகள் இன்றும் முதல்தரமானவையே! பேராயர் அசரியா மூட்டிய அருட்பணி உணர்வுத்தீ நெல்லையில் இன்றும் சுடர்விட்டுக் கொண்டே

இருக்கிறது. இன்று இந்தியாவில் காணப்படும் பெரிய அருட்பணி அமைப்புகள் அனைத்தும் நெல்லைத் தலைவர்களால் தோற்றுவிக்கப் பட்டவையே! அருட்பணியில் அனைவரும் நெல்லையைப் பின்பற்றுவது நல்லது.

4.4. முடிவுரை

ஆதித் திருச்சபை போன்ற சபைகள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. தென் கொரியாவின் அனைத்துச் சபைகளும் அதற்குச் சான்றாகின்றன. ஆப்பிரிக்காவில் பல சபைகள் ஏன்? அமெரிக்காவில் கூட சில சபைகள் எழுப்புதல் சபைகளாகத்தான் இருக்கின்றன. வட இந்தியாவில் பணியாற்றும் அருட்பணியாளர்கள் பலர் நெல்லைக்குக் குமரிக்கும் வருகை தரும்போது இங்குள்ள பல சபைகள் தென்கொரிய சபைகள் போல் இருப்பதாகக் கூறுகின்றனர். உண்மைதான். இன்று நான் தங்கும் இடத்திலுள்ள குருசடி சி.எஸ்.ஐ. சபையை எடுத்துக் கொண்டால் அதன் குருவானவர், சபைக்குழு உறுப்பினர்கள், ஞாயிறு பள்ளிச் செயலாளர் மற்றும் ஆசிரியர்கள், கி.ப.மு. சங்கப் பொறுப்பாளர் மற்றும் வாலிபர்கள், பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி மற்றும் உறுப்பினர்கள், பாடகர்குழுத் தலைவர் மற்றும் பாடகர்கள் யாவருமே உண்மையாக இயேசு கிறிஸ்துவை மீட்பராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டவர்கள் எனக் கூறலாம். இவர்களில் பலர் ஆவியின் அனுபவம் பெற்றவர்கள்; கறைபடாத கரத்தினர்; தசம பாகம் படைக்கும் பண்பினர்; அருட்பணியாளர்களை ஆதரிக்கும் அன்பர்கள். இங்கு மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை உபவாச செபம் சிறப்பாக நடைபெறுகிறது. அதன் பொறுப்பைச் சபைக்குழு அடியேனிடம் தந்துள்ளது. உபவாச செபம் மற்றும் வாரந்தோறும் கூடி செபிக்கிற பெண்களின் செபக்குழு இவற்றின் வழியாக இச்சபை பெற்று வரும் பேறுகள் ஏராளம். இதுவரை சபைக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் யாவரும் போட்டி இன்றியே நியமிக்கப்படுகின்றனர். ஏழைகள் படிக்க நிதி உதவி, கொடிய நோயுற்றோர் மற்றும் தேவையான வர்க்குத் தேவையான உதவிகளைச் சபைக்குழுவாகச் செய்து வருகிறது. இத்தகைய மாதிரிச் சபைகள் சில உள.

ஆனால் I.M.S., N.M.S. மிஷனெரி சங்கங்களை உருவாக்கி, மிஷனெரியாகவும், மிஷனெரி சங்கப் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி, குருத்துவப் பட்டம் பெற்றுத், தோரணக்கல்லில் தாம் ஆற்றிய அருட்பணியால் ஒரு பேராயத்தையே உருவாக்கி அதன் பேராயராகி, முதல் இந்தியப் பேராயர் என்னும் பெருமை பெற்ற பேராயர் V.S. அசரியா (1874-1945) அவர்களின் அரும்பணியால் 1913 இல் 8000 கிறிஸ்தவர்களைக் கொண்டதாய் உருவான தோர்ணக்கல் பேராயம் 1945இல் 2,40,000 கிறிஸ்தவர்களைக் கொண்ட பேராயமாக வளர்ந்த்து. இன்று மூன்று பேராயங்களாக விரிந்துள்ளது. பேராயர் அசரியா போன்ற திருச்சபைத் தலைவர்களைக் காண்பதுதான் இன்று மிகக்கடினமாக உள்ளது. உள்ளம் திறந்து பேசுகிறேன் தலைமைப் பேராயர்கள், பேராயர்கள், பேராயத்தின் குருக்கள் மற்றும் சபையாரின் சார்பாளர்கள் (Lay Leaders) யாவரும் தங்கள் தனி வாழ்வில் பேதுரு போன்று எழுப்புதல் பெற்றவர்களாக இருந்தால் நிச்சயமாகத் திருச்சபையில் எழுப்புதல் ஏற்படும்.

5. நாட்டில் எழுப்புதல்

5.1. முன்னுரை

1904 ஆம் ஆண்டு வேல்ஸ் (Welsh) நாட்டில் மாபெரு எழுப்புதல் ஏற்பட்டது. இரட்சிக்கப்பட்டவர்களின் தொகை ஆயிர பத்தாயிரம், ஐம்பதாயிரம், இலட்சம் என உயர்ந்து கொண்டே சென்றது சிறுவர், வாலிபர், வயோதிபர், ஆடவர், மகளிர், அதிகாரிகள், தொழில ளர், கூலிகள், காவல்துறையினர் என எல்லா நிலையிலும் இரட்சிப்பு பரவியது. செய்தித் தாட்களில் எழுப்புதலின் செய்தி நாள்தோறு வெளியாகிக் கொண்டிருந்தது. எழுப்புதலின் பலனாய் இரவும் பகலு ஆலய ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தன ஆலயங்கள் மக்களால் நிரம்பி வழிந்தன. ஆவியின் அபிஷேக கரைபுரண்டு ஓடியது. எங்கும் துதியின் கீதங்கள், தோத்திர ஒலிகள் அனல் பறக்கும் செபங்கள். நாடகக் கொட்டகைகளும் நடன அரங்கு களும் மூடப்பட்டன. விளையாட்டு வீரர்கள் விளையாட்டு மைதானத்தை மறந்து ஆலயங்களில் ஆனந்தம் கண்டனர். குடி, கொலை, கொள்ளை கள் குறைந்தன; மறைந்தன. காவல் நிலையங்களும் சிறைக்கூடங்களும் வெறுமையாய்க் காட்சியளித்தன. விண்ணரசு மக்கள் நடுவில் இறங்கி வந்தது. மண்ணகம் விண்ணகம் போல் காட்சி அளித்தது. இதுவே ஒரு நாட்டின் உண்மையான எழுப்புதல் ஆகும். இந்த எழுப்புதல் எல்லா நாடுகளிலும் ஏற்படவேண்டும். என் நாட்டிலும் ஏற்பட வேண்டுமே?

5.2 நாடுகளின் எழுப்புதல் வரலாறு

வேல்ஸ் நாட்டின் எழுப்புதலுக்குக் காரணமாய் இருந்த இறைத் தொண்டர் ஈவான் ராபர்ட்ஸ் ஆவார். அவர் இளைஞராக இருந்தபோது

எழுப்புதலுக்காக செபியுங்கள் என்று போதகர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுப் பதின்மூன்று ஆண்டுகள் செபித்தார். அவரது சபையில் எழுப்புதல் கூட்டம் நடத்த வந்த இரண்டு சகோதரர்கள் பாடிய

தாழ்த்துகிறேன் தாழ்த்துகிறேன்
கிறிஸ்துவின் பாதத்தண்டை
என்னைத் தாழ்த்துகிறேன்

என்ற பாடல் அவரை அதிகமாய்க் கவர்ந்தது. அதனால் இயேசுவின் சிலுவைத் தரிசனம் பெற்றார்; உள்ளம் உடைந்தார்; கதறி அழுதார்; கண்ணீர் வடித்தார்; கருத்தாய் செபித்தார். தெய்வீகப் பிரசன்னம் அவரை மூடிற்று. தேவ சமாதானம் அவரது உள்ளத்தை நிரப்பிற்று. ஆத்தும பாரம் அவரில் உதயமாயிற்று. ஆவியின் வல்லமையும் வரங்களும் அவர்மீது பொழிந்தருளப்பட்டன. அதன் பயனே வேல்ஸ் நாட்டின் எழுப்புதல்.

ஜாண் வெஸ்லியின் திருத்தொண்டால் இங்கிலாந்தில் மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது. இங்கிலாந்தின் இருண்ட காலம் மாறியது; ஒளிமயமான காலம் தோன்றியது. அருட்பணிச் சங்கங்கள் பிறந்தன. அருட்பணி பரவியது. இதனை முதல் இயலிலேயே கண்டோம்.

சார்லஸ் ஃபின்னி (Charles Grandison Finney) (1792-1875) புதிய எழுப்புதலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இவரது குடும்பம் பக்திப் பாரம்பரியம் இல்லாதது. இவரும் இளமையில் ஒருவகை நாத்திகராகவே வாழ்ந்தார். அமெரிக்காவின் லிட்சிகன் மாநிலத்திலுள்ள வாரன் என்னும் சிற்றூரில் பிறந்த ஃபின்னி நியூயார்க் மாநகரின் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். ஆடம்ஸ் நகரின் நீதிபதி பெஞ்சமின் ரைட் (Benjamin Wright) என்பவரிடம் சட்டப் பயிற்சியாளராய் இருந்தபோது நீதிபதி கிறிஸ்தவத் திருமறை சட்டங்களுக் கெல்லாம் ஆதாரமாக இருப்பதை விளக்கிக் காட்டினார். சட்டங்களுக்குரிய மேற்கோள்களாகத் திருவசனங்கள் இருப்பதை உணர்ந்த ஃபின்னி தாமே ஒரு திருமறையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். மனந்திரும்புதல், மறுபிறப்பு முதலானவை பற்றிய சந்தேகங்களைச் சபைக் குருவான வரிடம் கேட்டார்; மூப்பர்களிடம் உரையாடினார். மூன்று ஆண்டுகள் உருண்டோடின.

ஒரு ஞாயிறு மாலையில் ஆத்தும இரட்சிப்பு பற்றிய பிரச் னைக்கு உடனே தீர்வு காண முடிவு செய்தார் ஃபின்னி. ஆனா முடியவில்லை. உள்ளத்தின் பாரம் பெருகிற்று. செவ்வாய் இரவில் துக்க அதிகரித்தது. மரண பயமும் நரக பயமும் ஏற்பட்டன. வீதியில் செல்லு போதே சிலுவைக் காட்சி கண்டார். நின்று நின்று அக்காட்சியை பார்த்துக் கொண்டே சென்றார். எப்படியாவது இயேசு கிறிஸ்துவை தமது சொந்த மீட்பராகவும் அரசராகவும் ஏற்றுக் கொள்ள தீர்மானித்தார். அருகில் இருந்த காட்டிற்குச் சென்றார். பல மணிநேர செபித்தார்; கதறி அழுதார்; கண்ணீர் வடித்தார்; பாவ மன்னிப்பாகி மீட்பைப் பெற்றார்; ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டார். ஃபின்னி எழுப்புதலைப் பெற்றுக் கொண்ட அந்த நன்னாள் 1820 அக்டோப 10. திருமறையைப் படிப்பதும், தூய ஆவியால் நிறைவதும், மன்றா செபிப்பதுமே ஃபின்னியின் இன்பப் பொழுது போக்கு. அவரது முக தெய்வீக ஒளி வீசியது. அவருடன் பேசியவர்கள் பலர் பாவ உணர்வ அடைந்து மீட்கப் பட்டனர். ஃபின்னியின் அருட்பணியால் அமெரிக்கா வில் எழுப்புதல் அக்கினி இறங்கியது; பரவியது; நிரம்பியது;

ஃபின்னியின் கூட்டங்களில் பல்லாயிரம் மக்கள் கூடினர். அவரது அருட்செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே மக்கள் அழ ஆரம்பித்தனர்; பாவ அறிக்கை செய்தனர்; ஆவியால் நிரப்பப் பட்டனர். ஒருமுறை அவர் அருகில் அமர்ந்து செய்தி கேட்டுக் கொண்டி ருந்த கிறிஸ்தவரல்லாத வணிகர் ஒருவர் இருக்கையிலிருந்து கீழே விழுந்தார். உடல் நோய் ஒன்றும் இல்லாது தூய ஆவியால் தாக்கப்பட்ட அவரது நாடித் துடிப்பைச் சோதித்துப் பார்த்த நாத்திக டாக்டர் அதிர்ச்சி அடைந்தார். இருவரும் அன்றே இயேசுவைத் தங்கள் மீட்பராகவும், தலைவராகவும் ஏற்றுக் கொண்டு இன்புற்றனர். யுட்டிகா நகரின் தொழிற்சாலை ஒன்றைப் பார்வையிடச் சென்ற ஃபின்னியைப் பார்த்த தொழிலாளர் அனைவரும் அவர்களை அறியாமலேயே அழ ஆரம்பித் தனர்; முழங்காலில் நின்றனர்; கண்ணீர் வடித்துக் கதறினர். சிலமணி நேரம் தொழிற்சாலையே இயங்காமல் நின்றது. ஃபின்னி செய்தியளித்து செபித்தார் தொழிலாளர் யாவரும் இரட்சிக்கப்பட்டனர். அல்லேலூயா!

இன்று' எழுப்புதல் தீ எரிந்து கொண்டே இருக்கும் நாடு தென்கொரியா ஆகும். உலகிலேயே பெரிய சபை தென்கொரியாவின்

எழுப்புதலுக்காக செபியுங்கள் என்று போதகர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுப் பதின்மூன்று ஆண்டுகள் செபித்தார். அவரது சபையில் எழுப்புதல் கூட்டம் நடத்த வந்த இரண்டு சகோதரர்கள் பாடிய

தாழ்த்துகிறேன் தாழ்த்துகிறேன்
கிறிஸ்துவின் பாதத்தண்டை
என்னைத் தாழ்த்துகிறேன்

என்ற பாடல் அவரை அதிகமாய்க் கவர்ந்தது. அதனால் இயேசுவின் சிலுவைத் தரிசனம் பெற்றார்; உள்ளம் உடைந்தார்; கதறி அழுதார்; கண்ணீர் வடித்தார்; கருத்தாய் செபித்தார். தெய்வீகப் பிரசன்னம் அவரை மூடிற்று. தேவ சமாதானம் அவரது உள்ளத்தை நிரப்பிற்று. ஆத்தும பாரம் அவரில் உதயமாயிற்று. ஆவியின் வல்லமையும் வரங்களும் அவர்மீது பொழிந்தருளப்பட்டன. அதன் பயனே வேல்ஸ் நாட்டின் எழுப்புதல்.

ஜாண் வெஸ்லியின் திருத்தொண்டால் இங்கிலாந்தில் மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது. இங்கிலாந்தின் இருண்ட காலம் மாறியது; ஒளிமயமான காலம் தோன்றியது. அருட்பணிச் சங்கங்கள் பிறந்தன. அருட்பணி பரவியது. இதனை முதல் இயலிலேயே கண்டோம்.

சார்லஸ் ஃபின்னி (Charles Grandison Finney) (1792-1875) புதிய எழுப்புதலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இவரது குடும்பம் பக்திப் பாரம்பரியம் இல்லாதது. இவரும் இளமையில் ஒருவகை நாத்திகராகவே வாழ்ந்தார். அமெரிக்காவின் லிட்சிகன் மாநிலத்திலுள்ள வாரன் என்னும் சிற்றூரில் பிறந்த ஃபின்னி நியூயார்க் மாநகரின் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். ஆடம்ஸ் நகரின் நீதிபதி பெஞ்சமின் ரைட் (Benjamin Wright) என்பவரிடம் சட்டப் பயிற்சியாளராய் இருந்தபோது நீதிபதி கிறிஸ்தவத் திருமறை சட்டங்களுக் கெல்லாம் ஆதாரமாக இருப்பதை விளக்கிக் காட்டினார். சட்டங்களுக்குரிய மேற்கோள்களாகத் திருவசனங்கள் இருப்பதை உணர்ந்த ஃபின்னி தாமே ஒரு திருமறையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். மனந்திரும்புதல், மறுபிறப்பு முதலானவை பற்றிய சந்தேகங்களைச் சபைக் குருவான வரிடம் கேட்டார்; மூப்பர்களிடம் உரையாடினார். மூன்று ஆண்டுகள் உருண்டோடின.

ஒரு ஞாயிறு மாலையில் ஆத்தும இரட்சிப்பு பற்றிய பிரச்னைக்கு உடனே தீர்வு காண முடிவு செய்தார் ஃபின்னி. ஆனால் முடியவில்லை. உள்ளத்தின் பாரம் பெருகிற்று. செவ்வாய் இரவில் துக்கம் அதிகரித்தது. மரண பயமும் நரக பயமும் ஏற்பட்டன. வீதியில் செல்லும் போதே சிலுவைக் காட்சி கண்டார். நின்று நின்று அக்காட்சியைப் பார்த்துக் கொண்டே சென்றார். எப்படியாவது இயேசு கிறிஸ்துவைத் தமது சொந்த மீட்பராகவும் அரசராகவும் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தார். அருகில் இருந்த காட்டிற்குச் சென்றார். பல மணிநேரம் செபித்தார்; கதறி அழுதார்; கண்ணீர் வடித்தார்; பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்றார்; ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டார். ஃபின்னி எழுப்புதலைப் பெற்றுக் கொண்ட அந்த நன்னாள் 1820 அக்டோபர் 10. திருமறையைப் படிப்பதும், தூய ஆவியால் நிறைவதும், மன்றாடி செபிப்பதுமே ஃபின்னியின் இன்பப் பொழுது போக்கு. அவரது முகம் தெய்வீக ஒளி வீசியது. அவருடன் பேசியவர்கள் பலர் பாவ உணர்வு அடைந்து மீட்கப் பட்டனர். ஃபின்னியின் அருட்பணியால் அமெரிக்கா வில் எழுப்புதல் அக்கினி இறங்கியது; பரவியது; நிரம்பியது;

ஃபின்னியின் கூட்டங்களில் பல்லாயிரம் மக்கள் கூடினர். அவரது அருட்செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே மக்கள் அழ ஆரம்பித்தனர்; பாவ அறிக்கை செய்தனர்; ஆவியால் நிரப்பப் பட்டனர். ஒருமுறை அவர் அருகில் அமர்ந்து செய்தி கேட்டுக் கொண்டி ருந்த கிறிஸ்தவரல்லாத வணிகர் ஒருவர் இருக்கையிலிருந்து கீழே விழுந்தார். உடல் நோய் ஒன்றும் இல்லாது தூய ஆவியால் தாக்கப்பட்ட அவரது நாடித் துடிப்பைச் சோதித்துப் பார்த்த நாத்திக டாக்டர் அதிர்ச்சி அடைந்தார். இருவரும் அன்றே இயேசுவைத் தங்கள் மீட்பராகவும், தலைவராகவும் ஏற்றுக் கொண்டு இன்புற்றனர். யுட்டிகா நகரின் தொழிற்சாலை ஒன்றைப் பார்வையிடச் சென்ற ஃபின்னியைப் பார்த்த தொழிலாளர் அனைவரும் அவர்களை அறியாமலேயே அழ ஆரம்பித் தனர்; முழங்காலில் நின்றனர்; கண்ணீர் வடித்துக் கதறினர். சிலமணி நேரம் தொழிற்சாலையே இயங்காமல் நின்றது. ஃபின்னி செய்தியளித்து செபித்தார் தொழிலாளர் யாவரும் இரட்சிக்கப்பட்டனர். அல்லேலூயா!

இன்று எழுப்புதல் தீ எரிந்து கொண்டே இருக்கும் நாடு தென்கொரியா ஆகும். உலகிலேயே பெரிய சபை தென்கொரியாவின்

மக்கள் மனந்திரும்பினர் என்பதே சரி என்று இறையியல் சிந்தனை யாளர் கூறுவர். 90 விழுக்காடு மக்கள் மனந்திரும்பினால் அதுவும் மாபெரும் வெற்றிதானே? இத்தகைய மனமாற்றத்தை ஜாண் வெஸ்லி, சார்ள்ஸ் ஃபின்னி, ஈவான் ராபர்ட்ஸ் போன்றோரின் திருப்பணியிலும் பார்க்கிறோம். அவர்கள் காலம் அவர்கள் நாடுகளில் எழுப்புதல் ஏற்பட்ட காலம் தானே? திருமுழுக்குநர் யோவானின் அருட்செய்தியால் மாபெரும் எழுப்புதல் ஏற்பட்டது. எவ்வித விளம்பரமும் இல்லாமல் மக்கள் கூட்டம் கூட்டமாக, ஆயிரம் ஆயிரமாக யோவானின் செய்தி கேட்கச் சென்றனர். யோவானின் அருட்செய்தி கூறப்பட்ட இடம் நகர்ப்பகுதி அல்ல; யோர் தான் நதிக்கரையில் அமைந்த ஒருவகைப் பாலைவனம். போக்குவரத்து வசதி இல்லாத இடம். மக்கள் அமர்ந்து செய்தி கேட்கவும் ஏற்ற இடம் அல்ல. வந்தவர் நின்று கொண்டேதான் செய்தி கேட்டனர். இது ஒரு ஒழுங்கு படுத்தபட்ட கூட்டம் (Arranged Meeting) அல்ல; அற்புதக் கூட்டமும் அல்ல.

யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை (யோவான் 10:41)

இந்தச் சூழ்நிலையில் யோவானிடம் ஓடிச் சென்று ஆர்வத்துடன் செய்தி கேட்ட மக்கள் பாவஉணர்வு அடைந்தனர்.

நாங்கள் என்ன செய்ய வேண்டும்? (லூக்கா. 3:10)

என்று கேட்டனர். அவர்களுக்கு யோவான் உள்ளவர் இல்லாதவருக்குக் கொடுக்கக் கடவர் என்று கட்டளையிட்டார். ஆயக்காரர்,

போதகரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? (லூக்கா 3:12)

என்று கேட்டனர். அவர்களுக்கு அவர் இலஞ்சம் வாங்காதீர் என்று கட்டளை யிட்டார் படைவீரர்,

நாங்கள் என்ன செய்ய வேண்டும் ? (லூக்கா. 3:14).

என்று கேட்டனர். அவர்களிடம் யோவான்,

நீங்கள் யாரையும் துன்புறுத்தாதீர்; எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்; யார்மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்; உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்.

என்றார். இவ்வாறு எல்லாவகை மக்களும் யோவானின் அருட்செய்தி கேட்டு மனந்திரும்பினர். இன்றைய எழுப்புதல் தொண்டரான டாக்டர் பில்லி கிரகாம் ஸ்ரீவிபோர்ட் (Shreveport) என்னும் நகரில் நடத்திய நற்செய்திக் கூட்டத்தின் பயனாக அங்கு மது விற்பனை 60 விழுக்காடு குறைந்தது; 40 விழுக்காடு மதுவே விற்பனையானது. திருமறையின் விற்பனை 300 விழுக்காடாக உயர்ந்தது. பில்லி, சீற்றில் (Seattle) நகரில் நடத்திய நற்செய்திக் கூட்டத்தால் பல மணமுறிவு வழக்குகள் நீக்கப்பட்டன; கிரீன்போரோ (Greenboro) மாநகரில் நடத்திய நற் செய்திக் கூட்டத்தால் அம்மாநகரின் முழுமையான சமுதாய அமைப்புமே மாற்றம் பெற்றது. மக்கள் அனைவரும் மனந்திரும்பினர் என்று புள்ளி விவரம் கூறுகிறது. நமது நற்செய்திக் கூட்டங்களில் இவ்விதமாகச் செய்தி கேட்கும் யாவரும் மனந்திரும்ப, நமது சபைகளிலும் நாட்டிலும் மாபெரும் எழுப்புதல் ஏற்பட செபிப்போம்; செயல்படுவோம்.

5.3.2 எல்லாரும் திருமுழுக்குப் பெற்றனர்

எப்படி எல்லாரும் திருமுழுக்குப் பெற்றனர்? தங்கள் பாவங் களை உணர்ந்து, பாவ அறிக்கை செய்து, மனமாற்றம் அடைந்து திரு முழுக்குப் பெற்றனர். இன்று திருமுழுக்குப் பற்றிய கொள்கை வேறு பாடுகள் சபைகளில் நிலவி வருகின்றன. நிறுவன சபைகளின் (Established Churches) திருமுழுக்குக் கோட்பாட்டினைக் குறை கூறுவோர் மனந்திரும்புதலின் அனுபவம் இல்லாத திருமுழுக்குத் திருமறை கூறும் திருமுழுக்கு ஆகுமா? என்று கேட்கின்றனர். யான் கூறுகிறேன். மனந் திரும்புதலின் அனுபவம் இல்லாதவர் கிறிஸ்தவரே அல்லர். திருச் சபை யில் திருமுழுக்குப் பெற்றோரின் தொகையைக் கணக்கிடுவதை மாற்றி மனந்திரும்பியோரின் தொகையைக் கணக்கிட்டால் சிறப்பாக இருக்கும்.

தமிழகத்தின் தென்கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மீனவர்கள் 1532இல் முகமதியர்களால் தாக்கப் பட்டனர். தாக்குதல் இரண்டாண்டு தொடர்ந்தது. மக்கள் பெருந்துன்பம் அடைந்தனர். அதனால் மீனவப் பிரதிநிதிகள் கொச்சித் துறைமுகத்தில் தங்கி வணிகம் செய்த போர்த்துக்கீசியரிடம் சென்று உதவி நாடினர். தங்கள் இனத்துக்கு முழுப் பாதுகாப்புக் கொடுத்தால் எல்லாரும் கிறிஸ்தவர்களாக மாறி விடுவதாக வாக்கும் கொடுத்தனர். அவர்களது வேண்டுகோளின்படி போர்த்துக்கீசியர் முகமதியரை முறியடித்தனர். ஆகவே 1534இல்

இருபதினாயிரம் மீனவர்கள் திருமுழுக்குப் பெற்றனர். நமது முன்னோரில் பலர் மனமாற்றம் இல்லாமல் காலத்தின் கட்டாயத்தால் கிறிஸ்தவர் ஆயினர். இன்று திருமுழுக்குப் பெற்றிருக்கிற நாம் எல்லாரும் மனமாற்றம் பெற்றிருக்கிறோமா? முதலில் திருமுழுக்குப் பெற்றோர் யாவரும் மனமாற்றம் பெற வேண்டும். அப்படி மனமாற்றம் பெற்றால் நாட்டில் எல்லாரும் மனமாற்றம் பெற்றுத் திருமுழுக்குப் பெற வாய்ப்பு ஏற்படும்.

ஒரு முறை பெங்களூரில் நடைபெற்ற மிஷனெரி மாநாட்டிற்கு மகாத்மா காந்தி தலைமை தாங்கினார். அவர் தமது தலைமை உரையில்

> *இந்தியர் யாவரையும் கிறிஸ்தவர்களாக மாற்றும் நோக்கோடு ஆற்றப்படுகின்ற அருட்பணியை நான் வரவேற்கிறேன். ஆனால் உங்களது கல்வி, மருத்துவம் முதலான அறப்பணிகளோ நலப்பணிகளோ மற்றும் இலக்கியப் பணிகளோ நற்செய்திப் பணிகளோ இந்தியரைக் கிறிஸ்தவர்களாக மாற்றி விட மாட்டா. இந்தியர்கள் கிறிஸ்தவர்களாக மாற வேண்டுமானால் இன்றையக் கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் கிறிஸ்துவாக மாற வேண்டும்.*

என்றார். ஆம் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர் யாவரும் மனமாறினால் நாட்டவர் எல்லாரும் மனம் மாறுவர். எல்லாரும் திருமுழுக்குப் பெறுவர். அந்நாளே நம் நாட்டில் எழுப்புதல் ஏற்படும் நன்னாள் ஆகும்.

5.3.3 யூதர்கள் திருமுழுக்குப் பெற்றனர்

பழைய ஏற்பாட்டில் திருமுழுக்கு என்ற சொல்லாட்சி இல்லை. ஏன்? யூதர்கள் யாவரும் விருத்தசேதனம் (சுன்னத்து) பெற்றனர்; திருமுழுக்குப் பெறவில்லை. ஆனால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் திருமுழுக்கு இருந்தது. யாருக்கு? யூதர் அல்லாதோருக்கு. யூதர் அல்லாதோர் யூத சமயத்தில் சேர வேண்டுமானால் திருமுழுக்குப் பெற வேண்டும். யூதர்கள் தாங்கள் ஆபிரகாமின் சந்ததியார்; இறைமக்கள் (Children of God); தூய்மையாளர். எனவே தங்களுக்குத் திருமுழுக்குத் தேவை இல்லை என எண்ணினர். யூதரல்லாத இனத்தவர் தீயர்;

அசுத்தர் என எண்ணினர். எனவே அவர்களை யூத மார்க்கத்தில் சேர்க்கத் திருமுழுக்கைப் பயன்படுத்தினர். இந்தக் காலத்தில் இருப்பது போல் அந்தக் காலத்திலும் பலவகையான திருமுழுக்குகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஒருவகை திருமுழுக்கில் யூத சமயம் சேர விரும்பும் மனிதரை ஆழமான குழியில் இறக்கி, அவர்மீது பலி இரத்தத்தை ஊற்றிச் சுத்தம் செய்த பின்னரே நீரில் மூழ்கச் செய்து திருமுழுக்குக் கொடுப்பர். அவ்வாறு யூத சமயத்தில் சேர்ந்த பிற இனத்தவரை யூதமதம் தழுவியோர் (Proselytes) என அழைத்தனர். இயேசுவின் சீடர்களில் ஒருவர் யூதமதம் தழுவிய கானானியர் (மத்தேயு 10:4). அவர் பெயர் கானானியனாகிய சீமோன். ஆதித் திருச்சபையில் இயேசுவின் சீடர் பன்னிருவருக்கு உதவியாக ஏழு துணைத் திருத்தொண்டர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்களில் ஒருவராகிய நிக்கொலா யூதசமயம் தழுவியவர் (அப். 6:5). எத்தியோப்பிய அரசியாகிய கந்தாகே என்பவரின் அமைச்சர் யூத சமயம் தழுவியவர் (அப். 8:27). பெந்தேகோஸ்தே திருநாளில் யூத மதம் தழுவிய பிற இனத்தவர் பலர் எருசலேமில் இருந்தனர் (அப். 2:10).

இவற்றை எல்லாம் ஏன் கூறுகின்றேன் என்றால் யூதர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்த முதல் இறைத்தொண்டர் யோவான் ஆவார். யூதர்களின் திருமுழுக்கு எழுப்புதலின் முதல் அடையாளம். தாங்கள் இறைமக்கள்; தூயவர்; தங்களுக்குத் திருமுழுக்குத் தேவை இல்லை என்று பெருமையடித்துக் கொண்டிருந்த யூதர்கள் தாங்களும் பாவிகள் என உணர்ந்தனர்; ஒத்துக் கொண்டனர்; பாவத்திற்காகத் துக்கம் கொண்டனர்; பாவத்தை அறிக்கை இட்டனர்; மனந்திரும்பினர்; மனந்திரும்புதலின் அடையாளமாய்த் திருமுழுக்குப் பெற்றனர். எத்துணை மாற்றம்! இதுவே எழுப்புதலின் அடையாளம். இன்றும் நாங்கள் படித்தவர்கள்; பேரறிஞர்கள்; பெரும் பதவியினர்; சிறந்த செல்வந்தர்; சமுதாயத்தில் மிக உயர்ந்தவர்கள்; தவறு செய்யாதவர்கள்; எங்களுக்கு மனந்திரும்புதல், இரட்சிப்பு, தூய ஆவி, திருப்பணி எதுவுமே தேவை இல்லை என்று சொல்லிப் பெருமை என்னும் மாளிகையின் மாடியில் ஏறி நின்று இன்பம் காண்போர் எத்தனை பேர்? டாக்டர்கள், பொறியாளர்கள், பேராசிரியர்கள், அரசு அதிகாரிகள், வழக்கறிஞர்கள், வழக்குரைஞர்கள், நீதிபதிகள், ஆட்சியாளர் ஏன்? திருச்சபையின் தலைவர்கள் என்று பெருமை பேசி மனந்திரும்புதலின்

மணத்தையே உணராத மாமனிதர்கள் என்றைக்கும் பாவ உணர்வு பெற்றுக் கண்ணீர் வடித்துத், தங்கள் பாவத்தை அறிக்கையிட்டுப் புதுவாழ்வு பெறுகின்றார்களோ அந்நாளே எழுப்புதலின் ஆரம்ப நாள் ஆகும்.

5.4 எழுப்புதல் வீரர்

நாட்டில் எழுப்புதல் தோன்ற எழுப்புதல் வீரர்கள் எழும்ப வேண்டும். யூதேயாவின் எழுப்புதலுக்குக் காரணமாய் எழுந்தவர் முழுக்கு முனிவர் யோவான் ஆவார். அவர் தந்தை சகரியா என்னும் குருவானவர் (ஆசாரியர்). தாயார் எலிசபெத். இவர் கருத்தரிக்க முடியாத உடல் குறைபாடு உடையவர். இயேசுவின் தாயாகிய மரியாளின் உறவினர். சகரியாவும் எலிசபெத்தும் வயது சென்ற முதியவர்கள். இந்நிலையில் பிறந்த விந்தை மைந்தர்தான் திருமுழுக்குநர் யோவான். இவரது அருட்செய்தியைக் கேட்ட யூதேயா நாட்டினர் அனைவரும் மனந்திரும்பினர். நாட்டில் எழுப்புதல் சுடர் தோன்றி பரவியது. அந்த அளவுக்கு இவரது அருட்செய்தியில் இருந்த சிறப்பு என்ன? யோவானின் அருட்செய்தியில் அமைந்திருந்த மூவகை சிறப்புகளைச் சிந்தனை செய்வோம்.

5.4.1 வாழ்வுச் செய்தி

மகாத்மா காந்தி கூறியது போல யோவானின் வாழ்வே ஆற்றல் வாய்ந்த இறைச் செய்தியாய் அமைந்தது. இவர் பிறப்பதற்கு முன்னால் சுமார் 300 ஆண்டுகளாகத் தீர்க்கத்தரிசிகள் தோன்றவே இல்லை. யூதர்கள் தீர்க்கத்தரிசிகளைத் தேடவும் இல்லை; விரும்பவும் இல்லை. அவர்களது ஒரே விருப்பம் மேசியா - கிறிஸ்து - அரசர் வரவேண்டும். அவர் ஆட்சி அமைக்க வேண்டும். தங்கள் அடிமை வாழ்வு ஒழிய வேண்டும். மேசியாவின் தலைமையில் யூதப் பேரரசு மலரவேண்டும் என்பதே. யோவான் வந்ததும் மேசியா வந்து விட்டார் என்று எண்ணினர். யோவான் ஆண்டவர் பார்வையில் பெரியவர்; தம் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் நிரப்பப் பட்டிருந்தார் (லூக். 1:15).

தாயினிடம் பிள்ளையாய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்குநர்

யோவானை விடப் பெரியவர் எவரும் தோன்றிய தில்லை (மத்தேயு 11:11)

என்று இயேசு கிறிஸ்துவே சான்று பகர்கிறார். அந்தப் பெரியவர் வாழ்ந்த இடம் பாலைவனம். சாதாரணப் பாலைவனம் அல்ல; கொடிய பாலைவனம். கோடைக் காலத்தில் வெப்பம் அக்கினிப் பிழம்பாய் எரிக்கும். மழைக் காலத்தில் சதுப்புநிலக் காடுகள் போல் காட்சி அளிக்கும். நடக்க இயலாது. அது ஒரு சுண்ணாம்புக்கல் பாறைகள் நிறைந்த பாலைவனம். அவரது உடை ஒட்டக மயிர் உடை (தோல்உடை); அரையில் தோல் கச்சை; வெட்டுக் கிளியும், காட்டுத் தேனுமே அவரது உணவு. அங்கு மூவகை வெட்டுக்கிளிகள் உண்டு. ஒன்று ஓர் உயிரினம். இன்னொன்று ஒருவகை காட்டுக் கிழங்கு. மற்றொன்று அவரை போன்ற ஒருவகை விதை. இவை யாவுமே காட்டு வாசிகள் உண்ணும் கானக உணவு. அவருக்குக் கட்டிலோ, மெத்தையோ, பணியாளோ இல்லை. தரையே அவரது படுக்கை. எத்தனை அற்புதமான ஊழியர். இன்று முதல்வகைத் தொண்டர்கள் சிலர் விமானத்தில் பறந்து வருவர்; A/c அறையில் தான் தங்குவர்; சமையலுக்கு ஆளையே அழைத்து வருவர். இரண்டாம் வகைத் தொண்டர் சிலர் உல்லாச ஊர்தியில் உலா வருவர். ஆடம்பரமும் ஆரவாரமும் அவர்கள் உடைமை. மூன்றாம் வகைத் தொண்டர் இருசக்கர வாகனத்தில் விரைந்து வருவர். மற்றையோர் பேருந்தில் வருவர்; குழுவுடன் வருவர்; செலவுத்தொகை பட்ஜெட் தருவர். தன்னிகரற்ற திருத்தொண்டரின் தாழ்மையும் தியாகமும் எங்கே? ஒன்றுக்கும் உதவாத ஊழியர்களின் பெருமையும் ஆடம்பரமும் எங்கே? இந்தியாவில் எழுப்புதல் தோன்ற யோவான்கள் தோன்ற வேண்டும்.

5.4.2 இறைச் செய்தி

திருமுழுக்குநர் தமது பிறப்புக் குறித்தோ வாழ்வு குறித்தோ வரம் குறித்தோ வல்லமை குறித்தோ ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை. அவர் தமக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த இறைமைந்தன் இயேசுவையே அறிவித்தார்.

எனக்குப் பின்னால் ஒருவர் வருகிறார் அவர் எனக்கு முன் இருந்தவர், என்னிலும் பெரியவர், என்னிலும் வல்லவர். அவரது காலணியின் வாரை அவிழ்க்கும் அடிமையாய் இருப்பதற்குக்

கூட யான் தகுதி உடையவன் அல்லன். அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி. நான் தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். அவரோ தூய ஆவி என்னும் அக்கினியால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். அவரது கையில் ஒருவகைச் சுளகு உண்டு. அதைக் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார். கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரைச் சுட்டெரிப்பார்.

என்பன இயேசு பற்றி அவர் அறிவித்த அருட்செய்தி யாகும்.

டாக்டர் G.J. ஜாஃப்ரே (Jeffrey) என்பவர் யோவானின் இச்சீரிய பணியை ஒரு எடுத்துக்காட்டால் விளக்குகிறார். தொலை பேசித் துறையில் S.T.D. அமைப்பு இல்லாத அக்காலத்தில் அவர் தூர இடத்திலுள்ள நண்பர் ஒருவரோடு இணைப்புத் தொடர் பேச்சு (Trunk Call) மூலம் பேசத் தொலை பேசி அலுவலகம் செல்கிறார். அங்கே அமர்ந்து தொலைபேசி இணைப்புகளை இயக்கிக் கொண்டிருந்தவரிடம் தமது தொடர்புத் தொலைபேசி எண்ணைக் கொடுக்கிறார். இணைப்புக் கிடைக்கக் காலதாமதம் ஆகிறது. அப்போது அந்தப் பணியாளர் `நான் உங்களுக்கு இணைப்புத் தர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்' என்று அடிக்கடிக் கூறுகிறார். இணைப்புக் கிடைத்ததும் பணியாளரைக் காணவில்லை. ஜாஃப்ரே தம் நண்பரிடம் பேசுமாறு விட்டுவிட்டுத் தொலைபேசி நண்பர் சென்று விட்டார். யோவானும் இதைத்தான் செய்தார். மக்களை இறைவனிடம் தொடர்புபடுத்த முயன்றார்; தொடர்பு படுத்தி வெற்றி பெற்றார். அதனால் ஏற்பட்டதே எழுப்புதல். இன்று பல பெரிய இறைத்தொண்டர்கள் கூட மக்களை ஆண்டவரிடம் தொடர்பு படுத்துவதற்குப் பதிலாகத் தங்களிடம் தொடர்பு படுத்தவே பெரிதும் முயற்சிக்கின்றனர்; திட்டங்களைத் தீட்டுகின்றனர். அவர்களது திட்டங்கள் வெற்றி பெறலாம். எழுப்புதல் வெற்றிபெற வேண்டுமே?

5.4.3 மக்கட் செய்தி

யோவான் மக்களுக்குக் கொடுத்த செய்திகளில் இரண்டு குறிப்புகள் உள்ளன. ஒன்று இயேசு கிறிஸ்துவின் மகிமை. மற்றொன்று

மக்களின் நன்மை. மக்கள் நலனுக்காக அவர் கொடுத்த செய்தியின் மையப் பொருள்

மனமாற்றம் அடையுங்கள், விண்ணரசு நெருங்கி விட்டது (மத்தேயு 3:2)

என்பதாகும். ஆண்டவர் ஆபிரகாமை அழைத்து அவர் சந்ததியை இறைமக்கள் ஆக்கினார்; இறைமக்களை வழிநடத்த மோசே, யோசுவா போன்ற பெருந்தலைவர்களைத் தந்தார்; பின்னர் நீதித்தலைவர்கள்; அவர்களைத் தொடர்ந்து தீர்க்கர்கள்; இறுதியாக திருமைந்தன் இயேசுவையே கொடுத்தார். இயேசுவின் பலியால் உலகிற்கு மீட்பு அருளப்பட்டது. அந்த மீட்பை அறிவிக்க அருள் தொண்டர்கள், ஆயர் கள், போதகர்கள், தீர்க்கர்கள், நற்செய்தியாளர்கள் முதலானோர் பணி யாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். பணியின் பயன் என்ன? மக்கள் ஆன்ம மீட்பு பெற வேண்டும். மீட்பின் பயனாக விண்ணரசுக்குரிய பேறுகள் மற்றும் உடல்நலம், மனநலம், உலக வாழ்வுக்குரிய ஆசிகள் அனைத்தையும் பெற வேண்டுமே? அதற்கு என்ன செய்ய வேண்டும்? மக்கள் மனமாற்றம் பெற வேண்டும். மனமாற்றம் தான் மனித நலத்தின் மையம் ஆகும். மனமாற்றம் பெறாமல் மக்கள் இறையாசி எதுவும் பெற இயலாது. இந்தத் தத்துவத்தை யோவான் அருமையாக எடுத்துரைத்தார்.

பில்லிபீரே (1764-1868) இளமையிலேயே தந்தையை இழந்தார். 17 வயது வரை பாட்டனாரின் ஆதரவில் வளர்ந்தார். பிறகு சொந்த ஊரான கார்ன்வாலை விட்டுத் தெவன்சையர் என்ற இடத்திற்குச் சென்று துன்மார்க்கமாய் வாழ்ந்தார். குடியிலும் விபச்சாரத்திலும் விழுந்து கிடந்தார். ஒருநாள் இரவில் நண்பர்களுடன் சேர்ந்து நன்றாகக் குடித்து விட்டுத் தள்ளாடித் தள்ளாடி வீடு திரும்பியபோது வழியில் ஒரு குதிரையைக் கண்டார். அதன்மீது ஏறிச் சவாரி செய்ய முயன்றார். குதிரை அவரைக் கீழே தள்ளி விட்டு ஓடி விட்டது. அவர் அந்த விபத் தில் பெரும் ஆபத்திற்குள் ஆனார். ஒவ்வொரு இரவும் இவர் மனைவி மதுபானக் கடைக்குச் சென்று இவரை வீட்டிற்கு அழைத்து வருவாராம். இவர் ஜான் பனியன் எழுதிய 'பரலோக - நரகக் காட்சிகள்' என்ற நூலைக் கற்றுப், பாவத்தின் கொடுமையை உணர்ந்து மனம் மாறினார். இயேசுவைத் தம் மீட்பராகவும் தலைவராகவும் ஏற்றுக் கொண்டார். பின்னர் அவரது வாழ்வு முற்றிலும் மாறியது. அவர் ஒரு அருட்பணி

யாளர் ஆனார். அவர் சென்ற இடம் எல்லாம் மக்கள் மனந்திரும்பினர். இங்கிலாந்து முழுவதும் அவரது புகழ் பரவியது. பார்த்தீர்களா? மனமாற்றம் ஒரு மனிதனை எவ்விதமாய் உயர்த்துகிறது? மனந்திரும்புங்கள்.

5.5 இந்தியாவில் எழுப்புதல்

நூறு கோடி மக்களைக் கொண்ட இந்தியா உலகின் இரண்டாவது மக்கள் தொகையை உடைய பெரிய நாடு; உலகின் மிகப் பெரிய குடியரசு நாடு. இங்கு வாழும் மக்கள் பல இனத்தவர்; பல மொழியினர்; பல சமயத்தவர். கிறிஸ்தவரின் எண்ணிக்கை மூன்று விழுக்காடுக்கும் குறைவு என்று கூறப்படுகிறது. கிறிஸ்தவ சபைகளில் அன்பு இல்லை; அமைதி இல்லை; மீட்பு இல்லை; சாட்சி இல்லை. முதலில் கிறிஸ்தவர் நடுவில் பெரிய எழுப்புதல் தேவை. இந்நாட்டில் காணப்படும் ஆறரை இலட்சம் கிராமங்களில் ஆறு இலட்சம் கிராமங்களில் கிறிஸ்தவம் இல்லை; 1640 மொழிகளில் 1400 மொழிகளில் கிறிஸ்தவத் திருமறை இல்லை; 4600 சாதிகளில் 4000 சாதிகளில் கிறிஸ்தவர்களே இல்லை.

ஆயினும் 2000 மிஷனெரி சங்கங்கள் இந்தியாவில் இருக்கின்றன. 20,000 மிஷனெரிகள் அருட்பணி ஆற்றுகின்றனர். பல சபைகளில் செபக் குழுக்கள், விழிப்பு செபங்கள், உபவாச செபங்கள், நற்செய்திக் குழுக்கள், ஆவியின் நிறைவு பெற்ற விசுவாசிகளின் ஐக்கியங்கள் தோன்றி எழுப்புதல் பணியாற்றி வருகின்றன. இந்திய திருச்சபை வரலாற்றில் இதுவரை இல்லாத பெரிய எதிர்ப்புகள் கிறிஸ்தவத்திற்குத் தோன்றியுள்ளன. இந்தியா ஒரு சமயச் சார்பற்ற நாடு. ஆனால் இது இந்துக்களின் நாடு என்ற தவறான கொள்கையைப் பரப்பி அருட்பணியையும், மதமாற்றத்தையும் நிறுத்தவும், கிறிஸ்தவ வளர்ச்சியைத் தடுக்கவும், தீவிரமாய் எழுந்து செயல்பட்டு வரும் இந்துத்துவ அமைப்புகள் பெருகி வருகின்றன. இந்நாட்களில் கிறிஸ்தவரே! நீவிர் கிறிஸ்துவைப் போல மாறுவீராக! வாழ்வீராக! உம்மிலும் திருச்சபையிலும் நாட்டிலும் எழுப்புதல் ஏற்பட செபிப்பீராக! ஒன்றுபட்டுச் செயல்படுவீராக! நாட்டின் எழுப்புதல் நமது குறிக்கோள்.

5.6 முடிவுரை

அமெரிக்காவின் அருகில் பிட்காயின் என்ற மிகச்சிறிய தீவு ஒன்று உள்ளது. சுமார் 400 வருடங்களுக்கு முன்பு அந்தத் தீவினைக் கொள்ளையடிக்க ஒன்பது பேர் அடங்கிய ஒரு கொள்ளையர் கூட்டம்

கப்பலில் வந்து இறங்கியது. தீவில் வாழ்ந்த மொத்த மக்களே பதினேழு பேர்தான். அங்குக் கொள்ளையடிக்க ஒன்றும் இல்லை. கொள்ளையர் ஏமாற்றத்துடன் அங்குக் கிடைத்த மதுவைக் குடித்தனர். என்ன மாயமோ? குடித்த ஒன்பது பேரில் எட்டு பேர் இறந்தனர். அலெச்சாந்தர் ஸ்மித் என்ற ஒரே ஒருவர் மட்டும் உயிர் தப்பினார். அவர் அடைந்த கவலைக்கும் வடித்த கண்ணீருக்கும் அளவே இல்லை. அங்கு அவருக்குக் கொடுக்கப்பட்ட ஆங்கிலத் திருமறையே அவருக்கு ஆறுதல் தரும் துணைவன் ஆனது. திருமறையைப் படிப்பதே அவருக்குப் பொழுது போக்கு. திருமறை அவரது மனத்தைத் தொட்டது. வாழ்வை மாற்றியது. இயேசுவின் மீட்பு அவருக்கு உரிமையாயிற்று. அவர் தமது வாழ்வை அத்தீவில் அருட்பணியாற்ற அர்ப்பணித்தார். திருமறை கூறுவது போன்ற இறையரசை இத்தீவில் உருவாக்குவேன் என்று உறுதி கொண்டார்; உழைத்தார். அத்தீவு கிறிஸ்தவத் தீவாக மாறியது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இன்பப் பயணம் சென்ற ஒரு அமெரிக்க உல்லாசப் படகு திசைமாறி பிட்காயின் சென்றது. தீவில் இறங்கிய அமெரிக்கர் மதுவைத் தேடினர்; மாதுவை நாடினர்; சூதாட்டக் கழகங்களைக் காண ஓடினர். ஒன்றுமே அங்குக் கிடைக்கவில்லை. அவர்கள் அத்தீவினைச் சுற்றிப் பார்த்து ஒரு சிறிய அறிக்கையை அமெரிக்க அரசுக்கு அளித்தனர். அந்த அறிக்கையில்

பிட்காயின் தீவு ஒரு மாதிரி கிறிஸ்தவக் குடியிருப்பு. இங்குக்
குற்றவாளிகளே இல்லை; எனவே சிறைச்சாலை இல்லை
குழப்பங்களே இல்லை; எனவே காவல் நிலையம் இல்லை
குடிகாரரே இல்லை; எனவே மதுக்கடைகள் இல்லை
நோயாளிகளே இல்லை; எனவே மருத்துவ மணைகள் இல்லை
பயித்தியக்காரரே இல்லாததால் பயித்திய மையங்களும் இல்லை
இது இவ்வுலக இறையரசாகக் காட்சி அளிக்கிறது

என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன. இது அல்லவா முழு எழுப்புதல் பெற்ற நாடு. இந்தியாவும் உலகின் எல்லா நாடுகளும் இவ்வாறு மாறவேண்டுமே? அதற்காக அலெக்சாந்தர் சுமித் போன்ற திருத் தொண்டர்கள் தோன்றும் நாள் எந்நாளோ அந்நாளே இன்பநாள். எழுப்புதல் நாள்.

6. உலகில் எழுப்புதல்

6.1 முன்னுரை

தனிவாழ்வில் பிறக்கின்ற எழுப்புதலாகிய குழந்தை குடும்ப வாழ்வில் அமர்ந்து, திருச்சபையில் தவழ்ந்து, நாடுகளில் நடந்து, உலகெங்கும் ஓடியாடி விளையாட வேண்டுமே? அப்போதுதானே உலக எழுப்புதல் உதயமாகும்? உலகெங்கும் எழுப்புதல் ஏற்படும் போதுதான் இறையரசு இவ்வுலகில் தோன்றும். அப்போதுதான்

உமது அரசு வருக! (மத்தேயு 6:10)

என்ற இறைவேண்டல் நிறைவு பெறும். திருமறையிலும் வரலாற்றிலும் உலக எழுப்புதல் குறித்துக் கிடைக்கும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்துத் திறனாய்வு செய்வோம்.

6.2 உலக எழுப்புதல் வரலாறு

இன்று உலகெங்கும் எழுப்புதல் மலர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. தென் கொரியாவில் ஏற்பட்டிருக்கிற எழுப்புதலை யாவரும் அறிவோம். அந்த எழுப்புதலின் பயனாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 3 விழுக்காடாக இருந்த தென்கொரியக் கிறிஸ்தவர் எண்ணிக்கை இன்று 70 விழுக்காட்டைத் தாண்டிவிட்டது.

ஆப்பிரிக்காவில் பேராயர் ஃபெஸ்ட்ரோ கிவன்சர் (Festro Kivengere) மற்றும் மனாசே மங்கலியோ (Manasseh Mankeleiyo of Kenya) போன்ற நற்செய்தியாளர்கள் வாயிலாக இருபதாம் நூற்றாண்டில் மாபெரும் எழுப்புதல் தோன்றியுள்ளது. 19ஆம் நூற்றாண்டில்

பத்தாயிரத்துக்கு ஒரு கிறிஸ்தவர் இருந்த ஆப்பிரிக்கா கண்டத்தில் இன்று நூற்றுக்கு ஐம்பது கிறிஸ்தவர் என்ற நிலை உருவாகி உள்ளது. 1914இல் C.T. ஸ்டட்டின் அருட்பணித் தளமான பெல்கியன் காங்கோவில் ஆவியின் புயல் வீசியது. ஆவியால் நிறைந்த மக்கள் ஆடுவதும், பாடுவதும், விழுவதும், எழுவதும், பாவ அறிக்கை செய்து அழுவதும், இரட்சிப்பின் மகிழ்ச்சியால் சிரிப்பதும், குதிப்பதுமான காட்சி காண் போரை வியப்பில் ஆழ்த்தியது. ஆவியின் வெளிப்பாடுகள், தரிசனங்கள், தீர்க்கத் தரிசனங்கள், சுகமளித்தல் முதலான அசாதாரணச் செயல்கள் ஆப்பிரிக்காவை அசைத்தன. ஆப்பிரிக்க சுதேச சபை இயக்கம் (The African Indigenous Church Movement) ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான மக்களை ஆதாயம் செய்கிறது. நாள்தோறும் நாற்பதுக்கும் அதிகமான புதிய ஆலயங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன.

இலத்தீன் அமெரிக்காவில் கிறிஸ்தவர் எண்ணிக்கை 1900இல் ஐம்பதாயிரம். 1930இல் பத்து இலட்சம், 1940 இல் இருபது இலட்சம், 1950இல் ஐம்பது இலட்சம், 1960இல் ஒருகோடி, 1970இல் இரண்டு கோடி, இலத்தீன் அமெரிக்காவில் கடந்த நூற்றாண்டில் கிறிஸ்தவ வளர்ச்சி 20,000 மடங்கு. இன்று அங்கு யாவருமே கிறிஸ்தவர் ஆகி விட்டனர். அவர்கள் நடுவில் கிறிஸ்தவப் பொதுவுடைமை நிலவி வருகிறது. எனவே எல்லாரும் எல்லா நலமும் பெற்று வாழ்கின்றனர். இலத்தீன் அமெரிக்கா எழுப்புதல் வரலாற்றில் உலக நாடுகளுக் கெல்லாம் ஒரு வழிகாட்டியாய் அமைகிறது.

இன்று கம்யூனிசம் தோற்று விட்டது. பொதுவுடைமையின் இரும்புக் கோட்டைகள் தகர்ந்து விட்டன. இரஷ்யாவில் சுமார் 50% மக்கள் கிறிஸ்தவர்களே. போலந்தில் ஆயிரம் ஆயிரமான இளைஞர்கள் தூய ஆவியின் நிறைவுக்காகக் கூடிக் கூடி செபிக்கின்றனர். சீனா விலும் கிறிஸ்தவத் திருமறைக்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. அங்கு இலட்சக் கணக்கான சிறிய ஆலயங்கள் (House Churches) உள்ளன. சீனாவின் கிறிஸ்தவர் எண்ணிக்கை இந்தியாவை விட அதிகமே.

இந்தியாவில் கிறிஸ்தவர் எண்ணிக்கை குறைவாகக்

கணக்கிடப்பட்டாலும் அருட்பணி அமைப்புகளும், அருட் பணியாளர் களும், நற்செய்தித் தொண்டர்களும், நற்செய்திக் குழுக்களும், செபக்குழுக்களும், செபத்திருப்பணிகளும், அற்புதக் கூட்டங்களும் அதிகமாகக் காணப்படும் நாடு இந்தியாவே. அன்னை தெரசா பணியாற்றிய புண்ணிய பூமியும் நம்நாடே.

ஆயினும் மேலை நாடுகளில் கிறிஸ்தவப் பேராலயங்கள் மூடிக் கிடக்கின்றன. நாள்தோறும் 7600 மக்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விலகுகின்றனர். பெயர்க்கிறிஸ்தவரே பெருகி வருகின்றனர். பலர் எம்மதமும் சாராதவராகவும், சிலர் எம்மதமும் சம்மதம் என்போராக வும் உள்ளனர். கீழை நாட்டுத் தத்துவங்களும், சமயங்களும் அங்குப் பரவ ஆரம்பிக்கின்றன. இனிமேல் எங்களுக்கு நற்செய்தி அறிவிக்க இந்திய நற்செய்தியாளரே வரவேண்டும் என்று ஓர் ஐரோப்பியக் கால்வின் சபைப் போதகர் என்னிடம் கூறினார்.

6.3 உலக எழுப்புதலுக்காய் உயிர்த்தியாகம் செய்த உத்தமர்கள்

கிறிஸ்தவத் திருமறை இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகர் என்று கூறுகிறது (யோவான் 4:42, 1 யோவான் 4:14); அவரையே நற்செய்தி என்றும் உரைக்கிறது. அவரே தம் சீடரிடம்,

> *நீங்கள் உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள் (மாற்கு 16:15)*

என்று ஆணையிட்டார். முதல் நூற்றாண்டிலேயே இயேசுவின் அடியவர் உலகெங்கும் போய் நற்செய்தி அறிவித்தனர்; திருச்சபையை நாட்டினர்; உலக எழுப்புதல் திருப்பணியினைத் தொடங்கினர்.

இயேசுவின் சீடர்களில் தோமா என்பவர் இந்தியாவுக்கு வந்து கேரளாவில் ஏழு சபைகளை நிறுவி, சென்னை சென்று நற்செய்திப் பணியாற்றி, சின்னமலை என்ற இடத்தில் பகைவர்களின் ஈட்டியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். செலோத்தே சீமோன் ஆப்பிரிக்கா

சென்றார்; மோரித்தீனா தீவில் நற்செய்தி அறிவித்தார்; இறுதியில் இங்கிலாந்து சென்று அருட்பணி யாற்றினார் எனக் கூறப்படுகிறது. அல்பேயுவின் மைந்தனும், யாக்கோபின் சகோதரனும், ததேயு, லெபேயு என்னும் மறு பெயர்களைக் கொண்டவருமாகிய யூதா என்னும் அப்போஸ்தலன் மெசப்பொத்தோமியா நாடு சென்று நற்செய்தி அறிவித்தார்; அவரது பணியால் அநேகர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்; பெரிட்டோ என்ற இடத்தில் எதிர்ப்பாளர்கள் அவரது தலையை வெட்டி வீசினர். மாற்கு என்னும் நற்செய்தி நூலை எழுதிய நற்செய்தியாளர் மாற்கு எகிப்து சென்று இயேசுவை அறிவித்தார். ஏராளமானோர் இயேசுவை நம்பிக் கிறிஸ்தவர்களாயினர். ஆத்திரங்கொண்ட அந்நாட்டவர் அவரைக் கயிறுகளால் கட்டி நெருப்பில் போட்டு எரித்தனர். பர்தொலொமேயு என்பார் அல்பேனியா நாடு சென்று நற்செய்திப்பணி ஆற்றினார். அங்கு அவரைத் தடிகளால் அடித்தனர்; சிலுவையில் தூக்கினர்; இறுதியில் சிலுவையில் இருந்து இறக்கித் தோலை உரித்துத் தலையை வெட்டிக் கொன்றனர். அக்காட்சி கண்ட ஒரு கூட்டம் மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர். அந்திரேயா அகாயா நாட்டில் நற்செய்தி அறிவித்தார்; பலர் கிறிஸ்தவர்கள் ஆயினர். ஆத்திரம் கொண்ட நாட்டுத் தலைவன் அந்திரேயாவை வடிவான சிலுவையில் அறைந்தான். அந்திரேயா,

இயேசுவின் திருவுடலால் அலங்கரிக்கப் பட்ட சிலுவையே
நீ வாழ்க! உன்னை அடைய ஆவலோடு எதிர்பார்த்தேன்.
இன்று இப்பேறு பெற்றேன். பெருமகிழ்ச்சி யடைகிறேன்

என்று கூறி உயிர் விட்டார். பேதுரு அடியார் ரோமாபுரி சென்று நற்செய்தி அறிவித்தார். நீரோ அரசன் அவரைச் சிறையில் அடைத்து இறுதியில் தலைகீழாய்ச் சிலுவையில் அறைந்து கொன்றான்.

போலிகார்ப் என்னும் கிறிஸ்தவப் பெரியார் கி.பி.69ல் பிறந்தார்; இயேசுவின் அன்புச் சீடர் யோவானிடம் கல்வி கற்றார்; இறைத் தொண்டாற்றினார்; சிமிர்னாவின் பேராயர் ஆனார். இவர் கிறிஸ்தவ உலகின் புகழ் பெற்ற பேராயராக விளங்கினார். இயேசுவாகிய நற் செய்தியைப் பரப்பி ஆத்தும ஆதாயம் செய்வதே இவரது குறிக்கோள்.

அந்தோணி நஸ் டயஸ் (கி.பி 161-180) என்ற பேரரசன் இவரைக் கைது செய்யப் போர் வீரரை அனுப்பினான். வந்த போர் வீரர்களுக்கெல்லாம் உணவளித்து உபசரித்தார் போலிகார்ப். அவரை விசாரணை செய்த நீதிபதி உள்ளம் உருகியவராய்,

> *இயேசுவைப் பழித்து ஒருசொல் சொன்னால் இப்போதே விடுதலை யாவீர்*

என்றார். அதற்குப் போலிகார்ப்

> *நான் எண்பத்தாறு ஆண்டுகள் என் ஆண்டவரைச் சேவித்துள்ளேன். என் நேசர் எனக்கு வாரி வழங்கியவை எல்லாம் நன்மைகளே அன்றி வேறில்லை. அப்படியிருக்க என் ஆண்டவரை இப்பொழுது எப்படிப் பழிப்பேன் ?*

என்று விடையளித்தார். பகைவர் போலிகார்ப்பை நெருப்பில் போட்டனர். நெருப்பு அவரைச் சுற்றி ஒளிவட்டமாக நின்றது; எரிக்கவில்லை. இயேசுவின் மகிமையையும், போலிகார்ப்பின் பெருமையையும் உணர்ந்து மனமாற வேண்டிய பகைவர்கள் மிருகங்களாக மாறி அவரைக் குத்திக் கொன்றனர். இவ்விதமாய் நற்செய்திப் பணியில் இரத்தச் சாட்சியா னோர் ஏராளம்; ஏராளம்,

> *கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால் தனித்திருக்கும். செத்ததே யாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும் (யோவான் 12:24)*

என்ற இறைவாக்கின்படி இரத்தச் சாட்சிகள் விதையாகி கிறிஸ்தவர் களாகிய கனிகளைக் காய்க்கும் மரமாயினர். அதனால் கிறிஸ்தவம் இன்று உலகிலேயே மிக அதிக மக்கள் எண்ணிக்கை கொண்ட உலக முதன்மைச் சமயமாக ஒளி வீசி நிற்கிறது. அல்லேலூயா!

6.4 உலக எழுப்புதலின் முன்னோடி

உலகக் கிறிஸ்தவ எழுப்புதலின் முன்னோடியாகத் திருமறை யில் குறிக்கப் படுபவர் தூய பவுல் அடியார் ஆவார். இவர் சின்னாசியா

வின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்த சிலிசியா நாட்டின் பகுதியிலு நகரமாகிய தர்சுவில் பிறந்தவர். தர்சு நகர் ஆர்க்மிடிஸ், அன்டிபேட்டே (Antipater), அதெனொடோரஸ், நெஸ்டர் போன்ற பேரறிஞர்களைப் பெற்றெடுத்த பெருமை உடையது. இந்நகர் ஒரு பல்கலை நகர்; வணிக நகர்; வளம் கொழிக்கும் செல்வ நகர். இந்நகரில் பிறந்த பவுலும் பகுதியினர்; செல்வம் சிறந்த குடும்பத்தில் பிறந்தவர். இவர் சவுல் அரசன் தோன்றிய பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவரது பெயர் எபிரேய மொழியில் சவுல் என்றும் கிரேக்க மொழியில் பவுல் என்றும் குறிக்கப்படுகிறது. இவர் ஒரு யூதன்; ஒரு பரிசேயன். இவர் தந்தையாரும் ஒரு பரிசேயர் (அப் 23:6). இவர் ரோமைக் குடியுரிமை பெற்றவர் (அப் 22:27-28). எருசலேம் சென்று கமாலியேலின் காலடியில் அமர்ந்து கல்வி கற்றவர். கமாலியேல் ஒரு பரிசேயன்; நீதிச்சட்ட நிபுணர்; எல்லாராலும் மதிக்கப்பட்டவர் (அப் 5:34); நடமாடும் பல்கலைக் கழகம் என்று போற்றப் பெற்ற பேரறிஞர். பவுல் கமாலியேலிடம் நீதிச் சட்டத்தை நுட்பமாகக் கற்றார் (அப் 22:3).

6.4.1 பவுலின் மனமாற்றம்

பவுல் இயேசுவைச் சந்தித்ததாகவோ, அவரது அருளுரை கேட்டதாகவோ, அற்புதச் செயல்களைக் கண்டதாகவோ தெரியவில்லை. எனவே அவர் தொடக்கத்தில் இயேசுவை இறைமைந்தராக ஏற்றுக்கொள்ள மறுத்தார்; கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்; யூதத் தலைமைக் குருவிடம் கிறிஸ்தவர்களைக் கைது செய்யக் கடிதம் பெற்று எருசலேமிலிருந்து தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் பேரொளி ஒன்று அவரைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவரது கண்கள் ஒளி இழந்தன; காதுகள் சவுலே! சவுலே! நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய் என்ற குரலைக் கேட்டன. உதடுகள் ஆண்டவரே நீர் யார் ? என உச்சரித்தன.

> *நீ துன்புறுத்துகிற இயேசு நானே. முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் (அப் 9:5)*

என்று இயேசுவின் பதில் ஒலித்தது. பவுலின் உடலும், உள்ளமும் நடுங்கின. அவரது உயிர்,

ஆண்டவரே நான் செய்ய வேண்டும்? உமது திருவுளம் யாது? என உரைத்து ஆண்டவருக்குத் தன்னை அர்ப்பணித்தது. பவுல் பார்வை யற்றவராய் தமஸ்குவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நேர்த்தெருவில் யூதா என்பாரின் வீட்டில் மூன்று நாட்கள் உபவாசம் இருந்து செபித்துக் கொண்டே இருந்தார். ஆண்டவரால் அனுப்பப்பட்ட அனனியா என்பார் சென்று செபித்தபோது பவுல் பார்வையடைந்தார்; தூய ஆவியால் நிரப்பப்பட்டார்; திருமுழுக்குப் பெற்றார். அல்லேலூயா.

பவுலடியார் உடனடியாக ஆலயங்களில் சென்று இயேசுவே இறைமைந்தன் என்று போதிக்கத் தொடங்கினார். கேட்டவர்கள் அதிர்ச்சியும், வியப்பும் கொண்டனர். சிலர் அவரைக் கொலை செய்ய எண்ணினர். எனவே பவுல் எருசலேம் சென்று சீடர்களுக்குத் தமது காட்சியையும், சாட்சியையும் கூறினார்; பின்னர் ஆலயம் சென்று செபித்தார்; செபித்துக் கொண்டிருக்கும்போது தேவ தரிசனம் கண்டார். அந்நிலையில் மெய்ம் மறந்ததொரு பரவச நிலை அடைந்தார் என்று புதியமொழி பெயர்ப்புகள் கூறுகின்றன (அப். 22:17). அதனைக் குறித்து பவுலே இன்னோர் இடத்தில் மூன்றாம் வானம் வரை எடுக்கப்பட்டுப் பரதீசுக்குள் சென்றதாகக் குறிப்பிடுகிறார்(2 கொரிந்தியர் 12:2). அவர் கண்ட முதல் ஒளிக் காட்சியும், இந்தப் பேரின்ப வீட்டுக் (பரதீசு) காட்சியும் அவரைத் தன்னிகரற்ற திருத்தொண்டராக மாற்றின எனக் கருதுகிறேன். இக்காட்சிக்குப் பின்னர் பவுலார் எருசலேமில் கிரேக்க மொழி பேசும் யூதர்களிடம் வாதாடினார். அவர்களோ அவரைக் கொன்று விட முயன்றனர். ஆகவே அவர் அங்கிருந்து தர்சு சென்று விட்டார் (அப்.9:1-30).

பின்னர் பவுலடியார் அரேபியாவுக்குச் சென்று, தமஸ்குவுக்கு அருகான பாலைவனப் பகுதியில் மூன்றாண்டுகள் தங்கி செபத்திலும், தியானத்திலும், தேவ தரிசனத்திலும் வளர்ந்து, அருளாற்றலால் நிறைந்து அருட்பணிக்குத் தம்மைத் தகுதியாக்கினார். பிறகு எருசலேம் சென்று பேதுருவையும், யாக்கோபையும் சந்தித்தார் (கலாத்தியர் 1:17-19). பவுலும், பர்னபாவும் அந்தியோகியா சென்று ஓராண்டு சபையாருடன் தங்கித் திருப்பணி ஆற்றினர். முதன்முதல் அந்தியோகியாவிலே சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்று பெயர் பெற்றார்கள் (அப். 11:25-26).

6.4.2 பவுலடியாரின் அருட்பணி

அந்தியோகியா சபை உபவாசித்து செபித்து ஆவியானவரின் அருள் கட்டளைப்படிப் பவுலையும், பர்னபாவையும் அபிஷேகித்து, அருட்பணியாளர்களாக அனுப்பியது (அப்.13:1-3)

6.4.2.1 முதல் அருட்பணிப் பயணம்

பவுலடியார் மூன்று அருட்பணிப் பயணங்களை நிறைவேற்றி னார். முதல் பயணத்தில் ஆசியாக் கண்டத்தின் நாடுகளில் பர்னபாவின் துணையுடன் அருட்பணி ஆற்றினார். முதலில் அவர்கள் சீப்புரு தீவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்த சாலமி பட்டணம் சென்றனர். அங்கு யோவான் என்பவர் பவுலுடனும், பர்ன பாவுடன் இணைந்து கொண்டார். அங்கிருந்து சீப்புரு தீவின் அன்றைய ரோமைத் தலைநகரான பாப்போ பட்டணம் சென்றனர். இப்பட்டணம் அகுஸ்து ராயனால் கட்டப்பட்டதாகும். கிரேக்கர்களால் கட்டப்பட்ட பழைய பாப்போ பட்டணம் ஒன்றும் சீப்புரு தீவில் உண்டு. பாப்போ பட்டண ஆட்சியாள னாகிய செர்கியு பவுல், பவுலின் போதனையைக் கேட்க ஆவலாய் இருந்தான். ஆனால் பர்யேசு என்னும் மந்திரவாதி அவனைத் தடுத்துக் கொண்டிருந்தான். பவுலடியார் மந்திரவாதியைக் கடிந்துரைத்தார். பர்யேசு பார்வை இழந்தான். செர்கியு பவுல் கிறிஸ்தவன் ஆனான். பின்னர் சின்னாசியாவின் தென் பகுதியில் 75 மைல் நீளம் 30 மைல் அகலம் கொண்ட மிகச் சிறிய ரோமை மாநிலமாகிய பம்பிலியாவின் தலைநகரான பெர்கே வந்தனர். பவுலும் பர்னபாவும் அங்கிருந்து அதன் அருகில் அமைந்த பிசீதியா நாட்டின் சிறந்த நகரமான அந்தியோகியாவுக்கு வந்தனர். அங்குள்ள செப ஆலயத்தில் பவுல் நீண்டதோர் அருட்செய்தி வழங்கினார். செய்தி கேட்ட யூதர்கள் கிளர்ச்சி செய்து அவர்களை வெளியேற்றினர். அவர் கள் அங்கிருந்து அருகிலுள்ள இக்கோனியா பட்டணத்திற்கு வந்தார் கள். அங்கு அவர்கள் நற்செய்தி அறிவித்தனர். ஆண்டவர் அவர்கள் வழியாய் பல அற்புதச் செயல்களைச் செய்தார். ஆயினும் அங்கிருந்த யூதர்கள் அவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் திட்டமிட்டனர்.

எனவே அருள்தொண்டர்கள் இக்கோனியாவின் தென்மேற்கில் 25 மைல்களுக்கு அப்பாலிருந்த லீஸ்திராவுக்கு வந்தார்கள். லீஸ்திரா அகுஸ்து ராயன் காலத்தில் ஏற்பட்ட ரோமைக் குடியிருப்புப் பட்டணம் ஆகும். அங்கு வாழ்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் புகழ்மிக்க உயர்குடி மக்களாவர். தீமோத்தேயு லீஸ்திரா பட்டணத்தான் (அப். 16:1). அங்குப் பவுல் ஒரு பிறவிச் சப்பாணியைச் சுகமாக்கினார். அதனால் ஆச்சரியம் அடைந்த மக்கள் பவுலையும் பர்னபாவையும் மனித உருவில் வந்த தேவர்கள் என்று எண்ணினர். பர்னபாவை யூப்பித்தர் (ரோமைத் தேவர்களின் அரசன்) என்றும், பவுலை மெர்க்கூரி (The messanger of the gods - திருத்தூதுவர்) என்றும் சொல்லி அவர்களுக்குப் பலியிட வந்தனர். பவுலும், பர்னபாவும் தாங்கள் தெய்வம் அல்ல; மனிதர்களே என்று கூறிப் பலியைத் தடுத்தனர். பலியிட வந்த பாவிகள் இக்கோனியாவிலிருந்து வந்த யூதரின் தூண்டுதலால் பவுலைக் கல்லெறிந்தனர். பவுல் மரித்துப் போனார் என்று எண்ணி நகருக்கு வெளியே அவரை இழுத்துப் போட்டனர். பவுலும், பர்னபாவும் லீஸ்திராவை விட்டு, அதற்குப் பதினைந்து மைல் தென் கிழக்கில் இருந்த தெர்பை நகருக்கு வந்து நற்செய்தி அறிவித்தனர். அங்குப் பலர் கிறிஸ்தவர்களாயினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் காயு ஆவார் (அப். 20:4). முதல் பயணத்தைத் தெர்பையுடன் நிறுத்திக் கொண்டு பவுலும், பர்னபாவும் தாங்கள் நிறுவிய சபைகளைச் சந்தித்துப் போதித்து, மூப்பர்களை ஏற்படுத்தி, செபக்குழுக்களை நிறுவி எருசலேமுக்குத் திரும்பினர். பவுலின் முதல் மிஷனெரிப் பயணச் செய்திகளை அப்போஸ்தலர் 13, 14 ஆகிய அதிகாரங்களில் காண்கிறோம்.

6.4.2.2 இரண்டாம் அருட்பணிப் பயணம்

பவுல் தமது இரண்டாவது அருட்பணிப் பயணத்தைச் சீலாவுடன் தொடங்குகிறார். இப்பயணச் செய்திகளை அப்போஸ்தலர் 15-36 முதல் 18-22 வரையுள்ள பகுதியில் பார்க்கிறோம். பவுல் சீலாவுடன் முதலில் சீரியாவிலும் (சீடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதலில் தோன்றிய அந்தியோகியா அப். 11:26-அடங்கிய பகுதி) சிலிசியாவிலும் (சின்னாசியாவின் தென்கிழக்குப் பகுதி, ஏற்கனவே

தாம் நிறுவிய சபைகளுக்குச் சென்று அவைகளை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். பிறகு தெர்பைக்குச் சென்றார். அங்கிருந்து லீஸ்திராவுக்குப் போனார். லீஸ்திராவில் இருந்த தீமோத்தேயு என்னும் சீடனைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார். பவுல், சீலா, தீமோத்தேயு ஆகிய மூவரும் லீஸ்திராவில் இருந்து துரோவாவுக்கு வந்தனர். துரோவா பட்டணம் சின்னாசியாவின் வடமேற்கு எல்லையில் மீசியா மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது அகுஸ்துராயன் காலத்தில் காணப் பட்ட புகழ்பெற்ற ரோமைக் குடியிருப்பாகும்.

பவுல் துரோவாவில் ஓர் இரவில் ஒரு தரிசனம் கண்டு அதன்படி ஆசியாக் கண்டத்திலிருந்து ஐரோப்பாக் கண்டத்தில் மக்கெதோனியா என்னும் கிரேக்க நாட்டின் மாநகரான பிலிப்பிக்கு வந்தார். பிலிப்பி கிரேக்க மாமன்னன் அலெக்சாந்தரின் தந்தையாகிய பிலிப்புவால் கி.மு. 358 இல் அவரது பெயரால் அமைக்கப்பட்ட அழகிய நகரமாகும். அதனைச் சுற்றிலும் தங்கச் சுரங்கங்களும் தண்ணீர் ஊற்றுகளும் நிறைந்திருந்தன. அங்கு ஒரு மருத்துவப் பள்ளியும், மருத்துவக் கழகமும் இருந்தன. மருத்துவர் லூக்கா ஒரு பிலிப்பியன் ஆவார். அந்நகர் ரோமாபுரியையும், ஆசியாவையும் இணைக்கும் பெருவழியில் அமைந்துள்ளதால் புகழ் பெற்றது; இராணுவத் தளமாக விளங்கியது. அங்குச் சந்தை, கலையரங்கம், நூலகம், படிப்பகம், மேடை அமைந்த திறந்த வெளிச் சொற்பொழிவு அரங்கம், அழகிய வளைவு கொண்ட நுழைவாயில் முதலியன இருந்தன என்று புதைபொருள் ஆராய்ச்சி அறிவிக்கிறது. அகுஸ்துராயன் காலத்தில் இந்நகர் ரோமைக் குடியிருப்பாக மாறியது; பவுலின் காலத்தில் பிலிப்பி மாவட்டத் தலைநகராகத் திகழ்ந்தது. பவுலின் அருட்பணியால் ஐரோப்பாவில் முதல் கிறிஸ்தவத் திருச்சபை தோன்றிய நகர் இதுவேயாகும். இங்குள்ள முதல் கிறிஸ்தவர் லீதியாள் என்னும் பெண்மணி ஆவார். பவுல் பிலிப்பியில் குறிசொல்லும் ஆவி கொண்ட அடிமைப் பெண்ணை இயேசு கிறிஸ்துவின் பெயரால் சுகமாக்கினார். அவளை வைத்துக் குறி சொல்லிச் சம்பாதித்த பெரியவர்கள் பவுலையும், சீலாவையும் பிடித்து அடித்துச் சிறையில் அடைத்தனர். பவுலும், சீலாவும் செபித்துத் தேவனைத் துதித்துப் பாடியபோது சிறைச்சாலை அசைந்தது; பூமி அதிர்ந்தது; கதவுகள் திறந்தன; கட்டுகள் கழன்றன. சிறைக் காவலனும் குடும்பமும் இயேசுவை நம்பி இரட்சிக்கப்பட்டனர்.

பவுல் பிலிப்பியிலிருந்து தெசலோனிக்கே சென்று நற்செய்தி அறிவித்தார். ஐரோப்பாவின் இரண்டாவது திருச்சபை தெசலோனிக்கே பட்டணத்தில் உருவானது. பவுலும், சீலாவும் தெசலோனிக்கேயிலிருந்து பெரோயா பட்டணம் சென்றனர். அங்கும் திருச்சபை அமைந்தது. பிலப்பி, தெசலோனிக்கே, பெரோயா ஆகிய பட்டணங்கள் மக்கெதோனியா நாட்டைச் சார்ந்தவை ஆகும். பவுல் மக்கெதோனியாவிலிருந்து கிரேக்க நாட்டின் புகழ்பெற்ற தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் வாழ்ந்த ஏதென்சு (Athens - அத்தேனே) மாநகர் சென்றார். அங்குள்ள, மார்ஸ் மேடையில் நின்று பவுல் வழங்கிய "அறியப்படாத ஆண்டவருக்கு" என்ற அருட் செய்தி புகழ்மிக்க ஒன்றாகும். அதன் பயனாக அத்தேனே மாநகரில் கிறிஸ்தவத் திருச்சபை தோன்றியது. அத்தேனேயில் இருந்து பவுல் கொரிந்து மாநகருக்குச் சென்றார். கிரேக்க நாட்டின் புகழ்மிக்க மாநகர்கள் நான்கு. அவற்றுள் ஒன்று அத்தேனே. அடுத்தது கொரிந்து. ஜூலிய சீசர் கி.மு. 46-இல் இதனைத் திரும்பக் கட்டினார். இதன் அகன்ற வீதிகள், சந்தை வெளிகள், கோயில்கள், சிலைகள், கலைக் கூடங்கள், நீரூற்றுகள், பளிங்குக்கல் மேடைகள் யாவும் புகழ்மிக்கவை ஆகும். பவுல் இங்கு ஆக்கில்லா, பிலிஸ்கில்லா தம்பதியருடன் தங்கி, அவர்களுடன் கூடார வேலையும் செய்து அருட்பணியாற்றினார். இங்கும் ஒரு திருச்சபை உதயமானது. பவுல் கொரிந்துவில் ஒன்றரை வருடம் தங்கி நற்செய்தி அறிவித்தார். இவ்விதமாய் தமது ஐரோப்பிய அருட்பணியை முடித்துக்கொண்டு சின்னாசியாவின் தலைநகரான எபேசு பட்டணம் சென்று, அங்குள்ள செப ஆலயத்தில் நற்செய்தி அறிவித்தார். அங்கு நற்செய்திக்கு நல்ல வரவேற்பு இருந்தது. கூடுதலாகச் சிறிது காலம் தங்களுடன் தங்குமாறு பவுலை வேண்டினர். பவுலோ தாம் பண்டிகைக்காகக் கட்டாயம் எருசலேம் செல்ல வேண்டும் என்றும், விரைவில் எபேசுக்கு வருவதாகவும் கூறி விடை பெற்றார். அங்கிருந்து எருசலேம் வந்து, சபையைச் சந்தித்துப், பின்னர் அந்தியோகியா போய்ச் சேர்ந்தார். பவுலடியாரின் இரண்டாம் அருட்பணிப் பயணம் முடிய சுமார் மூன்று ஆண்டுகள் ஆயிற்று.

6.4.2.3 மூன்றாம் அருட்பணிப் பயணம்

பவுலடியாரின் மூன்றாம் அருட்பணிப் பயணச் செய்திகள்

அப்போஸ்தலர் 18:23 முதல் 21:16 வரை உள்ள திருவசனங்களில் கூறப்படுகின்றன. மூன்றாம் பயணத்தில் பவுலடியார் முதலில் கலாத்தியா நாட்டிற்கும், பின்னர் பிரிகியா நாட்டிற்கும் சென்று சீடர்களைச் சந்தித்து அவர்களைக் கிறிஸ்தவப் பற்றுதலில் உறுதிப்படுத்தினார்.

பின்னர் பவுலடியார் எபேசு பட்டணம் வந்தார். அங்குத் திருமுழுக்குநர் யோவானின் சீடர்களான பன்னிருவர் பவுலடியாரால் இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றுத் தூய ஆவியினால் நிரப்பப்பட்டனர். அவர் அங்கு மூன்று மாதம் செப ஆலயத்தில் நற்செய்தி அறிவித்தார்; இரண்டு ஆண்டு காலம் திரன்னு என்பாரின் கல்லூரி மண்டபத்தில் நாள்தோறும் நற்செய்தி கூறி வந்தார். அவரால் ஆண்டவர் அற்புதங்கள் நிகழ்த்தினார். அவரது கைக்குட்டைகளையும், துண்டுகளையும் நோயாளிகள் மீது போட்டனர். நோய்கள் நீங்கின; பொல்லாத ஆவிகளும் புறப்பட்டுப் போயின. பேயோட்டும் யூதரில் சிலரும், ஸ்கேவா என்னும் யூதத் தலைமைக் குருவின் மைந்தர் எழுவரும்

பவுல் அறிவிக்கும் இயேசுவின் பெயரால் ஆணையிடுகிறோம் போய்விடு என்றுகூறிப் பேயை விரட்டினர். பொல்லாத ஆவி அவர்களைப் பார்த்து இயேசுவை அறிவேன். பவுலையும் அறிவேன். நீங்கள் யார்?

என்று கூறி அவர்கள் மீது பாய்ந்து, அவர்களைத் தாக்கிக் கீழே தள்ளி, மேலே விழுந்து அழுத்தியது. அவர்கள் காயமுற்று ஆடைகளை இழந்து, நிர்வாணிகளாய் வீதியிலே ஓடினர். அதைக் கண்ட எபேசியர் அஞ்சி, ஆச்சரியமுற்று இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். மாய வித்தைக்காரர் பலர் தங்கள் வித்தை நூல்களை எல்லாம் கொண்டு வந்து எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள். அவற்றின் விலை ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு என்று கணக்கிட்டனர்.

எபேசு மக்களின் குல தெய்வம் தியானாள். அங்குள்ள குன்றின் மீது கலை நுட்பத்துடன் கட்டப்பட்ட தியானாள் கோயில் உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும். கோயிலின் அருகில் 24,000

மக்கள் அமரக் கூடிய கலையரங்கம் ஒன்றும் உள்ளது. தியானாள் கோயிலில் பூசை செய்து பிழைத்தவர்கள் ஆயிரக்கணக்கானோர் ஆவர். பல்வேறு பணிகளைச் செய்து பிழைத்தவர்கள் பல்லாயிரம் ஆவர். தியானாள் பெயரால் பல்வேறு செயல்களைச் செய்து செல்வம் திரட்டியோர் எண்ணற்றோர் ஆவர். தெமேத்திரியு என்னும் தட்டான் தியானாள் கோயிலைப் போல வெள்ளியினால் சிறிய கோயில்களைச் செய்து அவற்றை விற்றுச் செல்வம் திரட்டி வந்தான். பலருக்கு வேலையும் கொடுத்து வந்தான். பவுலின் அருட்பணியினால் தனது தொழிலுக்கும், வருவாய்க்கும் ஆபத்து வந்ததை அறிந்த அவன் பவுலுக்கு எதிராகப் பெரிய கலகத்தை ஏற்படுத்தினான். நகரத்தின் ஆணையாளர் முயற்சியால் கிளர்ச்சி ஓய்ந்து அமைதி ஏற்பட்டது. ஆனால் பவுல் எபேசுவை விட்டு வெளியேறினார்.

எபேசுவிலிருந்து வெளியே வந்த பவுல் மக்கெதோனியாவுக்குச் சென்று, அங்குள்ள சபைகளை எல்லாம் சந்தித்து, சீடர்களுக்கு அறிவுரை வழங்கி, அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்; அங்கிருந்து கிரேக்க நாட்டுக்குச் சென்றார்; அங்கு மூன்று மாதங்கள் தங்கி சபைகளைச் சந்தித்தார்; அங்கிருந்து மக்கெதோனியா நாடு வழியாகத் துரோவா பட்டணம் வந்தார். அங்கு ஏழு நாட்கள் தங்கினார். ஞாயிற்றுக்கிழமை இரவு திருவிருந்து வழிபாட்டில் பவுல் நீண்ட நேரம் அருட்செய்தி வழங்கினார். சன்னலில் உட்கார்ந்து செய்தி கேட்டுக் கொண்டிருந்த ஐத்திகு என்னும் வாலிபன் தூக்க மயக்கத்தால் மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்தான். உடனே பவுல் கீழே இறங்கி வந்து, அவன் மீது படுத்து, அவனை அணைத்து உயிர்பெறச் செய்தார்.

பவுல் தூரோவாவிலிருந்து ஆசோ பட்டணம் வழியாக மித்திலேனே பட்டணம் வந்தார். சில விசுவாசிகளும் அவருடன் கூட வந்தனர். பவுலும் விசுவாசிகளும் அங்கிருந்து மிலேத்து நகருக்கு வந்தனர். பவுல் மிலேத்துவிலிருந்து எபேசுக்கு ஆளனுப்பி, திருச் சபையின் மூப்பர்களை வரவழைத்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

நீங்கள் எல்லாரும் இனிமேல் என் முகத்தைப் பார்க்க மாட்டீர்கள்

என்று பிரியாவிடை கூறி செபித்தார். அவர்களெல்லாரும் பவுலின் கழுத்தைக் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கதறி அழுதனர்.

பவுல் மிலேத்துவில் இருந்து சீரிய நாட்டின் மிகப் புகழ் படைத்த தீரு துறைமுகத்துக்கு வந்தார். இது சீதோன் துறைமுகத்திலிருந்து 20 மைலுக்குத் தெற்கே அமைந்துள்ளது. வெண்கலம், வெள்ளி முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட கலைப்பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், சாயங்கள் சிறப்பாக ஊதா நிறச் சாயம் முதலியவற்றிற்கு தீரு பெயர் பெற்ற நகரமாகும். இங்குக் கப்பல் சரக்குகளை இறக்கிக் கொண்டிருந்தது. பவுலும் நண்பர்களும் ஏழு நாட்கள் அங்குத் தங்கினர்; தீருவின் சீடர்களை அழைத்துப் பேசினர். பவுல் எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று சீடர்கள் ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள். சீடர்களின் குடும்பத்தார் பவுலைத் தேடி வந்தனர்; கடற்கரையில் செபித்து விடை பெற்றனர்.

பவுலும், நண்பர்களும் தீருவிலிருந்து புறப்பட்டு பித்தொலோமாய் பட்டணம் வந்து ஒரு நாள் தங்கி சீடர்களைச் சந்தித்தனர். மறுநாள் செசரியா நகர் வந்தடைந்தனர். அங்குப் பிலிப்பு என்னும் நற்செய்தியாளர் வீட்டில் தங்கினர். பிலிப்பு உதவித் திருத்தொண்டர் (Deacons) எழுவருள் ஒருவர். அவருக்குத் திருமணமாகாத நான்கு கன்னிப் பெண்கள் இருந்தனர். அவர்கள் தீர்க்கத்தரிசனம் உரைத்து வந்தனர். பவுலும் நண்பர்களும் பல நாட்கள் அங்குத் தங்கி இருந்தனர். அப்போது அகபு என்னும் பெயர் கொண்ட இறைவாக்கினர் ஒருவர் யூதேயாவிலிருந்து வந்தார். அவர் பவுலின் இடைக்கச்சையை எடுத்துத் தமது கைகளையும் கால்களையும் கட்டிக் கொண்டு,

இந்தக் கச்சைக்குரியவரை எருசலேம் யூதர்கள் இவ்வாறு கட்டிப் பிற இனத்தாரிடம் ஒப்புக்கொடுப்பர். தூய ஆவியர் தாமே இப்படிக் கூறுகிறார்

என்றார். இவற்றைக் கேட்ட யாவரும் பவுலை எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். பவுல் அவர்களிடம்

நீங்கள் அழுது ஏன் என் உள்ளத்தை உடைக்கிறீர்கள் ? நான் ஆண்டவர் இயேசுவின் பெயருக்காக எருசலேமில் கட்டப் படுவதற்கு மட்டும் அல்ல; சாவதற்கும் தயார்

என்றார். பின்னர் செசரியாவிலிருந்து புறப்பட்டுப் பவுலும் நண்பர்களும் எருசலேம் சென்று சேர்ந்தனர்.

6.4.3 பவுலின் இறுதி நாட்கள்

பவுல் எருசலேம் வந்தபோது சகோதரர்கள் மகிழ்ச்சியுடன் அவரை ஏற்றுக் கொண்டார்கள். பவுல் தமது பயணத்தின் போது தேவன் பிற இனத்தவர் நடுவில் செய்தவற்றை விளக்கிக் கூறினார். யாவரும் தேவனை மகிமைப்படுத்தினர். பவுல் நண்பர்களுடன் தேவாலயத்தில் நிற்கிறதைக் கண்ட ஆசிய நாட்டு யூதர்கள் பவுலைப் பிடித்து, அவர் பிற இனத்தவரை ஆலயத்தினுள் அழைத்துச் சென்றார் என்று குற்றஞ் சாட்டிக். கொலை செய்ய முயன்றனர். அதனால் கலகம் ஏற்பட்டது. படை வீரரும் படைத் தலைவரும் ஓடி வந்து கலகத்தை நிறுத்தினர். பவுலைக் கைது செய்தனர். விசாரணைகள் தொடர்ந்தன. பவுல் ரோமைக் குடியுரிமை பெற்றவராதலால் அவரை ரோமாபுரிக்குக் கொண்டு சென்றனர். அரசன் விசாரணை செய்தான். பவுல் வீட்டுச் சிறைக் கைதியாக இரண்டு ஆண்டுகள் ரோமாபுரியில் இருந்தார். இறுதியில் அவரை ரோமாபுரிக் காட்டில் தலையை வெட்டிக் கொன்ற தாகக் கூறப்படுகிறது.

6.4.4 பவுலின் பண்புகள்

திருத்தூதுவர்களில் உலக எழுப்புதலின் முன்னோடியாக விளங்குபவர் பவுலடியார். அவரது வாழ்வு, வார்த்தை, செயல்கள் யாவும் நமக்கு மாதிரியாக அமைகின்றன.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல
நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருங்கள்
(1 கொரிந்தியர் 11:1)

என்று அவரே அறைகூவல் விடுக்கிறார்.

எனக்கு லாபமாய் இருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்று எண்ணி னேன். கிறிஸ்துவுக் காக நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற் றையும் குப்பையாகக் கருதுகிறேன் (பிலிப்பியர் 3:17, 11)

என்று அவரே கூறுகிறபடி தமது கல்வி, செல்வம், குலப்பெருமை, எண்ணம் எல்லாவற்றையும் இயேசுவுக்காகத் தியாகம் செய்தார். தூய்மையைக் காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (1 கொரிந்தியர் 9:27)

என்று கூறுகிறார். பவுல் யாரிடமும் இலவசமாய்ச் சாப்பிடவில்லை. கூடாரவேலை செய்தே சாப்பிட்டார் (2 தெசலோனிக்கேயர் 3:8). அவர் கொரிந்துவில் தங்கி அருட்பணியாற்றியபோது ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியருடன் கூடாரவேலை செய்தார். (அப். 18:3).

ஒருவருடைய வெள்ளியையோ, பொன்னையோ, ஆடையை யோ நான் விரும்பினதில்லை. என்னுடைய தேவைகளுக் காகவும் என்னுடன் இருந்தவர்களுடைய தேவைகளுக்காகவும் இந்தக் கைகளே வேலை செய்தன. (அப். 20:33-34).

என்று அவர் மார்தட்டிக் கைகளை உயர்த்திக் கூறும் வார்த்தைகள் நமது உள்ளத்தை உடைக்கின்றன அல்லவா ? அவரது அருட்பணியில் ஆண்டவருக்காகப் பட்ட பாடுகளைக் கூறுகிறார் கேளுங்கள்.

நான் அதிகமாய்ப் பாடு பட்டேன்.
பலமுறை சிறையில் அடைக்கப் பட்டேன்.
பலமுறை சாவின் வாயிலில் நின்றேன்.
ஐந்துமுறை யூதர்கள் சாட்டையால் 39 அடி அடித்தார்கள்.
மூன்றுமுறை தடியால் அடி பட்டேன்.
ஒருமுறை கல்லெறி பட்டேன்.
மூன்றுமுறை கப்பல் சிதைவில் சிக்கினேன்.
ஓர் இரவும், பகலும் ஆழ்கடலில் அல்லலுற்றேன்.
பயணங்கள் பல செய்தேன். அவற்றில்
ஆறுகளாலும் இடர்கள். ஆட்களாலும் இடர்கள்.
நாட்டிலும் இடர்கள். காட்டிலும் இடர்கள்.
கடலிலும் இடர்கள். போலித் தூதுவர்களாலும் இடர்கள்.
பலமுறை கண்விழித்தேன். பசிதாகமுற்றேன்.
பட்டினி கிடந்தேன். குளிரில் வாடினேன்.
ஆடையின்றி இருந்தேன்.
சபையை எண்ணிக் கண்ணீர் வடித்தேன்
(1கொரிந்தியர் 11:23-28)

அவரது வெற்றிக் கீதத்தையும் கேளுங்கள்.

நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இறுதி நாளில் நீதியுள்ள நீதிபதி அதை எனக்குத் தந்தருள்வார் (2 தீமோத்தேயு 4:7-8)

நாமெல்லாரும் இத்தகைய அருட்பணியாளராய் மாறினால் நாடு நலம் பெறும். நாம் மகிமை அடைவோம். உலகம் இறையரசாக மாறும். அதுதானே உலக எழுப்புதலின் உண்மை அடையாளம்.

6.5 முடிவுரை

இன்றும் உலக எழுப்புதல் பணியை நிறைவேற்ற ஆண்டவர் பல திருத்தொண்டர்களை எழுப்பிக் கொண்டே இருக்கிறார். இருபதாம் நூற்றாண்டின் தன்னிகரற்ற எழுப்புதல் திருத்தொண்டராகப் பணியாற்றி

இன்று நம் எல்லாருக்கும் வழிகாட்டியாய் விளங்குபவர் டாக்டர் பில்லி கிரகாம் ஆவார். மார்ட்டின் லுத்தர், ஜாண் வெஸ்லி, சார்ள்ஸ் வெஸ்லி, D.L. மூடி ஆகியோர் வரிசையில் ஆண்டவர் இன்று நமக்குத் தந்திருக்கும் எழுப்புதல் கருவியே டாக்டர் பில்லி கிரகாம் என்று பேரறிஞர் ஒருவர் கூறுகிறார். பில்லி கிரகாம் 1918 நவம்பர் 7 இல் அமெரிக்காவின் வட கரோலினா (North Carolina) பகுதியில் சார்லாட் (Charlotte) ஊரில் பிறந்தார். இவர் தந்தை ஒரு பால்பண்ணை விவசாயி. இவரது முன்னோர் ஸ்காட்லாந்து நாட்டை அடுத்த அயர்லாந்திலிருந்து அமெரிக்கா வந்து குடியேறிய திருச்சபை மூப்பர் குடும்பத்தினர் (Presbyterian Families) ஆவர். இவர் தமது பதினேழாவது வயதில் (1934 நவம்பர்) மொர்தெகாய் ஹாம் (Mordecai Ham) என்னும் ஆவியின் அருளாற்றல் மிக்க நற்செய்தித் தொண்டரின் நற்செய்தி கேட்டுத் தம்மை முற்றிலும் ஆண்டவருக்கு அர்ப்பணித்துப் புதுவாழ்வு பெற்றார். ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்ற பெருவிருப்பம் அவரது உள்ளத்தை அழுத்திக் கொண்டே இருந்தது. வீட்டன் (Wheaton) கல்லூரியில் படித்து 1943 இல் பட்டதாரி ஆனார். அதே ஆண்டில் அவர் விரும்பிய ரூத் பெல் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். ரூத் பெல்லின் தந்தை சீனாவில் அருட்பணி அறுவை சிகிச்சை நிபுணராகப் பணியாற்றிய டாக்டர் நெல்சன் பெல் ஆவார்.

1945 இல் பில்லி கிரகாம் கிறிஸ்துவுக்கு வாலிபர் (Youth for Christ) இயக்கத்தின் முழுநேரப் பணியாளர் ஆனார். அங்கு அவர் ஆற்றிய பணி அவருக்குக் கூட்டங்கள் நடத்தி அருட்செய்தி வழங்கும் பயிற்சியைத் தந்தது. பில்லி கிரகாம் 1949 இல் லாஸ் ஏஞ்சல்ஸ் என்னும் இடத்தில் ஒரு மாபெரும் கூடாரத்தில் (Tent) நடத்திய ஏழுவாரக் கூட்டங்கள் அமெரிக்க நாடு முழுவதும் அவரது புகழ் பரவ ஏதுவாயிற்று. 1954இல் இலண்டனில் நடைபெற்ற மாபெரும் கூட்டங்கள் பில்லியின் புகழை உலகறியச் செய்தன. மாமா டாக்டர் நெல்சன் பெல் 1956இல் Christianity Today (இன்றையக் கிறிஸ்தவம்) என்ற மாத இதழைத் தொடங்கினார். 1960இல் அதன் பெயர் Decision (தீர்மானம்) என்று மாற்றப்பட்டது. 1957இல் நியூயார்க் மாநகரில் நடைபெற்ற 16 வார எழுப்புதல் பணி பில்லியின் திருப்பணியை விரிவுபடுத்தியது. அதைத் தொடர்ந்து டெலிவிஷன் (T.V.) திருப்பணி தொடங்கியது.

அத்துடன் இன்று வானொலி, திரைப்படம் (film) முதலான திருப்பணிகள் தோன்றி கோடிக் கணக்கான மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கிறது. பில்லியின் திரைப்படங்களில் பல கிறிஸ்தவ சாட்சிகளின் வாழ்க்கை படமாக்கப் பட்டுப் பார்ப்போரைப் புதுவாழ்வுக்கு வழி நடத்துகிறது. இன்று பில்லி செல்லாத நாடே இல்லை. அவரது கூட்டங்களில் இலட்சக் கணக்கானோர் கூடுகின்றனர். ஆயிரக் கணக்கானோர் வாழ்வில் மாற்றம் பெறுகின்றனர். 1983, 1986, 2000 ஆகிய ஆண்டுகளில் பில்லி நடத்திய ஆம்ஸ்டர்டாம் உலக நற்செய்தியாளர் மாநாடுகள் உலகப் புகழ் பெற்றவை. பில்லியின் அறக்கட்டளை அவரது குடும்பத்தின் பிடியில் இல்லை. அவர் ஊதியம் பெறும் ஓர் ஊழியரே. கோடிக் கணக் கான ரூபாய் வரவு, செலவுத் திட்டம் கொண்ட அவரது அருட்பணி ஆச்சரியமானது. அது நமக்கெல்லாம் வழி காட்டுகிறது. திருப்பணியாளர் யாவரும் பில்லி கிரகாம் போல் பணியாற்றினால் உலகம் எங்கும் எழுப்புதல் ஏற்படுவது உறுதி.

7. எழுப்புதலில் எனது பங்கு

7.1 முன்னுரை

இதுவரை தனி வாழ்வில், குடும்ப வாழ்வில், திருச்சபையில், நாட்டில், உலகில் ஏற்பட வேண்டிய எழுப்புதல் குறித்து சிந்தித்தோம். அந்த எழுப்புதல் திருப்பணியில் எனது பங்கு என்ன? என்று என்றைக் காவது எண்ணிப் பார்த்தோமா? இதுவரை எண்ணிப் பார்க்காவிட்டால் இன்றைக்காவது எண்ணிப் பார்ப்போம். நாம் எப்பொழுதுமே பிறரது குறைகளையே எண்ணிப் பார்த்தும், பேசியும், எழுதியும் பழகி விட்டோம். பிறருக்கு அழகழகான ஆடைகளைத் தைத்து வழங்கும் தையற்காரர் சிலர் தங்களுக்கும் தங்கள் மனைவி மக்களுக்கும் ஆடை தைக்க இயலாதவராய் இருப்பது போலவும், இலட்சம், இலட்சமாகப் பணத்தை எண்ணி, எண்ணி வழங்கும் வங்கிக் காசாளர் சிலர் வீட்டில் திருமண வயதை எட்டி நிற்கும் மகளின் திருமணத்திற்கான பணத்தை எண்ணியே பாராமல் இருப்பது போலவும் நம்மில் சிலர் பிறரது எழுப்புதல் பற்றி ஏராளம் பேசி விட்டு நமது எழுப்புதல் பற்றி எண்ணாமலே இருக்கிறோம் அல்லவா ? இது சரியா ?

7.2 நம்மில் எழுப்புதல் வேண்டும்

ஊருக்கு ஊழியத்திற்கு வந்த ஒரு பெரிய ஊழியக்காரரிடம் வாலிபர் ஒருவர்,

ஐயா நாட்டில் எழுப்புதல் ஏற்பட நான் என்ன செய்ய வேண்டும்?

என்று கேட்டார். அதற்கு அந்த ஊழியர்,

தம்பி! நீ உன் வீட்டிற்குப் போய் அறைக்கதவை அடைத்துக் கொண்டு ஆண்டவரே! என்னில் எழுப்புதலை அனுப்பும் என்று அழுது செபி. எழுப்புதல் அக்கினி உன்னில் இறங்குவது வரை செபித்துக் கொண்டே இரு. என்றைக்கு உன்னில் எழுப்புதல் ஏற்படுகிறதோ அன்றைக்கு நாட்டின் எழுப்புதல் தொடங்கி விடும்

என்று பதிலளித்தார். உண்மைதானே ? நாம் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று இரட்சிக்கப் பட்டிருக்கிறோமோ ? ஆண்டவரை நமது உள்ளத்தில் ஏற்றிருக்கிறோமோ ? நமது வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணித்திருக்கிறோமோ? ஆவியின் நிறைவைப் பெற்றிருக்கிறோமோ? தூய வாழ்வுக்குச் சாட்சியாய் வாழ்கிறோமா ? திருச்சபையின் வளர்ச்சிக்காகத் திருப்பணியும், ஆத்தும ஆதாயத்திற்காக அருட் பணியும் ஆற்றுகிறோமோ? நமது வாழ்வு பிறருக்கு வழிகாட்டுவதாய் அமைந்துள்ளதா ? முதலில் நமது வாழ்வில் எழுப்புதல் தீ எழும்ப வேண்டும்.

7.3 நாம் எழுப்புதல் பணி ஆற்ற வேண்டும்

எழுப்புதல் வாழ்வைப் பெற்ற யாரும் சும்மா இருக்க இயலாது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பர். ஆவிக்குரிய வாழ்வில் இறை இன்பம் பெற்றோர் அந்த இன்பத்தை அடுத்தவருக்கு அறிவிக்கவும் அள்ளிக் கொடுக்கவும் துடிப்பர். எனது கல்லூரிப் பணியின் தொடக்கக் காலத்தில் எனக்குத் தொல்லை கொடுத்த மாணவர் ஒருவர் கல்லூரி வாழ்விலேயே இரட்சிக்கப்பட்டார்; ஆவியின் நிறைவு பெற்றார். அதன்பிறகு கல்லூரியிலும் ஊரிலும் அவர் ஆற்றிய அருட்பணிகள் அற்புதமானவை. இன்றும் அவர் ஆண்டவருக்குச் சாட்சியாய் வாழ்கிறார்.

அருட்செய்தி அறிவித்தல் எனது கட்டாயக் கடமை (1கொரி. 9:16)

என்று கூறுவது யார் ? பவுலடியார். அவர் ஆற்றிய அருட்பணியினை முந்திய இயலில் கண்டோம். நாம் ஆற்றும் அருட்பணி என்ன? ஞாயிறு பள்ளி ஆசிரியர் பணி ஒரு அருட்பணியே. செபக்குழுக்களை அமைத்த

லும், கூடி செபித்தலும் அருட்பணியே. நோயுற்றோர், ஆறுதல் அற்றோர், அமைதியற்றோர், துன்புற்றோர் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவதும், செபிப்பதும் அருட்பணியே. அருள் தொண்டர்களுக்காக செபிப்பதும், கொடுப்பதும் அருட்பணியே. அருட்பணிகளின் வளர்ச்சிக்காக உழைப்பதும், உதவி செய்வதும் அருட்பணியே. யாவற்றிற்கும் மேலாக அவிசுவாசிகளை விசுவாசிகள் ஆக்குவதும், இயேசுவை அறியாதவர்களுக்கு இயேசுவை அறிவிப்பதும், அவர்களை இரட்சிப்பிற்குள் வழிநடத்துவதும் ஒப்பற்ற அருட்பணிகள் ஆகும்.

அதோனிராம் ஜட்சன் (1788-1850) என்ற அமெரிக்கர் பிரௌன் பல்கலைக் கழகத்தில் பயின்று 19வது வயதில் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுப் பட்டதாரியானார். ஆனால் வேதத்தை நம்பாத, ஆண்டவரை அறியாத நாத்திகர் போல் வாழ்ந்தார். நியூயார்க் நகர நாடகக் கம்பெனி ஒன்றில் சேர்ந்தார். ஒரு நாள் இரவில் தன்னுடைய கல்லூரி நண்பன் மரணத்தோடு போராடிப் பயந்து நடுங்குவதையும், அவலக் குரலில் அழுது துடிப்பதையும் கண்டு கண்ணீர் வடித்தார். அந்த மனிதனைப் போல நானும் மரிப்பதற்கு ஆயத்தமாய் இல்லாத அவிசுவாசியாய் இருக்கிறேனே என்று எண்ணி ஏங்கினார். செபிக்க ஆரம்பித்தார். ஆண்டவரை நம்பி அவரைப் பற்றிக் கொள்ள விரும்பினார். ஆறு வாரங்கள் உடைந்த உள்ளத்தோடு ஆண்டவரைத் தேடினார்; இரட்சிக்கப்பட்டார். நான்கு நண்பர்களுடன் சேர்ந்து செபித்தார். ஆவியின் நிறைவைப் பெற்றார். அவரும் அவர் மனைவி ஆன் ஹாசல்டின் அம்மையாரும் அருட்பணியாளர்களாகப் பர்மா சென்று 33 ஆண்டுகள் அங்குப் பணியாற்றினர். அதன் பயனாகப் பர்மாவில் 63 ஆலயங்கள் எழும்பின. 163 அருட்பணியாளர்களும், 7000 விசுவாசிகளும் தோன்றினர். ஜட்சன் தமது வாழ்வில் எழுப்புதல் ஏற்பட்டதால் அருட்பணியாளர் ஆனார். அவரால் பர்மாவில் எழுப்புதல் ஏற்பட்டது. எழுப்புதல் வாழ்வு பெற்ற நாமும் கட்டாயம் எழுப்புதல் பணி ஆற்ற வேண்டும்.

7.4 எழுப்புதல் பணியில் எனது பங்கு

எழுப்புதல் பணியில் எனது பங்கு என்ன? என்று எண்ணிப்

பார்ப்போம். இன்று எழுப்புதல் பணியாற்றும் தொண்டர்களின் பணி சிறக்க வாரி, வாரி வழங்கும் நண்பர்கள் சிலர் இருக்கின்றனர். நான் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒரு ஆலோசனை. சிலர் தங்கள் காணிக்கைகளை எல்லாம் ஒரு குறிப்பிட்ட ஊழியருக்கே கொடுக்கின்றனர். அவர்களே தங்கள் நண்பர்கள், உறவினர்கள் என்று எண்ணுகின்றனர். பரவாயில்லை. ஆனால் மற்றவர்களையும், மற்ற ஊழியர்களையும் நேசிக்கலாம் அல்லவா ? வாய்ப்பு ஏற்படும் போதாவது கொடுக்கலாம் அல்லவா ? நான் ஒரு பட்டணத்திற்கு மூன்று நாள் நற்செய்திக் கூட்டங்கள் நடத்தச் சென்றேன். அங்கு எனக்குப் பழக்கமான பணக்கார நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் எனக்கு நெருக்கமான ஒரு பெரிய ஊழியக்காரரின் பெரிய விசிறி. நான் ஊழியத்திற்கு வருகிறேன் என்று தொலைபேசியில் அவரிடம் பேசி னேன். ஊழியம் நடைபெற்ற இடம் அவர் வாழும் பட்டணமே. சபை அவரது விசுவாசம் சார்ந்த சபையே. உண்மையைச் சொல்லுகிறேன். அவர் ஒருநாள் கூடக் கூட்டத்திற்கு வரவில்லை. இதுவரை வர இயலா மைக்கு வருத்தம் தெரிவிக்கவும் இல்லை. இது சரியா? யானும் புத்தகங் கள் வெளியிட்டு எழுப்புதல் ஏற்படுத்த விரும்புகிறேன். பணத்திற்கு என்ன செய்வது? பணம் படைத்தவர்கள் உதவினால் அடியேன் எழுத் தின் வாயிலாய் எழுப்புதல் பணி நிறைவேற்ற இயலுமே! எழுப்புதல் பணிக்காக நமது தசமபாகக் காணிக்கையில் பெரும் பகுதியைக் கொடுக்க வேண்டும்.

எழுப்புதல் பணியின் வெற்றி இயேசுவின் கரத்தில் இருக்கிறது. அந்த வெற்றிக் கனியைப் பறிக்கப் பயன்படும் ஆற்றல் மிக்கக் கருவி செபம் ஒன்றேயாகும். செபிக்கும்போது தடைகள் நீங்குகின்றன; சாத்தான் தோற்றுப் போகிறான்; ஆத்துமாக்கள் அசைகின்றன; ஆத்தும ஆதாயம் ஏற்படுகிறது; அற்புதங்கள் நடைபெறுகின்றன. ஆதித் திருச்சபையும் இன்றைய கொரியா சபையும் செபத்தின் வெற்றிக்குச் சான்றுகளாகின்றன. பிராமணக் குடும்பத்தில் பிறந்து இயேசுவின் அடியாளாக மாறிய பண்டித இராமா பாய் அம்மையார் வாழ்விழந்த பெண்கள் நடுவில் அருட்பணியாற்றினார். புனேயில் அதற்கான இல்லங்களை அமைத்தார். அந்த மலைப் பகுதியில் தண்ணீர் கிடைப்பது அரிதாக இருந்தது. 45 அடி ஆழத்தில் பெரியதோர் கிணறு வெட்டினார். தண்ணீர் சொட்டவில்லை. கண்ணீர் வடித்த இராமாபாய் அம்மையார்

ஒரு நாள் இரவில் ஒரு அரிக்கன் விளக்கையும் வேத புத்தகத்தையும் கையில் ஏந்திக் கொண்டு கிணற்றுள் இறங்கினார். இயேசுவே யான் உமக்கே ஊழியம் செய்கிறேன்; இல்லம் அமைத்திருக்கிறேன்: தண்ணீர் இல்லாவிட்டால் என்ன செய்வேன் ? எனக்குக் கட்டாயம் தண்ணீர் வேண்டும். நீர் தண்ணீர் தருவேன் என்றால் தான் வெளியேறுவேன் என்று பலமணிநேரம் ஊக்கமாய் செபித்தார். ஆண்டவர் தண்ணீர் கொடுப்பதாக வாக்களித்தார். எனவே இராமாபாய் நம்பிக்கையுடன் வெளியேறினார். படுக்கை அறை சென்று அமைதியாக அயர்ந்த நித் திரை செய்தார். திடீரென ஒரு வெடியின் சத்தம் கேட்டது. கிணற்றிலே பாறைகளுக்கிடையில் இருந்த வெடி மருந்து வெடித்துப் பெரியதோர் கல்லை வெளியே வீசியது. தண்ணீர் பொங்கி வந்தது. கிணறு நிறைந்தது. அந்தக் கிணறு இன்றும் இருக்கிறது. எழுப்புதல் பணி சிறக்க நாம் செபிக்க வேண்டும்.

எழுப்புதல் பணிக்காக நாம் உழைக்க வேண்டும். சோர்ந்து போகாமல் உழைக்க வேண்டும். எழுப்புதல் பணியின் வெற்றி நமது விசுவாசத்தின் ஆவலைப் பொறுத்தது என்று அறிஞர் ஒருவர் அறிவிக் கிறார். ஜாண் நாக்ஸ் என்ற இளைஞன் ஆண்டவர் ஸ்காட்லாந்து நாட்டை இரட்சிப்பார் என்ற விசுவாசத்தோடு நாட்டின் படத்தைத் தொங்கவிட்டு அதன் முன்னால் முழங்கால் படி இட்டு செபித்தான். ஆண்டவர் நாட்டை இரட்சிப்பேன் என்று வாக்குத் தராவிட்டால் சாப்பிடமாட்டேன் என்றான். ஆண்டவர் செபத்தைக் கேட்டார். அவன் ஸ்காட்லாந்தின் எழுப்புதலுக்காக அயராது உழைத் தான். இன்று ஸ்காட்லாந்து நாடு கிறிஸ்தவ நாடு ஆயிற்று.

நமது தரம் குறைந்த பணிகள் அதாவது நமது அருட் செய்தி கள், வானொலி, தொலைக்காட்சி, இசைத்தட்டுச் செய்திகள், ஞாயிறு ஆராதனைச் செய்திகள் தரம் வாய்ந்தவையாக இல்லை. இவை தரம் வாய்ந்தவையாக அமைய நமது அறிவையும், முயற்சியையும் பயன்படுத் தலாமே என்று லியோனார்டு ரேவன் ஹில் என்பார் கூறுகிறார். இதுவும் ஒரு எழுப்புதல் பணியேயாகும். அதே அறிஞர் சிலர் தங்கள் தன்னலத் திற்காக எழுப்புதல் பணியை வியாபாரமாக்கி விட்டனர். அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று வேண்டுதல் செய்கிறார். நாம் என்ன செய்ய

வேண்டும்? செபக்கூட்டம், உபவாச செபம், நற்செய்திக் கூட்டம் முதலனா சபைத் திருப்பணி மற்றும் அருட்பணி முதலியவற்றால் எழுப்புதல் பணி சிறக்க உழைப்போமாக!. ஆண்டவர் நமக்குத் தந்திருக்கிற வரங்கள், வல்லமைகள், செல்வங்கள், வாய்ப்புகள், வசதிகள் இவைகளுக்கேற்ப எழுப்புதல்பணி ஆற்றுவோமாக!

7.5 முடிவுரை

தென் கொரியாவில் பழுதடைந்த ஓர் ஆலயத்தைப் பழுது பார்க்கப் பணம் தேவை என்று ஆலயப் போதகர் அறிவிப்புக் கொடுத்தார். அந்தச் சபையின் எழுப்புதலுக்காக ஏங்கிய ஓர் ஏழை விசுவாசி தம்மிடம் பணம் இல்லாததால் தமது கண்களில் ஒன்றினை விற்று அதில் கிடைக்கும் பணத்தை ஆலயத்திற்குக் கொடுக்கத் தீர்மானித்தார். ஒருநாள் அதற்குரிய மருத்துவமனை சென்று டாக்டரிடம் தமது ஒரு கண்ணை எடுத்துக் கொண்டு அதற்குரிய விலையைக் கொடுக்குமாறு வேண்டினார். அதிர்ச்சியடைந்த டாக்டர் கண்ணை விற்கும் காரணத்தைக் கேட்டார். ஆலயம் புதுப்பிக்க என்று விசுவாசி கண்ணீரோடே பதிலளித்தார். உள்ளம் உடைந்த டாக்டர் பணம் கொடுத்தார். ஆனால் கண்ணை வாங்கவில்லை. இச்செய்தி கேட்ட சபையார் எல்லாரும் உற்சாகமாய்க் கொடுத்து ஆலயத்தை அழகாகக் கட்டி முடித்தனர். இது தென் கொரியாவின் நிலை. இந்திய விசுவாசியே! இந்தியாவின் எழுப்புதலுக்கு நீவிர் கொடுக்கும் விலை என்ன ?

பயன்பட்ட நூல்கள்

1. கிறிஸ்தவத் திருமறை - தமிழ் மற்றும் ஆங்கிலம் பல்வேறு மொழியாக்கங்கள்
2. விவிலிய இறையியல் செஞ்சொல் கட்டுரைக்கோவை - இசுரேல் செல்வநாயகம் பதிப்பாசிரியர்
3. தீர்க்கத்தரிசனத்தில் தற்காலமும் வருங்காலமும் - டான் இ. ஸ்டான்டன்
4. எழுப்புதல் தாமதிப்பது ஏன்? - லியோனார்டு ரேவன் ஹில்
5. எழுப்புதல் எப்பொழுது ? - J. சாம் ஜெபத்துரை
6. சிலுவை வீரர் - தியோடர் வில்லியம்ஸ்
7. உத்தம பக்தர்கள் - கில்கிரைஸ்ட் லாசன்
8. மறைந்தும் பேசும் வீரர்கள் - தியாகராஜ் ஆனந்தா
9. The Daily Study Bible - William Barclay
10. The New Chain Reference Bible- Thompson
11. The New compact Bible Dictionary - T. Alton Bryant (Editor)
12. The New Bible Commentary - Revised - D. Guthrie, J.A. Motyer, A.M. Stibbs, D.J. Wiseman, Editors
13. A commentary on the Holy Bible- The Rev. J.R. Dummelow
14. Revival - Winkie Pratney (Editor)
15. Great Leaders of the Christian Church - John D. Woodbridge (Editor)
16. Lights and shades of Christendom Volume I & II - H. Pakenham - Walsh

ஆசிரியரின் பிறநூல்கள்

1. இயேசுவைப் பாருங்கள்
2. வேத நாயக சாத்திரியார் படைப்புகள் - ஒரு திறனாய்வு
3. இந்திய ஏக இரட்சகர் சபை - ஓர் ஆய்வு

நூல் கிடைக்கும் இடங்கள்

1. சுதன் பதிப்பகம், நாகர்கோவில் 4
2. திருமண்டல புத்தக நிலையம், நாகர்கோவில் 1
3. திருமண்டல புத்தக நிலையம், பாளையங்கோட்டை 2
4. பைபிள் கிளப், பாளையங்கோட்டை 2
5. **The Word of Christ - Madurai 2**
6. **C.L.S.** புத்தக மையங்கள்
7. கோமளா ஸ்டோர்ஸ், நாகர்கோவில் 1
8. அசிசி புத்தக நிலையம், நாகர்கோவில் 1

8\. மற்றும் கிறிஸ்தவ புத்தக நிலையங்கள்

டாக்டர் ஏ. பாக்கியமணி

கிறிஸ்தவத்தமிழ் உலகிற்குத் தேவன் தந்த ஒப்பற்ற செயல்வீரர் சிலரில் டாக்டர் ஏ. பாக்கியமணி அவர்களும் ஒருவர். இவரது டாக்டர் பட்ட ஆராய்ச்சி நூலினையும், வானொலி, தொலைக்காட்சிச் சொற்பொழிவு களையும் தமிழ் உலகம் போற்றிப் புகழ்கிறது.

நாசரேத்தில் கல்லூரிப் பேராசிரியராக இருந்த காலையே தம் மாணவர்கள் இயேசு கிறிஸ்துவை மீட்பராகவும், தலைவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என முழுமூச்சாய்ச் செயலாற்றிய இவரது சீரிய பணியை மறக்க முடியாது. எம் பேராசிரியர் என்றும், என் ஆவிக்குரிய தலைவர் என்றும், தந்தை என்றும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களால் கூறப்படும் புகழுக்கு உரியவர் இவர். இவர்தம் ஊழியத்தால் அருட்பணியாளர்களாய் ஆகியோர் அநேகர். போதகர்களாகப் புறப்பட்டோர் பலர். கிறிஸ்துவால் புதுவாழ்வு பெற்றோர் எண்ணற்றோர்.

ஆரம்பத்தில் நெல்லை - குமரி மாவட்டங்களையே தம் ஊழிய எல்லையாகக் கொண்ட இவர் குறுகிய காலத்திலேயே தமிழ்நாடு முழுவதும் பயன்படும் ஓர் ஒப்பற்ற நற்செய்தியாளராக மாறினார். டாக்டர் பில்லிகிரகாம் அவர்கள் 1986ஆம் ஆண்டு ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் நடத்திய அகில உலக நற்செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் உலகம் இவரை ஒரு நற்செய்தியாளராகக் கண்டு கொண்டது.

தமிழில் புலமை, திருமறையில் தெளிவு, நற்செய்திப் பணியில் நாட்டம், பழகுவதற்கு இனிமை, பகிர்ந்து கொள்வதற்குத் தாய்மைப் பண்பு கொண்டவர் இவர். அருளுரை ஆற்றும் போது பவுலின் புலமையையும், பேதுருவின் வல்லமையையும், யோவானின் பாசத்தையும், தானியேலின் தைரியத்தையும் இவரில் காணமுடிகிறது. இவர் கடந்த கால் நூற்றாண்டு காலமாக எம் உயிரனைய நண்பராய், உற்ற உடன்பிறப்பாய், உதவிடும் பெரியவராய், ஊக்கமளிக்கும் உயரிய பண்பாளராய், இடித்துரைக்கும் இனியவராய் இருந்தமைக்கு என் தேவனை உளமாரப் போற்றுகிறேன். என்னைப் போன்று எளிமையாய்த் திருப்பணியைத் தொடங்கியோர் சிலர் அண்ணனது ஆலோசனையாலும், ஆதரவாலும் இன்று உலகப் புகழ் பெற்ற நற்செய்தித் தொண்டர்களாய்த் திகழ்கின்றோம்.

கல்லூரிப் பணியில் ஓய்வு பெற்ற போதும் கர்த்தரின் பணியில் ஓய்வு பெறாது உழைக்கும் இவரால் எண்ணற்ற சபைகள் எழுப்புதல் பெறுகின் றன. தவித்திடும் உள்ளங்கள் தைரியம் பெறுகின்றன. வேதனைப் படுவோர் விடுதலை பெறுகின்றனர். அல்லேலூயா!

சகோதரர் **அருள்தாஸ் ஞானமுத்து**

இயக்குநர்

ஆட்டுக்குட்டியானவரின் அகல்வெளி நற்செய்திப்பணி பயிற்சி மையம்

பசுமலை, மதுரை 625 004